# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

Issue No: 2 of 2003
ISBN 1173-7255

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email**: bala@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*இந்த இதழோடு திருமறைத்தீபம் முதல் முறையாக ஸ்ரீ லங்கா வாசகர்களுக்காக மட்டும் ஸ்ரீ லங்காவில் அச்சிடப்பட்டு அனுப்பப்படும். ஸ்ரீ லங்கா வாசகர்கள் திருமறைத்தீபத்தை கொழும்பு நகரில் இருக்கும் கிருபை இலக்கிய நிர்வாகிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பத்திரிகையை விநியோகிக்க ஆவலுடன் முன்வந்துள்ள கிருபை இலக்கிய நிர்வாகத்தை சேர்ந்தவர்களுக்கு எமது நன்றி! இவர்களுடைய ஊழியத்தின் மூலம் பத்திரிகை மேலும் பலரைச் சென்றடைந்து, ஸ்ரீ லங்கா தேசத்தில் சீர்திருத்த சத்தியங்களைப் பலரும் அறிந்து கொள்வதன் மூலம் கர்த்தருக்கு மகிமை சேர ஜெபிப்போம்.*

*சீர்திருத்த விசுவாசம் என்ற பெயரில் ஓர் புதிய நூலை வெளியிட்டுள்ளோம். இதை எங்கு, எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கான விபரங்களை இந்த இதழில் (பக்கம் 28) பார்க்கலாம். சீர்திருத்த விசுவாசத்தைப் பற்றிப் பலரும் அறிந்து கொள்ளவும், சீர்திருத்த விசுவாசத்தைப் பின்பற்றுபவர்கள் சரியான வழியில் போகவும் இந்த நூல் உதவும் என்று நம்புகிறேன்.*

*பக்தி இயக்கத்தைப் பற்றி (Pietism) நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களோ, நான் அறியேன். ஆனால், கிறிஸ்தவ வரலாற்றில் 17-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தலைதூக்கிய இந்த இயக்கத்தின் மூலம் பின்னால் கிறிஸ்தவத்திற்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்பதை விளக்கும் ஓர் ஆக்கத்தை இந்த இதழில் வாசிக்கலாம். இன்று நம் மத்தியில் காணப்படும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்களுக்கும், பல புதிய சுவிசேஷ இயக்கக் கோட்பாடுகளுக்கும் இந்த பக்தி இயக்கத்தின் போதனைகள் முன்னோடியாக இருந்திருக்கின்றன என்பதை அறியாதவர்கள் அநேகர். இந்த ஆக்கம் வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.*

*கடந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருந்தாக பலர் எழுதியிருந்தீர்கள். இந்த இதழில் வரும் ஆக்கங்களும் உங்களை சிந்திக்க வைத்து, உங்களுடைய ஆத்மீக வாழ்க்கையின் வளர்ச்சிக்கு துணை செய்யும் என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமுமில்லை. கர்த்தரின் ஆசீர்வாதம் உங்களெல்லோருடனும் தொடர்ந்திருக்கட்டும்.*

*- ஆசிரியர்*

# எது பிரசங்கம்?



ஏன் பிரசங்கம்? என்ற கேள்விக்கு கடந்த இதழில் பதில் அளித்திருந்தோம். ஏனைய எல்லா செய்திப்பரவல் சாதனங்களையும்விட பிரசங்கமே கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்காக தெய்வீக வழிநடத்தலின்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. பிரசங்கத்தை ஆசீர்வதிப்பதுபோல் கர்த்தர் வேறு எதையும் ஆசீர்வதிப்பதில்லை என்பதில் நான் உறுதியானதும், அசைக்க முடியாததுமான நம்பிக்கை வைத்திருக்கிறேன். இது மாம்ச ரீதியிலான நம்பிக்கையல்ல. வேதம் நமக்குப் போதிக்கும் சத்தியத்தின் அடிப்படையிலான நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை நெஞ்சில் கொண்டிராத எந்தப்பிரசங்கியும் பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தன்னுடைய ஊழியத்தில் காணமுடியாது என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன்.

இனி, எது பிரசங்கம்? என்ற கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டும். பிரசங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்தக் கேள்வியைக் கேட்பதன் மூலம் ஆராயப்போகிறோம். அதாவது பிரசங்கத்தின் உள்ளடக்கம் எப்படி இருக்க வேண்டும் என்று பார்ப்பதல்ல இந்த ஆக்கத்தின் நோக்கம். அதை நாம் இன்னொரு ஆக்கத்தில் பார்க்கப்போகிறோம். ஆனால் பிரசங்கி, ஏனைய செய்திப் பரவல் முறைகளையெல்லாம் தவிர்த்து பிரசங்கத்தைப் பயன்படுத்தி பிரசங்கம் செய்யும்போது அது எத்தகைய தன்மைகளைக் கொண்ட பிரசங்கமாக இருக்க வேண்டும் என்று பார்ப்பதுதான் இந்த ஆக்கத்தின் நோக்கம். பேசுகிற பேச்செல்லாம் பிரசங்கமாகிவிடாது என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. பிரசங்கம் என்ற பெயரில் உப்புச்சப்பில்லாத பேச்சுக்களையும், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வரட்டு வாதங்களையும, இருதயத்தைப் பாதிக்கும் வல்லமையே இல்லாத செய்திகளையும் வாராவாரம் கேட்டுவர வேண்டிய நிலை இன்று அநேக தமிழ் ஆத்துமாக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதுபற்றி எத்தனையோ தடவை இந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த ஆக்கத்தில் மெய்யான பிரசங்கத்தில் நாம் எப்போதும் அடையாளங் காணக்கூடிய அவசியமான சில குணாதிசயங்களை ஆராய்வோம்.

## எல்லாவகைப் பேச்சுக்களும் பிரசங்கமாகிவிடாது

பேச்சுக்களில் பலவகைகள் இருக்கின்றன. கல்லூரிகளிலும், பலகலைக்கழகங்களிலும், இறையியல் கல்லூரிகளிலும் கொடுக்கப்படும் விரிவுரைகளும் பேச்சுதான். கதாகாலாட்சேபம் செய்வதும் ஒருவகைப் பேச்சுத்தான். ஒரு விஷயத்தைக்குறித்து தர்க்கம் செய்வதும் பேச்சோடு தொடர்புடையதுதான். ஆனால், இவையெல்லாம் பிரசங்கமாகிவிட முடியாது. மற்ற எல்லாவற்றையும் விட பிரசங்கம் வித்தியாசமானது. உதாரணத்திற்கு விரிவுரையை எடுத்துக் கொள்வோம். பிரசங்கத்தில் இருக்கும் சில தன்மைகளை நாம் விரிவுரையில் பார்க்க முடியாது. விரிவுரை பிரசங்கத்தைவிட அடிப்படையிலேயே வேறுபாடுடையது. விரிவுரையாளன் ஒரு விஷயத்தைக்குறித்துப் பேசும்போது அந்த விஷயத்தைப்பற்றிய அத்தனை உண்மைகளையும் சேகரித்து விளக்குகிறான். அப்படி விளக்கமளிப்பது மட்டுமே அவனுடைய குறிக்கோளாக இருக்கின்றது. ஆனால் பிரசங்கி ஒரு விஷயத்தை விளக்குவதோடு மட்டும் நின்று

விடமுடியாது. அந்த விஷயத்தை ஆணித்தரமாக விளக்கி, அதை ஏன் நாம் விசுவாசிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி, அதை நாம் நிச்சயமாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதும் பிரசங்கி-யினுடைய இலட்சியமாக இருக்கும். ஒரு விரிவுரையாளன் இதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. விஷயத்தை ஆதாரத்தோடு சொல்லுவதுடன் அவனுடைய கடமை முடிந்துவிடுகிறது. ஆனால், பிரசங்கி அதற்கு மேல் ஒரு படி போய் சொல்லப்பட்ட விஷயத்தின்படி நாம் நடக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறான். பிரசங்கியால் இதைச் செய்யாமல் இருக்க முடியாது. இது அவனுடைய உயிர் மூச்சு. இதைச் செய்யாதவன் பிரசங்கியாகவும் இருக்க முடியாது. இது பிரசங்கத்திற்கும் விரிவுரைக்குமிடையில் உள்ள ஒரு முக்கிய-மான வேறுபாடு. இந்த வேறுபாட்டைத்தான் ஏனைய பேச்சு வகைகளுக்கும் பிரசங்கத்திற்கும் இடையில் பார்க்கிறோம். ஏனைய பேச்சுவகைகள் செய்ய முடியாத காரியத்தை, அதாவது மனிதனின் இருதயத்தைத் தொட்டுத் தட்டி எழுப்பி கர்த்தரின் வார்த்தையின்படி நடக்க வேண்டும் என்று குரல் எழுப்ப பிரசங்கத்தால்தான் முடியும்.

## பிரசங்கம் வேதபூர்வமான அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்

மெய்யான பிரசங்கம் அதிகாரம் கொண்ட பிரசங்கமாக இருக்கும். பல பிரசங்கிகளின் பிரசங்கத்தில் இன்று வேத அதிகாரத்தையே பார்க்க முடியாது. அதிகாரம் என்று நான் கூறும்போது ஆத்துமாக்களை ஆட்டி வைக்கப்பார்க்கும் மாம்சத்துக்குரிய அதிகாரத்தொனியைக் குறிப்பிடவில்லை. அதையே இன்று பல பிரசங்கிகளிடம் பார்க்கிறோம். நான் கூறும் அதிகாரம் பிரசங்கி செய்யும் பிரசங்கத்திலும், அந்தப்பிரசங்கத்தின் மூலம் விளக்கப்படும் சத்தியத்திலும் காணப்படும். புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் பரிசேயர்கள் பிரசங்கித்தபோது அங்கே மாம்சத்துக்குரிய அதிகாரத்தையே யூத மக்கள் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டபோது "அவர் வேதபாரகரைப்-போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடி-யால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று வேதம் கூறுகிறது. இது மாம்சத்துக்குரிய அதிகாரத்திற்கும், மெய்யான பிரசங்கத்தில் இருக்கும் அதிகாரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது.

பிரசங்கங்கள் வேத அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டுமானால் பிரசங்கி பின்வரும் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

### அ. வேதத்தின் அதிகாரத்தில் பிரசங்கிக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

பிரசங்கம் அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டுமானால் முதலில் பிரசங்கிக்கு வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். வேதத்தை நம்பாத பலர் இன்று பிரங்கம் செய்வதில் ஈடுபட்டிருப்பது கிறிஸ்தவத்திற்கே ஏற்பட்டிருக்கும் இழுக்காகும். இவர்கள் வேதத்தை தங்களுடைய சுயநலத்திற்-காகப் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர அதை நம்பிப் போதிக்கும் பணியைச் செய்யவில்லை. வேதம் தனக்குள் சர்வ அதிகாரத்தையும் கொண்ட-தாக இருக்கிறது. அது கர்த்தருடைய தெளிவான வார்த்தை. அதில் தவறு-களுக்கோ, குறைபாடுகளுக்கோ, குழப்பங்களுக்கோ எந்தவிதமான இடமும் இல்லை. அது கர்த்தருடைய நிறைவான சித்தத்தை மக்களுக்கு வெளிப்-படுத்துகின்ற, கர்த்தரால் நமக்களிக்கப்பட்டுள்ள ஒரே நூல். வேதத்திற்கு புறத்தில் இருந்து எதன் மூலமும், எவர் மூலமும் கர்த்தருடைய சித்தத்தை

இன்று நாம் அறிந்து கொள்ள முடியாது. இத்தகைய தன்மைகளை வேதம் தனக்குள் கொண்டிருப்பதால்தான் அது அதிகாரமுள்ள கர்த்தருடைய வார்த்தையாக இருக்கின்றது. அதனால்தான் வேதம் அதிகாரம் கொண்டது என்று சொல்லுகிறோம். இந்த சத்தியங்களை முழு இருதயத்தோடும் நம்புபவ-னாக பிரசங்கி இருக்க வேண்டும். வேதத்தின் இந்த அரிய தன்மைகளை நம்பாதவர்கள் வேதத்தை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். வேதத்தில் குறைகாணுபவர்களும், வேதத்தின் மூலம் மட்டுமே கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதை விசுவாசிக்க மறுக்கிறவர்களும் அதை அதிகாரம் கொண்ட கர்த்தருடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்வதில்லை. கர்த்தரின் (வேதத்தின்) அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மெய்யான பிரசங்கிகளாக இருக்க முடியாது. அவர்களால் அதிகாரத்தோடு பிரசங்கிக்கவும் முடியாது. அவர்களுடைய பிரசங்கம் மாம்சத்திற்குரியதாக மட்டுமே இருக்கும்.

வேதத்தோடு எதையும் சேர்க்கவும்கூடாது. அதிலிருந்து எதையும் அகற்றவும் கூடாது என்று இயேசு சொன்னார். சாத்தான் தன்னை சோதித்தபோது அந்த வேதத்தை மட்டும் பயன்படுத்தியே சாத்தானை அவர் விரட்டியடித்தார். தனக்குள்ளாக பூரணத்துவத்தையும், சகல வல்லமையையும் அவர் கொண்-டிருந்தபோதும், இயேசு வேதத்தை அதிகாரத்துடன் பயன்படுத்தி சாத்தானை மடக்கி விரட்டியதை எண்ணிப்பாருங்கள். அன்று இயேசு அற்புதங்களை நாடவில்லை, அதிசயங்களைச் செய்யவில்லை. வேதத்தை மட்டுமே வாளாகப் பயன்படுத்தி (எபேசியர் 6) வேதத்துரோகியாகிய பிசாசை அடக்கினார். இயேசு வேதத்தின் பூரணத்துவத்தையும், அதிகாரத்தையும் விசுவாசித்தார். அதனால்-தான் அவருடைய பிரசங்கங்கள் மக்கள் ஆச்சரியமடையும்படி அதிகாரத்துடன் இருந்தன. எதிரிகளை அசைத்தன. பலருடைய கண்களைத் திறந்தன. வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை வைத்துப் பிரசங்கித்த இயேசுவே நமக்கெல்லாம் முன்னோடி. அவரைப்போல வேதத்தின் அதிகாரத்தில் நமக்கு நம்பிக்கை இருந்தால்தான் நமது பிரசங்கங்கள் அதிகாரத்துடன் இருக்க முடியும்.

ஒரு பிரசங்கி மாம்சத்திற்குரிய வல்லமையோடு வேதத்தை பிரசங்கித்து விடலாம். யூதாசு திருடனாகவும், இயேசுவைக் காட்டிக் கொடுத்தவனாகவும் இருந்தபோதும் தன் வாழ்நாளில் பிரசங்கமும் செய்திருக்கிறான். இப்படிப் பலரை வேதத்தில் இருந்து நாம் உதாரணம் காட்ட முடியும். ஆகவே, பிரசங்கிக்-கிறவர்களெல்லாம் வேதத்தைப் பயன்படுத்திக் கொள்வதால் அவர்களுடைய பிரசங்கம் அதிகாரமுள்ளதாக இருந்துவிடாது. வேதத்தின் புனிதத்தன்மைகளை உணர்ந்து, அறிந்து, விசுவாசித்துப் பிரசங்கிக்கிறவர்கள் மட்டுமே ஆவிக்குரிய அதிகாரத்தோடு வேதத்தை பிரசங்கிக்க முடியும்.

## ஆ. பிரசங்கி வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை வைத்து பிரசங்கத்தை தயாரிக்க வேண்டும்.

வேதம் சகல அதிகாரமும் கொண்டது என்று விசுவாசிப்பவர்கள் வேத போதனைகளை ஏனோதானோவென்று பிரசங்கிக்கப் பயப்படுவார்கள். அவர்-கள் சர்வ அதிகாரம் கொண்ட கர்த்தரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு, தேவபயத்துடன் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்பவர்களாக இருப்பார்-கள். ஏனெனில் பிரசங்கி மாம்சத்துக்குரிய செய்தியைப் பிரசங்கிக்காமல் தெய்வீக செய்தியைப் பிரசங்கிக்கிறான் என்று மார்டின் லொயிட் ஜோன்ஸ் சொல்லியிருக்கிறார். அந்த தெய்வீக செய்தியின் மூலம் கர்த்தருடைய அதிகாரத்தை ஆத்துமாக்கள் உணர வேண்டுமானால், பிரசங்கி பிரசங்கத்தை

ஆவியின் துணையோடு கவனத்தோடு தயாரிப்பான்.

பிரசங்கம் அதிகாரமுள்ளதாக இருக்க வேண்டுமானால் அது பூரணமாக வேத அடிப்படையில் அமைந்ததாக, எந்தவித மனித ஞானத்திற்கும் இடமளிக்காததாக இருக்க வேண்டும். ஆகவே, பிரசங்கி விளையாட்டுத்தனமாக இருந்து நேரத்தை வீணாக்காமல், தன்னுடைய சிந்தனையில் சடுதியாக உதிக்கும் வேத சம்பந்தமற்ற பேச்சுகளைப் பேசுவதைத் தவிர்க்குமுகமாக பிரசங்கத்தைக் கவனத்தோடும், ஜெபத்தோடும், ஆராய்ந்து தயாரிப்பது அவசியம். கர்த்தருடைய வசனத்தின் அதிகாரத்தை ஆவியின் வல்லமையால் ஆத்துமாக்கள் உணர வேண்டுமென்ற ஒரே இலட்சியத்தோடு இரவும் பகலும் பாடுபட்டுப் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்பவர்களே மெய்யான பிரசங்கிகள். இப்படிப் படித்துத் தயாரித்துப் பிரசங்கித்ததால்தான் லூதரையும், கல்வினையும், பியூரிட்டன் பெரியோர்களையும், ஸ்பர்ஜனையும் அவர்கள் இறந்த பின்பும் உலகம் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பிரசங்கங்களும் இன்றும் அழிவற்றதாக பலருக்கும் பயனளித்து வருகின்றன.

**இ. பிரசங்கத்தை தேவ பயம் கலந்த அதிகாரத்துடன் பிரசங்கிக்க வேண்டும்.**

வேதத்தை தேவபயத்தோடு படித்து பிரசங்கத்தைத் தயாரித்தபின் நமது கடமை முடிந்துவிடுவதில்லை. அதை ஆத்துமாக்களுக்குமுன் பிரசங்கிக்க வேண்டிய பெருங்கடமை இருக்கிறது. பிரசங்கத்தைத் தயாரித்தபோது பிரசங்கிகள் எடுத்த அத்தனை அக்கறையையும் பிரசங்கம் செய்யும்போதும் காட்ட வேண்டும். பிரசங்க மேடையில் ஒரு நடிகனைப்போல நடிக்கவோ (பெனிஹின்), கோமாளியைப்போல கூத்தாடவோ (பாதர் பேர்க்மன்) முயற்சி செய்யக்கூடாது. பிரசங்கம் செய்யும்போது மாம்சத்துக்குரிய எண்ணங்கள் எதுவும் நமது மனத்தை அலைக்கழிக்காமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கர்த்தருக்குப் பயந்து, ஆத்துமாக்களின் ஆத்தும வளர்ச்சியை மட்டுமே மனதில் கொண்டு பிரசங்கிக்க வேண்டும். பிரசங்கத்தை நன்றாகத் தயாரித்துவிட்டேன் நிச்சயம் நமக்கு இன்று பாராட்டு கிடைக்கும் என்றெல்லாம் சிந்தனை போகக்கூடாது. மிகவும் மனத்தாழ்மையுடனும், ஆத்ம சுத்தத்துடனும் பிரசங்கம் செய்ய வேண்டும். பிரசங்கத்தை கர்த்தருடைய அதிகாரத்துடன் பிரசங்கிப்பதற்கு இத்தகைய மனநிலை பிரசங்கிக்கு அவசியம்.

இன்று அநேக பிரசங்கிகள் பிரசங்க மேடை மூலம் ஆத்துமாக்களை மாம்சத்துக்குரிய விதமாக அதிகாரம் செய்து வருகிறார்கள். இத்தகைய பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களுக்கு கர்த்தரின் அதிகாரமோ, வேதத்தின் அதிகாரமோ தெரிவதில்லை. பிரசங்கியின் மாம்சத்துக்குரிய பலவீனமான அதிகாரம் மட்டுமே தெரிகிறது. இதனாலேயே இன்று நம்மத்தியில் பிரசங்கத்தின் வல்லமையைப் பார்க்க முடியாதிருக்கின்றது. எப்போதும் பிரசங்கத்தின் மூலம் கர்த்தருடைய வல்லமை மட்டுமே ஆத்துமாக்களுக்கு புலப்பட வேண்டும். அந்த நோக்கத்துடன்தான் மெய்யான பிரசங்கி எப்போதும் பிரசங்கத்தைக் கவனத்தோடு தயாரிப்பான். இனி அந்தப் பிரசங்கத்தைக் கர்த்தரின் மகிமைக்காக, அவருடைய அதிகாரம் மட்டுமே தெரியக்கூடியதாக பிரசங்கிக்க வேண்டியது அவனுடைய கடமை. இதற்காக பிரசங்கி அதிகமாக நெடுநேரம் ஜெபத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது. என்னுடைய பிரசங்கத்தால் கர்த்தர் உயர வேண்டும், அவர் மகிமை அடைய வேண்டும் என்ற ஜெபத்தோடு பிரசங்கிகள் பிரசங்க மேடைக்குப் போக வேண்டும். அதனால்தான் தேவ பயமுள்ள பிரசங்கிகள் எத்தனை வருடங்கள் பிரசங்கித்திருந்த போதும், ஒவ்வொரு முறை-

யும் பிரசங்க மேடையில் ஏறும்போது முதல் முறையாகப் பிரசங்கிக்கப் போவது போன்ற உணர்வோடு போவார்கள். அத்தகைய மனநிலை இல்லாதவர்களால் மெய்யான தேவபயத்தோடும், கர்த்தரின் அதிகாரத்தோடும் பிரசங்கிக்க முடியாது.

## பிரசங்கத்தை ஆவியின் பலத்துடன் பிரசங்கிக்க வேண்டும்

பவுல் அப்போஸ்தலன் தெசலோனியருக்கு எழுதிய நிருபத்தில் தன்னுடைய பிரசங்கத்தைப் பற்றி விளக்கும்போது, "எங்கள் சுவிசேஷசம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது" என்று விளக்குகிறார். பவுல் தன்னுடைய பிரசங்கத்தை தேவ பயத்தோடு படித்தும், ஆராய்ந்தும் தயாரித்ததோடும், அதனை அதிகாரத்தோடு பிரசங்கித்ததோடும் தன்னுடைய கடமை முடிந்து-விட்டதாகக் கருதவில்லை. அந்தப்பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் காண வேண்டும் என்றும் பவுல் எதிர்பார்த்திருந்தார். பவுலினுடைய பிரசங்-கத்தில் ஆவியின் வல்லமை இருந்ததென்பதை பவுல் மட்டும் அல்ல, தெச-லோனிக்கேயரும் உணர்ந்திருந்தனர். ஆவியின் வல்லமையை அவர்கள் அனுப-வித்திருந்தனர். இதன் மூலம் பிரசங்கங்கள் எப்போதும் ஆவியின் வல்லமை-யோடு கொடுக்கப்பட வேண்டும் என்ற சத்தியத்தை அறிந்து கொள்கிறோம். இதையே பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலும் பின்வருமாறு கூறுகிறார்: "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள-தாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது."

ஆவியின் வல்லமையைப் பற்றிய பல தவறான, வேதத்திற்கு விரோதமான எண்ணங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கின்றன. அந்தத் தவறான எண்ணங்களுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. பெந்தகொஸ்தே அல்லது கெரிஸ்மெட்டிக் பிரசங்கி ஆத்துமாக்கள் அந்நிய பாஷை பேசுவதும், நிலத்தில் திடீரென மயங்கி விழுவதும், உணர்ச்சி வசப்பட்டுத் துள்ளிக்குதிப்பதுமே தனது பிரசங்கம் ஆவியின் பெலத்தைப் பெற்றிருப்பதற்கு அடையாளமாகக் காண்கிறான். பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் இத்தகைய அனுபவங்களோடு தன்னுடைய பிரசங்கம் இருந்ததாக எழுதவில்லை. வேதபோதனைகளை தவறாக விளங்கிக் கொள்வதாலேயே பெந்தகொஸ்தே காரர்கள் பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு அடையாளமாக நாம் மேலே பார்த்த அனுபவங்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை இருந்தது. ஆனால் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்-கள் இத்தகைய அனுபவங்களை அன்று அடைந்ததாக சுவிசேஷ நூல்கள் நமக்கு அறிவிக்கவில்லை. அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த ஒவ்வொரு தடவை-யும் இத்தகைய அனுபவங்களை ஆத்துமாக்கள் அடையவில்லை என்பதை புதிய ஏற்பாட்டை முறையாக வாசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்கும். இத்தகைய அனுபவங்களை ஆத்துமாக்கள் பெற்றுக்கொள்ளாத இடங்களில் எல்லாம் அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தில் அதிகாரமோ ஆவியின் வல்லமையோ இல்லையென்று கூறிவிட முடியுமா? அங்கெல்லாம் மக்கள் பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தரை விசுவாசித்திருந்தார்கள். ஆகவே, பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு அடையாளம் அந்நிய பாஷை பேசுவது போன்ற அற்புதங்களோ, அடையாளங்களோ அல்ல என்பதை கிறிஸ்தவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். பிரசங்கத்தோடு இத்தகைய அனுபவங்கள் சேர்ந்துவரும் என்பது, பெந்தகொஸ்தேகாரர்கள் வேதப்பகுதிகளை சரியாக

ஆராயாமல் கட்டிவிட்ட கதை என்பதை நாம் உணர்வது அவசியம்.

முதலில் பரிசுத்த ஆவியின் வல்லமை எங்கே இருக்காது என்பதைப் பார்ப்பது அவசியம். வேதத்தை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டு பிரசங்கிக்கப்படாத பிரசங்கங்கள் இருக்கின்ற இடங்களில் பரிசுத்த ஆவியின் வல்லமையை நிச்சயமாக பார்க்க முடியாது. சோம்பேறிப் பிரசங்கிகளின் பிரசங்கத்திலும், வெறும் அரசியல், சமூக உயர்வுக்கான பேச்சுக்களிலும், கதைசொல்லுவதையும், பாடல் கச்சேரிகள் நடத்துவதையும் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையை ஒருபோதும் பார்க்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஆவி என்று வேதம் சொல்லுகிறது. அவர் சத்தியத்திற்கு சொந்தக்காரர். சத்தியத்தை உணர்த்தும் பணியைச் செய்கிறவர். ஆத்துமாக்களின் இருதயத்தில் சத்தியத்தைப் பயன்படுத்தியே அவர் பாவங்களை உணரச் செய்கிறார். சத்தியத்திற்கே இடமில்லாத இடங்களில் அவருக்கு என்ன வேலை? சத்தியம் தெளிவாகவும், கர்த்தருக்கு மகிமை தரும் விதத்திலும் பிரசங்கிக்கப்படும் இடங்களில் மட்டும்தான் ஆவியின் வல்லமையைப் பார்க்க முடியும்.

கிறிஸ்து எங்கே வல்லமையாகப் பிரசங்கிக்கப்படுகிறாரோ அங்கே ஆவியின் வல்லமையைப் பார்க்கலாம். ஏனெனில், ஆவியானவர் இந்த உலகத்திற்கு வந்ததே கிறிஸ்துவை மகிமைப்படுத்தத்தான் (யோவான் 14:26; 15:26; 16:13-15). பிரசங்கங்கள் கிறிஸ்துவைப்பற்றிய தெளிவான போதனைகளைக் கொண்டிருக்க வேண்டும். பாவிகள் அவரைத் தேடி ஓடிவரத் துணைசெய்யும் அளவுக்கு கிறிஸ்து பிரசங்கங்களை அலங்கரிக்க வேண்டும். இதை இன்று அநேகர் மறந்துவிட்டு சபைகளில் வாந்தி எடுப்பதையும், குரங்கைப்போலக் கூத்தாடுவதையும், நாயைப்போலக் குறைப்பதையும், ஆத்துமாக்களை நிலத்தில் விழுந்து புரள வைப்பதையும் ஆவியின் அடையாளங்களாக எண்ணி வருகின்றனர். அது அசுத்த ஆவியின் நடமாட்டத்திற்கான அறிகுறி. இத்தகைய அவலட்சனமான காரியங்களுக்கு இடம் கொடுப்பவர்களுடைய வாழ்க்கையில் ஆவியின் கிரியைகளைப் பார்க்க முடியாது.

பிரசங்கம் எவ்வாறு பரிசுத்த ஆவியோடு வரும்? பரிசுத்த ஆவியின் வல்லமையை பிரசங்கத்தில் எப்படிப்பார்க்கலாம்? என்ற கேள்விகளுக்கு நிச்சயம் பதிலளித்தாக வேண்டும். இதைப்பற்றி இன்றைய தலைமுறையினர் மத்தியில் சிறந்த பிரசங்கி என்று பெயர் பெற்றுள்ள அல்பர்ட் என். மார்டின் (Albert N. Martin) கூறுவதைப் பார்ப்போம்: “பிரசங்கத்தின்போது கொடுக்கப்படும் ஆவியின் வல்லமையை சில பிரசங்கிகள் விளக்குகின்றபோது, தாங்கள் ஆவியானவரால் தூக்கிச்செல்லப்படுவதுபோன்ற ஓர் அனுபவமாக அது இருந்தது என்று குறிப்பிடுகின்றனர். அதாவது, ஆவியானவரின் வல்லமை இருக்கின்ற வேளைகளில் எந்தவிதமான தடங்கலோ, தடையோ இல்லாமல் தங்களால் சுலபமாக சத்தியத்தைப் பிரசங்கிக்க முடிந்திருக்கிறது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அத்தோடு, பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, பேசுவது சுலபமாக இருந்ததாகவும், கருத்துக்கள் தடங்கலின்றித் துள்ளிப் பாய்ந்தும் வந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். முக்கியமாக பாவிகளுக்கு கிறிஸ்துவைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற வேளைகளில் இந்தவிதமாக தங்களால் ஆவியின் துணையோடு பிரசங்கம் செய்ய முடிந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அத்தோடு, ஆவியின் வல்லமை இருக்கும்போது பிரசங்கிக்கும், ஆத்துமாக்களுக்கும் இடையில் பிரிக்க முடியாததொரு தொடர்பு ஏற்பட்டு

ஆத்துமாக்கள் பிரசங்க வார்த்தைகள் ஒவ்வொன்றையும் காதுகொடுத்துக் கேட்டு வாஞ்சையோடு மனத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். சத்தியத்தை ஆத்துமாக்கள் ஆவியின் வல்லமையால் தடையின்றிப் பெற்றுக் கொள்ளும் இந்த அனுபவமே ஆவியின் வல்லமைக்கு எடுத்துக்காட்டு" என்கிறார் அல்பர்ட். என். மார்டின். இத்தகைய ஆவியின் வல்லமை பிரசங்கியின் பேச்சுத்திறத்திலோ, பிரசங்க மேடையில் அவர் நடந்துகொள்கிற விதத்திலோ தங்கியிருக்கவில்லை. பிரசங்கம் ஆவியின் வல்லமையோடு அளிக்கப்படுகிறபோது பிரசங்கியும் நிச்சயமாக ஆவியின் வல்லமையால் பெரிதும் பாதிக்கப்படுகிறான். ஆனால், இது அவன் சுயமாக உருவாக்கிக்கொள்கிற ஒரு அனுபவம் அல்ல. ஜோர்ஜ் விட்பீல்ட் (George Whitefield), ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards), ஸ்பர்ஜன் (Spurgeon) போன்றோர் தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் இந்தவிதமாக ஆவியின் வல்லமையை அனுபவித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஜொனத்தன் எட்வர்ட்ஸ் ஒருமுறை கடல் கடந்து இங்கிலாந்துக்குப் போய் ஜோர்ஜ் விட்பீட்டின் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றார். அதைப்பற்றி எட்வர்ட்ஸ் பின்வருமாறு விபரிக்கிறார்: "விட்பீல்ட் பிரசங்கிக்க ஆரம்பித்தபோது முதல் ஐந்து நிமிடங்களில் அது எனக்கு சாதாரணமானதாகத்தான் தோன்றியது. இந்தப் பிரசங்கத்தை அவர் ஏற்கனவே பல முறை பிரசங்கித்திருக்கிறார் என்பதையும் என்னால் உணர முடிந்தது. அதைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தபோது அந்தப் பிரசங்கத்தில் இருந்த ஆவியின் வல்லமையை என்னால் உணர முடிந்தது. பிரசங்கியையும் மீறிய ஒரு சக்தி (ஆவியானவர்) விட்பீல்டை அற்புதமாக அன்று பயன்படுத்தினார். மக்கள் கூட்டம் பிரசங்கத்தால் அன்று பாதிக்கப்பட்டு கண்ணீர் விட்டது. இந்த மனிதனின் பிரசங்கத்தைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் ஏன் கூடி வருகிறார்கள் என்பதை நான் அன்றுதான் உணர்ந்தேன்" என்று எட்வர்ட்ஸ் கூறியுள்ளார்.

இத்தகைய ஆவியின் வல்லமையை பிரசங்கிகள் இன்றும் அனுபவிக்க முடியும். இது விட்பீல்டுக்கும், எட்வர்ட்ஸுக்கும், ஸ்பர்ஜனுக்கும் மட்டும் சொந்தமானதல்ல. ஆனால், ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்க முடியாதபடி பிரசங்கிகள் இன்று உலகப்பிரகாரமாக நடந்து தங்களுடைய ஊழியங்களை சிதறடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஊழியத்திற்கே வர அருகதை இல்லாதவர்கள் பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருப்பதாலும், பிரசங்கம் செய்வதில் நம்பிக்கையை இழந்து வேறு சாதனங்களை நாடிப் பிரசங்கிகள் ஓடுவதாலும், பிரசங்கம் செய்பவர்கள் தேவ பயத்தோடு பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிக்காததாலும் ஆவியின் வல்லமையை இன்று பார்க்க முடியாதிருக்கின்றது. இந்த நிலைமாற நல்ல பிரசங்கிகள் நமக்கு இன்று தேவை.

## பிரசங்கம் ஆத்துமாக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்

கிறிஸ்துவுக்கு மகிமை சேர்ப்பதே ஒவ்வொரு பிரசங்கியினுடைய ஊழியத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். ஆனால், அந்த இலட்சியத்தை மனதில் கொண்டு உழைக்கும் பிரசங்கியின் ஊழியத்தால் ஆத்துமாக்களின் வாழ்க்கையில் ஆத்மீக மாற்றம் ஏற்பட வேண்டும். அத்தகைய ஆத்மீக மாற்றம் ஆத்துமாக்களில் ஏற்படுவதன் மூலம்தான் கிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார். மனிதர்களுடைய மனதை மாற்றும் சக்தி பிரசங்கிக்கு இல்லை. அதைக் கர்த்தரால் மட்டுமே செய்ய முடியும். ஆனால், கர்த்தர் அதை வேதப் பிரசங்கங்களின் மூலமாகவே ஆத்துமாக்களில் செய்கிறார். இதை மனதில்

வைத்துக் கொண்டே எந்தப் பிரசங்கியும் உழைக்க வேண்டும்.

ஆத்தும மாற்றத்தை ஏற்படுத்தாத எந்தப் பிரசங்கமும் மெய்யான பிரசங்கமாக இருக்க முடியாது. பிரசங்கத்தைத் தயாரிக்கிறவன் ஆத்துமாக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை மனதில் கொண்டே பிரசங்கங்களைத் தயாரிக்க வேண்டும். எந்த வேதப்பகுதியைப் பயன்படுத்தி பிரசங்கத்தைத் தயாரிக்கும்போதும் அது ஆத்துமாக்களின் வாழ்க்கையில் பரிசுத்தத்தை ஏற்படுத்தும்படியான போதனைகளைக் கொண்டிருப்பதாகத் தயாரிப்பது அவசியம். இதற்காக பிரசங்கிக்கு தகுந்த வேத அறிவு இருப்பது மட்டுமன்றி தன்னுடைய ஆடுகளின் சுகநலன்களும் தெரிந்திருக்க வேண்டும். அது தெரியாத பிரசங்கியால் ஆத்மீக மாற்றத்தை ஏற்படுத்தும் பிரசங்கங்களைத் தயாரிக்க முடியாது. தான் ஊழியம் செய்யும் ஆத்துமாக்களை அன்போடு நேசிக்காமலும், அவர்களின் வாழ்க்கையில் அக்கறை கொள்ளாமலும், அவர்களோடு அந்நியோன்யமாகப் பழகாமலும் ஊழியம் செய்கிறவர்கள் ஆவிக்குரிய பிரசங்கிகளாக இருக்க முடியாது. ஆத்துமாக்களுடன் பழகத்தெரியாத பிரசங்கி தன்னில் பெரிய பிரச்சனையைக் கொண்டிருக்கிறான். ஆத்துமாக்களோடு கூடுதலாக பழகினால் நம்மை மதிக்கமாட்டார்கள் என்று சில பிரசங்கிகள் நினைப்பதுண்டு. அவர்களுடைய சிந்தனையில் கோளாறு இருக்கிறது. பிரசங்கி ஆத்துமாக்களோடு பழக வேண்டிய விதத்தில் பழகி, அவர்களுடைய வாழ்க்கையில் தனக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதைச் செய்ய முடியாதவர்கள் பிரசங்க ஊழியத்தை விட்டுவிடுவது நல்லது.

ஆத்துமாக்களின் தேவைகளை மனத்தில் கொண்டு பக்குவத்தோடு பிரசங்கங்களை பிரசங்கி தயாரித்தபோதும் அதனால் ஆத்துமாக்கள் பயன்பட ஆவியானவர் கிரியை செய்வது அவசியம். ஆவியானவரைப் பிரசங்கியால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், விசுவாசத்தோடு தயார் செய்யப்பட்ட பிரசங்கத்தை ஆவியானவர் நிச்சயம் பயன்படுத்துவார் என்ற நம்பிக்கை பிரசங்கிக்கு எப்போதும் இருக்க வேண்டும். அந்த நம்பிக்கை இல்லாமல் ஒருவரும் பிரசங்கிக்கப் போகக்கூடாது.

பிரசங்கத்தின் மூலம் எப்போதும் இரண்டில் ஒரு காரியம் நடக்க வேண்டும். ஒன்றில் அது ஆத்துமாக்களின் இருதயத்தை அசைத்து கர்த்தரின் வழிப்படி நடக்க அவர்களை உந்தித் தள்ளுவதாக இருக்க வேண்டும். அல்லது, அவர்களுடைய சுயரூபத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றை செய்யாதது ஒருபோதும் வேத பிரசங்கமாக இருக்க முடியாது. இதனால்தான் ஜோர்ஜ் விட்பீல்ட் போன்றோரின் பிரசங்கத்தால் மக்கள் மனம்மாறி கர்த்தரை விசுவாசித்தது மட்டுமல்லாமல், வேறு சிலர் அவரை எதிர்க்கவும் செய்தார்கள். மனிதனின் மனதை அசைக்காத, இருதயத்தைப் பாதிக்காத பிரசங்கத்தால் எந்தவிதமான நன்மையுமில்லை. தன்னுடைய பிரசங்கத்தால் ஆத்துமாக்கள் நிச்சயம் இயேசுவிடம் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு பிரசங்கிகள் எப்போதும் பிரசங்க மேடைக்குப் போக வேண்டும் என்று ஸ்பர்ஜன் சொல்லியிருக்கிறார். பிரசங்கி டெலிவிஷன் செய்தியாளனைப் போல அனலும் இல்லாமல் குளிருமில்லாமல் (Cool Communicator) தேவ செய்தியைப் பிரசங்கிக்கக் கூடாது. ரிச்சட் பெக்ஸ்டர் என்ற பியூரிட்டன் பிரசங்கி சொன்னது போல், ''மரணத்தின் வாசலில் இருக்கும் மனிதன் மரித்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு பிரசங்கிப்பது போல்'' நாம் பிரசங்கம் செய்ய வேண்டும்.

# பக்தி இயக்கமும் (Pietism) கிறிஸ்தவமும்

பக்தி இயக்கத்தைப் பற்றியும், அதன் போதனைகளைப்பற்றியும் அநேக தமிழ் வாசகர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆங்கிலத்தில் இதனை Pietism or Pietist Movement என்று அழைப்பார்கள். இந்த இயக்கத்தைப்பற்றி நாம் ஆராய வேண்டிய அவசியம் என்ன என்ற எண்ணம் உங்கள் மனத்தில் தோன்றலாம். சமீபத்தில் ஸ்ரீ லங்காவில் இந்த தலைப்பில் என்னைப் பேசக் கேட்டிருந்தார்கள். அப்பேச்சைத் தயாரித்துக் கொண்டிருந்தபோதுதான் இது எந்தளவுக்கு தமிழ் கிறிஸ்தவ வாசகர்கள் இன்றைக்கு அறிந்திருக்க வேண்டிய ஒரு விஷயம் என்பது எனக்கு விளங்கியது. ஏன் என்பதுதானே உங்கள் கேள்வி? அதற்கு பதில் சொல்லாமல் நான் மேலும் எழுத முடியாது. அதற்கு முதலாவது காரணம் இன்று நம்மத்தியிலே இருக்கும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் மற்றும் அற்புத ஊழியங்கள் செய்து வரும் தனி மனிதர்களின் போதனைகளுக்கும் ஊழியங்களுக்கும் ஒருவிதத்தில் காரணகர்த்தாவாகவும் முன்னோடியாகவும் இந்த பக்தி இயக்கம் இருந்திருந்திருப்பதுதான். அடுத்ததாக, இன்று பல சபைகளையும், சபைத்தொடர்பற்ற கிறிஸ்தவ ஸ்தாபனங்களையும் பாதித்திருக்கும் புதிய சுவிசேஷக் கோட்பாட்டுப் போதனைகளுக்கும், வேதவிளக்க முறைகளுக்கும் காரணமாக இருந்திருக்கிறது இந்த பக்தி இயக்கம். உண்மையில் சகோதரத்துவ சபைகள் நம்மத்தியில் தோன்றி வளர்வதற்கும் இந்த பக்தி இயக்கமே காரணம். இத்தனைக்கும் காரணமாக இருந்திருக்கும் பக்தி இயக்கத்தைப் பற்றியும், அது எந்தளவுக்கு கிறிஸ்தவத்தைப் பாதித்து அதில் ஒரு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது பற்றியும் நாம் அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. கிறிஸ்தவ வரலாற்றையும், வரலாற்று இறையியல் கோட்பாடுகளையும் புறக்கணித்திருப்பதால்தானே இன்று தமிழ் கிறிஸ்தவம் தலைகுனிந்த நிலையில் வேத அறிவின்றி அனுபவத்தை மட்டும் நாடி இருட்டில் நிற்கிறது. ஆகவே, பக்கி இயக்கத்தைப் பற்றி நாம் விபரமாகத் தெரிந்து கொள்வது அவசியம். இந்த இயக்கத்தைப் பற்றியும், அதன் போதனைகளையும் அறிந்து கொள்வதன் மூலம் உங்கள் விசுவாச வாழ்க்கையில் அறிவுபூர்வமான ஒரு மாற்றம் ஏற்படுமானால் அதுவே இந்த ஆக்கத்திற்குக் கிடைத்த பலனாக இருக்கும்.

பக்தி இயக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட சபையையோ, சபைப்பிரிவையோ அடையாளங்காட்டும் வார்த்தையல்ல. அது 17ம் நூற்றாண்டின் முடிவில் ஆரம்பித்து இன்று பலவித சமயப்பிரிவுகளையும், சபைகளையும் பாதித்திருக்கும் ஒரு இயக்கமாகும். ஆனால், அதற்கு முன்பே, ரோமன் கத்தோலிக்க மதத்திலும், 16ம் நூற்றாண்டுகளில் அனாபாப்திஸ்துகள் (Anabaptist) மத்தியிலும்கூட பக்தி இயக்கத்தின் சிந்தனைப்போக்கு இருந்திருக்கிறது.

பக்தி இயக்கத்தின் போதனைகளை நாம் முறையாக விளங்கிக் கொள்ள அதன் வரலாறு பற்றியும், வளர்ச்சி பற்றியும் அறிந்திருப்பது அவசியம். அதை இனி சுருக்கமாகப் பார்ப்போம்.

## அனாபாப்திஸ்து இயக்கம் (Anabaptist Movement)

பக்தி இயக்கம் 17ம் நூற்றாண்டில் ஜேர்மனியில் ஓர் இயக்கமாக ஆரம்பித்த போதும் அதன் போதனைகளின் சாயல்கள் அதற்கு முன்பே வரலாற்றில் வேறு சில இயக்கங்களில் இருந்துள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கது அனாபாப்திஸ்து இயக்கம் (Anabaptist Movement). மத்திய ஐரோப்பாவில் 1525-ம் ஆண்டளவில் ஆரம்பமான ஓர் இயக்கம் அனாபாப்திஸ்து இயக்கம். நமது விசுவாசம் வேத அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டு இந்த இயக்கம் ஆரம்பத்தில் உருவானது. கிறிஸ்து புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருப்பதால் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை நமக்கு அவசியமில்லை என்ற அடிப்படையில் கிறிஸ்துவைப் பூரணமாகப் பிரதிபலிக்கும் நோக்கத்துடன் ஒரு கிறிஸ்தவத்தை உருவாக்க இந்த இயக்கம் முயன்றது. இதன் காரணமாகவே அனாபாப்திஸ்துகள் குழந்தை ஞானஸ்நானத்தை எதிர்த்து விசுவாசிகளுக்கு மட்டுமான முழுக்கு ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்தினார்கள். குழந்தை ஞானஸ்நானம் ரோமன் கத்தோலிக்க மதம் உருவாக்கிய, வேதத்தில் காணமுடியாத ஒரு முறை என்று இவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். அத்தோடு விசுவாசிகளுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் மட்டுமே சபைகளில் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த அடிப்படையில் புதிய சபைகளையும் ஆரம்பித்தார்கள். இதன் காரணமாக இவர்கள் "மறுபாப்திஸ்துகள்" அல்லது "அனாபாப்திஸ்துகள்" என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டார்கள்.

இந்த அனாபாப்திஸ்து இயக்கம் ஆரம்பத்தில் மூன்று குழுக்களைக் கொண்டு உருவாகியது. இவற்றில் மிகப்பெரியது மெனோனைட் இயக்கம் (Menonite Movement). இதன் தலைவராக இருந்த மெனோ சிமன்ஸின் (Meno Simons) பெயரோடு இந்த இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்தில் இருந்து வளர்ந்து இன்று அமெரிக்காவில் பென்சில்வேனியா போன்ற பகுதிகளில் காணப்படுவதே மெனோனைட் சகோதரத்துவ (Menonite Brethren) சபைகள். அனாபாப்திஸ்து இயக்கத்தைச் சார்ந்த அனைவரும் ஒரே கோட்பாடுகளை விசுவாசிக்கவில்லை. அவர்களுக்கு மத்தியில் பல வேறுபாடுகள் இருந்தன.

அனாபாப்திஸ்து இயக்கத்தின் முதலாவது பிரிவான சுவிஸ் சகோதரத்துவ இயக்கமே (Swiss Brethren Movement) 1525-ல் முதன் முதலில் தோன்றியது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் ஒரு சபையில்லை, வெறும் சகோதரர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டனர்.

இரண்டாவது பிரிவு தன்னை அனாபாப்திஸ்து என்று மட்டுமே அழைத்துக் கொண்டது. இது ஜேர்மனியில் ஆரம்பித்து கலாச்சார அடிப்படையில் ஒல்லாந்து (Dutch), பிரீசியன் (Frisian), பிளெமிஸ் (Flemish) என்று மூன்று பிரிவுகளாக இருந்தன. இந்த மூன்று பிரிவுகளும் 1530-களுக்குப்பின்பு மெனோ சிமன்சுக்கு இருந்த பிரபல்யத்தால் மெனோனைட்ஸ் (Menonites) என்று அழைக்கப்பட்டனர்.

மூன்றாவது பிரிவினர் ஹட்டேரியன் சகோதரர்கள் (Hatterian) என்று அழைக்கப்பட்டனர்.

16-ம், 17-ம் நூற்றாண்டுகளில் அனாபாப்திஸ்துகள் கத்தோலிக்கர்களாலும்,

புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களாலும் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். அதற்குக் காரணம் அவர்கள் பின்பற்றிய கோட்பாடுகள்தான். இவர்கள் ஞானஸ்நானத்தைக்குறித்தும், சபையைக்குறித்த பொதுவான கோட்பாட்டிலும் சரியான விளக்கத்தைக் கொண்டிருந்தபோதும், பல பெருந்தவறான போதனைகளையும் பின்பற்றினர். முழுக்கு ஞானஸ்நானத்தை வற்புறுத்தியதாலும், எந்தவிதத்திலும், எக்காலத்திலும் கிறிஸ்தவர்கள் போரில் ஈடுபடக்கூடாது என்று போதித்ததாலும் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அத்தோடு அனாபாப்திஸ்துகளில் மெனோ சிமன்ஸ் (Meno Simons), ஹுப்மெயர் (Hubmaier) போன்ற சில நல்ல தலைவர்களைத் தவிர்த்த ஏனையோரின் போதனைகள் வேதத்திற்குப் புறம்பானதாகவும், மோசமானவையாகவும் இருந்தன. இவர்களில் பலர் அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை நாடி (mystical experience) வேதம் மட்டுமே கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்துகிறது என்பதை நம்பாமல் வேதத்திற்கு வெளியில் இருந்து கர்த்தரின் வெளிப்படுத்தலை நாடினார்கள். அனாபாப்திஸ்து இயக்கத்தில் காணப்பட்ட முக்கியமான ஆபத்து இது. இப்படிப் போதித்த அனாபாப்திஸ்துக்களில் ஒருவர் செபஸ்டியன் பிரான்கே (Sebastian Francke). இந்த மனிதர் மார்டின் லூதரின் காலத்தில் வாழ்ந்துள்ளார். அத்தோடு வேதத்தை மட்டுமே விசுவாசிக்க வேண்டும் என்ற ஆழந்த தூய நம்பிக்கையைக் கொண்டிருந்த அனாபாப்திஸ்துகள் மனிதர்களால் எழுதப்பட்ட விசுவாச அறிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அத்தகைய விசுவாச அறிக்கைகள் வேத நம்பிக்கைகளில் இருந்து தம்மை விலகச் செய்து விடும் என்ற தவறான எண்ணத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டனர். மேலும் சமுதாயத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்தால் மட்டுமே பரிசுத்த வாழ்க்கை வாழ முடியும் என்று நம்பிய இவர்களில் பலர் சமுதாயத்தைவிட்டு விலகி வாழும் போக்கைப் பின்பற்றினர். அனாபாப்திஸ்துகளின் மத்தியில் காணப்பட்ட இத்தகைய சிந்தனைப்போக்கை 17ம் நூற்றாண்டில் ஜேர்மனியில் தோன்றிய பக்தி இயக்கத்தில் பெருமளவு பார்க்க முடிகிறது. பக்தி இயக்கத்துக்கு அனாபாப்திஸ்து முன்னோடிகள் என்று வரலாற்று ரீதியில் நம்மால் சொல்லமுடியாவிட்டாலும் இந்த இரண்டு இயக்கங்களும் பலவிதங்களில் ஒரே போக்கினைக் கொண்டிருந்தன. முக்கியமாக, புத்திக்கப்பாற்பட்ட, விளக்க முடியாத, உணர்வு சார்ந்த அனுபவங்களை நாடுவதில் இவை இரண்டும் ஒத்துப்போவதைப் பார்க்கலாம்.

அனாபாப்திஸ்துகள் தங்களுக்கு ஐரோப்பாவில் ரோமன் கத்தோலிக்க மதத்தாலும், சீர்திருத்த கிறிஸ்தவத்தாலும் ஏற்பட்ட கடுந்துன்பத்தினால் நாடுகடந்து வட அமெரிக்காவிலும், கனடாவிலும் போய்க் குடியேறினர். கத்தோலிக்க மதம் சீர்திருத்தவாதிகளைப்போலவே இவர்களையும் எதிரிகளாகக் கருதியது. அதேவேளை சீர்திருத்த சபைகள் இவர்களுடைய புரட்சிகரமான சபை சம்பந்தப்பட்ட போதனைகளையும், அறிவுக்கெட்டாத உணர்வு சார்ந்த அனுபவத்தை (mystical experience) நாடும் போக்கையும் கடுமையாக எதிர்த்தன. இவ்வாறாக அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் போய்க் குடியேறியவர்களின் வழியில் வந்தவர்களின் மிச்சங்களே இன்று அமெரிக்காவில் ஆமிஷ் மக்கள் என்றும் (Amish), மெனோனைட்டுகள் (Menonite) என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

மெனோனைட்டுகள் மத்தியில் ஏற்பட்ட இன்னுமொரு பிரிவு வெளிப்புறப் பாதிப்பால் உருவானது. இது ஜேர்மனியில் 17, 18-ம் நூற்றாண்டுகளில் லூதரன்

சபைகளின் மத்தியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் தாக்கத்தினால் உருவானது. பக்தி இயக்கத்தின் கோட்பாடுகளை ஏற்று இந்த மெனோனைட் பிரிவு 1859-ல் மெனோனைட் சகோதரர்கள் (Menonite Brethren) என்ற பெயரில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. 19-ம் நூற்றாண்டில் இவற்றைத்தவிர வேறு சில மெனோனைட் பிரிவுகளும் தோன்றின.

பக்தி இயக்கத்தின் போதனைகளைக் கொண்டிருந்த இன்னுமொரு இயக்கம் குவேக்கர்களாகும் (Quakers - Society of Friends). வில்லியம் பென் (William Pen) என்ற குவேக்கர் அமெரிக்காவின் பிலடெல்பியாவில் குடியேறி குவேக்கர் இயக்கத்தை வளர்த்தார்.

## ஜேர்மனியில் தோன்றிய பக்தி இயக்கம்

பக்தி இயக்கம் (Pietist Movement) 17-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஜேர்மனியில் லூதரன் சபைகள் மத்தியில் ஆரம்பமானது. இந்த இயக்கம் இறை போதனைகளில் அதிகம் நாட்டம் காட்டாது இறை பக்திக்குரிய காரியங்களில் அதிக நாட்டம் காட்டியதால் இந்தப் பெயரைப் பெற்றது. இதை ஆரம்பித்து வைத்தவர் ஜேர்மனியில் பக்தி இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படும் பிலிப் ஜேக்கப் ஸ்பெனர் (Philip Jakob Spener 1635-1705) என்பவர். ஆங்கிலேய பியூரிட்டன்களான ஜோன் பனியன் போன்றவர்களின் போதனைகளால் பாதிக்கப்பட்ட ஸ்பெனர் பியூரிட்டன் போதனைகளில் அதிக அக்கறை காட்டினார். லூதரின் சீர்திருத்தவாத கருத்துகளிள் அவர் ஏற்கனவே அதிக ஆர்வம் காட்டி வந்தார். ஸ்ராஸ்பர்க் (Strasbourg) பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றிருந்த ஸ்பெனர் லூதரின் எழுத்துக்களாலும், ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த மார்டின் போசர் (Martin Bucer) என்ற பிரபல்யமான லூதரன் இறையியல் அறிஞரின் எழுத்துக்களாலும் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார்.

ஆனால், அக்காலத்தில் லூதரின் மறைவுக்குப் பிறகு ஜேர்மனியில் இருந்த லூதரன் சபைகள் ஆத்மவிருத்தியில் அதிக நாட்டம் செலுத்துவது குறைந்து கொண்டுவந்தது. இறை போதனைகளிலும், சபைக்கோட்பாடுகளிலும், பாரம்பரியங்களிலும் அதிக ஆர்வம் காட்டிய சபைகள் பக்திவிருத்தியில் அந்த நாட்டத்தைக் காட்டவில்லை. அதுமட்டுமல்லாமல் சபைகளில் Formalism அதிகமாக இருந்தது. அதாவது, முறையாக ஆராதனையை நடத்துவதில் காட்டப்பட்ட அக்கறை அந்த ஆராதனையை ஆர்வத்தோடு, உளப்பூர்வமாக கொடுக்க வேண்டுமென்பதில் காட்டப்படவில்லை. சபைத்தலைவர்களினதும், நாட்டுத் தலைவர்களினதும் வாழ்க்கையிலும் பல குறைபாடுகள் இருந்தன. இதனால் பல துறைகளில் இருந்து சபையில் சீர்திருத்தம் தேவை என்ற கூக்குரல் எழுந்தது. பக்தியில் அதிக நாட்டம் காட்டி வந்த ஸ்பெனரை இவையெல்லாம் அதிகமாகப் பாதித்தன. அதேவேளை, ஜேர்மன் லூதரனிசத்தில் யொகான் ஆர்ன்ட் (Johann Arndt) என்பவரின் அறிவுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளை அனுபவிக்கத் தூண்டும் (mystical) எழுத்துக்களுக்கு இக்காலத்தில் அதிக வரவேற்பு கிடைத்து வந்தது. லூதரன் சபையில் காணப்பட்ட உணர்ச்சியற்ற, ஆராதனையும், பக்திவிருத்தியற்ற வாழ்க்கை முறையும், அனுபவத்திற்கும், மனித உணர்ச்சிகளுக்கும் மட்டும் முதலிடம் கொடுத்து எழுந்த புதுக்கருத்துக்களும் ஸ்பெனரில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இதனால் பக்திவிருத்தியில் மனித உணர்ச்சிகளுக்கே ஸ்பெனர் அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தார். யொகான் ஆர்ன்டின் கருத்துக்களின் சாயலை பின்னால்

ஸ்பெனர் எழுதிய நூல்கள் அனைத்திலும் பார்க்கலாம்.

ஜேர்மனியில் பக்தி இயக்கம் தோன்றியதற்கு இன்னுமொரு காரணம் அங்கு ஐரோப்பாவே காணாத வகையில் நடந்து வந்திருந்த 30 வருடப் போர் (1618-1648) ஆகும். போரினால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் சபைகளையும், போதனைகளையும், விசுவாச அறிக்கைகளையும்விட உள்ளார்ந்த பக்தியையும், அகம் சார்ந்த அனுபவங்களையும் நாடி அலைந்தனர். அவர்களுக்கு அமைதியும், சமாதானமும் தேவைப்பட்டது. அதைத்தேடி அலைந்த மக்களுக்கு இதமூட்டுவதாக அமைந்தன பக்தி இயக்கப் போதனைகள். மக்களின் மனப்போக்கு பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இவை எல்லாவற்றையும்விட கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடான நீதிமானாக்குதலைவிட (Justification by Faith) பக்திவிருத்திக்குரிய அனுபவம் சார்ந்த போதனைகளிலேயே (feeling oriented mystical experience) பக்தி இயக்கம் அதிக நாட்டம் காட்டியதும் அதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

## பக்தி இயக்கத்தின் குறைபாடுகள்

இப்படி ஸ்பெனரால் ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்டுப் பரவிய பக்தி இயக்கத்தின் போதனைகளில் உள்ள குறைபாடுகளை நாம் ஆராய்வது அவசியம்.

### 1. பக்தி இயக்கத்தின் எழுத்துக்களில் அனுபவத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது.

பக்தி இயக்கத்தைப் பொறுத்தவரையில் தனி மனிதனின் அனுபவமே (இயற்கையைப் பொறுத்தவரையிலும், சமயத்தைப் பொறுத்தவரையிலும்) அனைத்தையும் தீர்மானிக்கும் நீதிமன்றமாக இருந்தது. இதன் காரணமாக ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய சொந்த அனுபவத்தால், பக்தியால் கண்டுபிடிப்பவைகளே அவனுடைய இறையியல் அறிவின் வளர்ச்சியாகக் கருதப்பட்டது. ஆகவே, பக்தி இயக்கத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவனே வெளிப்படுத்தலுக்கான ஞானத்தைக் கொண்டிருக்கிறான். அத்தோடு அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை பக்தி இயக்கம் நாடி இருண்டகால ரோமன் கத்தோலிக்க மத நடவடிக்கைகளை மறுபடியும் நினைவூட்டியது.

### 2. பக்தி இயக்கம் வேதத்தைப் பற்றிய தவறான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தது

பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தபோதிலும் லூதரன் சீர்திருத்தவாதிகளைவிட வித்தியாசமான விதத்தில் வேதத்தைப் பயன்படுத்தினர்.

அ. அவர்களைப்பொறுத்தவரையில் வேதம் மட்டும் நாம் பின்பற்ற வேண்டிய அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டிருக்கவில்லை.

ஆ. வேதத்தோடு, நம்முடைய மனந்திரும்புதலும், மறுபிறப்பும், உள்ளார்ந்த அனுபவங்களும் நம்மை வழிநடத்துவனவாகக் கருதப்பட்டன.

இ. அவர்கள் தனிப்பட்டவிதத்தில் வேதத்தைப் படிக்கவும், தனிநபர்கள் வேதத்திற்கு சொந்த விளக்கங்களைக் கொடுக்கவும் அனுமதித்தனர்.

*ஈ. அவர்களைப்பொறுத்தவரையில் பிரசங்கம் நன்மையானதாகத் தென்பட்டாலும், பிரசங்கங்கள் வேதத்தைப்போல நமக்குப்புறத்தில் காணப்படும் ஒரு அதிகாரம் மட்டுமே. ஆகவே, அது முழுமையான அதிகாரத்தையும், பயனையும் கொண்டிருக்கவில்லை. பக்தி இயக்கம் தனி மனிதனின் அனுபவத்தையே இறுதி அதிகாரமாகக் கருதியது.*

### 3. பக்தி இயக்கம் விசுவாச அறிக்கையை சந்தேகக் கண்ணோடு பார்த்தது.

*விசுவாச அறிக்கை போதிக்கும் சத்தியங்களை தனி மனிதனின் அனுபவம் மட்டுமே சரியா? தவறா? என்று தீர்மானிக்க முடியும் என்று அது கருதியது. வேதமோ, விசுவாச அறிக்கையோ எதுவாக இருந்தாலும் தனி மனிதனின் உள்ளுணர்வுக்கு அது சரியாகப்பட்டால் மட்டுமே அவனுடைய பக்திவிருத்திக்குப் பயன்படும் என்று பக்தி இயக்கம் கருதியது.*

### 4. அடிப்படை இறையில் போதனைகளுக்கு பக்தி இயக்கம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

*இறைபோதனைகளுக்கு பக்தி இயக்கம் அத்தனை முக்கியத்துவம் கொடுக்கவில்லை. போதனைகள் பிரிவினையை ஏற்படுத்தும் என்று தவறாக நம்பிய அவர்கள் எல்லாக் கிறிஸ்தவர்களும் போதனைகளை விட தங்களுடைய சொந்த அனுபவங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கருதினார்கள்.*

### 5. பக்தி இயக்கம் சபைக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுத்தது.

*பக்தி இயக்கத்தார் சபையை பாபிலோனாகக் கருதினார்கள். சபையை அவர்கள் நிராகரித்து ஆத்துமாக்கள் சிறுகுழுக்களாகக்கூடி ஜெபிக்கவும், வேதத்தைப் படிக்கவும், ஐக்கியத்தில் வரவும் உற்சாகப்படுத்தினர். சபை அமைப்பும், கட்டுப்பாடுகளும் ஆத்துமாக்களின் பக்திவிருத்திக்கு இடைஞ்சலாக அமைகிறது என்று அவர்கள் கருதினார்கள். இந்தப்போக்கை இன்று அநேக சகோதரத்துவ குழுக்களிடமும், 20-ம் நூற்றாண்டுகளில் தோன்றி பரவியுள்ள அநேக சுயாதீன கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலும் பார்க்கலாம்.*

### 6. பக்திய இயக்கம் சமயசமரசக் கோட்பாட்டை வலியுறுத்தியது.

*சபைகளை பாபிலோனாகக் கருதிய பக்தி இயக்கம் சபை அமைப்பையும்* (Church order) *நிராகரித்ததால் எல்லாக்கிறிஸ்தவர்களும் எந்தவித வோறுபாடுமில்லாமல் கூடுவதை ஆதரித்தது. இறையியல் போதனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் அது முக்கியத்துவம் கொடுக்காமல் அனுபவத்தை மட்டுமே நாடியதால் சத்தியத்தின் அடிப்படையில் இல்லாமல் எவருடனும் கூட்டுச் சேரும் சமய சமரசப்போக்கிற்கு வழிவகுத்தது.*

### 7. நீதிமானாக்குதலைவிட மறுபிறப்புக்கே பக்தி இயக்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்தது.

*இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? மனந்திரும்பியிருக்கிறீர்களா? என்ற வார்த்தைகளை பக்தி இயக்கத்தாரின் எழுத்துக்களில் அதிகம் காணலாம். புதிய மனிதன், உள்ளார்ந்த அனுபவம், அன்பு, விசுவாசம் என்பவற்றைக்குறித்து அதிகம் பேசும் அவர்கள் கர்த்தர் கிறிஸ்துவை அடிப்படையாகக்கொண்டு ஏற்படுத்திய நீதிமானாக்குதலை முற்றாக அலட்சியம் செய்தனர். இறையியலை அலட்சியப்படுத்தி அனுபவத்தை மட்டும் அவர்கள் நாடியதால் வேதம் போதிக்கும் மிக அத்தியாவசியமான இறையியல் போதனைகளைத்தவிர்த்தனர்.*

லூதருக்கு (Martin Luther) விசுவாசத்தின் ஊற்று முக்கியமாக இருந்தது. ஆனால், பக்தி இயக்கத்துக்கு விசுவாசத்தின் கனி மட்டுமே முக்கியமானதாக இருந்தது. லூதர், விசுவாசி ஆண்டவரை நோக்கிப் பார்த்து அவரிலேயே எப்போதும் தங்கியிருக்க வேண்டும் என்று போதித்தார். இவர்கள் விசுவாசி தன்னுடைய உள்ளத்தை ஆராய்வதிலேயே காலத்தைச் செலுத்த வேண்டும் என்று அறிவுரை செய்தார்கள்.

### 8. பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உலகத்தைப்பற்றிய தவறான எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள்.

இந்த உலகத்தை அவர்கள் சாத்தானுக்கு சொந்தமானதாகப் பார்த்ததால் எப்போதும் சமுதாயத்தை விட்டு விலகி வாழ முயன்றார்கள். இதையே 16-ம் நூற்றாண்டுகளில் அனாபாப்திஸ்து இயக்கத்தில் பலரும் பின்பற்றினர். கர்த்தரால் நாம் அனுபவிக்கும்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் ஈவுகளைக்கூட ஆத்துமாக்கள் சுதந்திரத்தோடு அனுபவிப்பதை பக்தி இயக்கத்தார் தடை செய்தார்கள். இதனால் இவர்கள் மனச்சாட்சியை வேதத்திற்கு புறம்பான போதனைகளைால் கட்டுப்படுத்தும் பரிசேயர்களைப்போலப் போதனைகளை உருவாக்கினர். பாவமுள்ள இந்த உலகம் பக்தியைக் குழைத்துவிடும் என்று நம்பி சமுதாயத்தைப் புறக்கணித்து வாழ முயன்றனர். அமெரிக்காவில் பென்சில்வேனியாப் பகுதிகளிலுள்ள ஆமீஷ் மக்கள் இந்த முறையிலேயே இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். மெனனைட் சகோதரத்துவ சபைகளும் இந்தப்போக்கைக் கொண்டிருக்கின்றன.

இத்தனைத் தவறுகளைத் தன்னில் கொண்டிருந்த பக்தி இயக்கம் ஒரு சில நன்மைகளையும் கொண்டிருந்தது. அது வெறும் அறிவை மட்டும் நாடி நிற்பதைக் கண்டித்தது. பரிசுத்த வாழ்க்கையையும், இறை பக்தியையும் வலியுறுத்தியது. சபை வெறும் சாட்டுக்காக கூடிவருவதையும், கிளிப்பிள்ளை போல பக்திக்குரிய காரியங்களை அன்றாடம் செய்வதையும் அது கண்டித்தது. அனேக, நல்ல காரியங்களை சமுதாயத்தில் செய்தது. மிஷனரி ஊழியத்தில் அக்கறை காட்டியது (சின்சென்டோர்ப் - Zinzendorf பக்தி இயக்கத்தில் இருந்து வளர்ந்து மொரேவியன் மிஷனரியாகப் பணியாற்றியவர்).

### பக்தி இயக்கத்தின் இன்றைய வழித்தோன்றல்கள்

பக்தி இயக்கத்தின் இன்றைய வழித்தோன்றல்கள் யார்? மெத்தடிஸ்ட் சபைகள் தோன்றக் காரணமாக இருந்த ஜோன் வெஸ்லி (John Wesley) பக்தி இயக்கத்தின் தாக்கத்துக்குள்ளாகி தன்னுடைய போதனைகளை வளர்த்துக் கொண்டவர்களில் ஒருவர். வெஸ்லியின் போதனையான "பூரணமான பரிசுத்தமாக்குதலுக்கு" (Entire Sanctification) பக்தி இயக்கப் போதனைகள்தான் காரணம். வெஸ்லியை அதிகம் கவர்ந்தவர் பக்தி இயக்கத்தைச் சேர்ந்த மொரேவியன் மிஷனரியான சின்சென்டோர்ப் (Zinzendorf). வெஸ்லி உருவாக்கிய மெத்தடிஸ்ட் சபைகள் பக்கி இயக்கத்தின் பரிசுத்தமாக்குதல் பற்றிய போதனைகளைப் பின்பற்றுகின்றன.

அடுத்ததாக, சகோதரத்துவ சபைகள் (Brethren Churches) பக்தி இயக்கத்தின் குழந்தைகள். அவர்களிலும் பல்வேறு பிரிவுகளைப்பார்க்கலாம். இந்தியாவில் உள்ள பக்த்சிங் சகோரத்துவ சபைகள் (Bakth Singh) பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். பக்தி இயக்கத்தின் சபை சம்பந்தமான போதனைகளை சகோதரத்துவ சபையைச் சேர்ந்தவர்களில் காணலாம்.

1830-குப் பிறகு அமெரிக்காவில் ஒபர்லீன் கல்லூரியில் (Oberlin College) ஆரம்பித்து ஒபர்லீன் பூரணப் பரிசுத்தமாக்குதல் (Oberlin Perfectionism) என்ற பெயரில் அழைக்கப்பட்ட போதனைகளுக்கும் பக்தி இயக்கமே காரணமாக இருந்திருக்கிறது. ஒபர்லீன் போதனைகளுக்கு காரணகர்த்தாக்களாக இருந்துள்ள ஆசா மேகன் (Asa Mahan), சார்ள்ஸ் பினி (Charles Finney) போன்றோர் ஸ்பெனரின் எழுத்துக்களின் தாக்கத்துக்குள்ளாவனவர்கள். அத்தோடு அமெரிக்காவில் தோன்றிய Higher Life Movement, Victorious life Movement மற்றும் German Higher Life Movement எல்லாவற்றிற்கும் ஸ்பெனர் ஆரம்பித்து வைத்த பக்தி இயக்கப் போதனைகள் காரணமாக இருந்திருக்கின்றன. இந்த இயக்கங்கள் அனைத்தும், வெஸ்லியின் பூரணப் பரிசுத்தமாக்குதலையும், ஆவியின் ஞானஸ்நானம் பற்றிய போதனைகளையும் (Baptism of the Holy Spirit), பெலேஜியனிசப் போதனைகளையும் கொண்டிருந்தன. இவற்றில் இருந்து முளைத்தவையே பில்பிரைட்டின் (Bill Bright) இன்றைய Campus Crusade இயக்கமும், Deeper Life Camp களும். இங்கிலாந்தில் தோன்றி இன்றும் நடந்து வரும் கெஸ்சிக் கன்வென்ஷனும் (Keswick Convention) பக்தி இயக்கப் போதனைகளையே அளித்துவருகின்றன. ஸ்பர்ஜனும் (Spurgeon), பிசப் ரைலும் (J. C. Ryle) அக்காலத்தில் கெஸ்சிக் கன்வென்ஷன் போதனைகளை எதிர்த்தனர். பக்தி இயக்கத்தின் போதனைகளைப் பின்பற்றி வேதவிளக்கமளித்த மேலும் சிலரை நாம் குறிப்பிட வேண்டியது அவசியம். தென் ஆபிரிக்க போதகராக இருந்த அன்ட்ரூ மரே (Andrew Murray), அமெரிக்காவில் ஏ. பி. சிம்சன் (A. B. Simson), எப். பி, மேயர் (F. B. Meyer), சீனாவின் வாட்ச்மன் நீ (Watchman Nee) போன்றோர் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள்.

20-ம் நூற்றாண்டுகளில் ஆரம்பமாகி இன்று உலகத்தையே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும், பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களே. பக்தி இயக்கத்தின் பரிசுத்தமாக்குதலுக்கான போதனைகளை இன்று எங்கோ கொண்டு போய்விட்டன அதன் தத்துக்குட்டிகளான இந்த நவீன பக்தி இயக்கங்கள்.

## வேதம் போதிக்கும் மெய்யான பரிசுத்தமாக்குதல்

ஸ்பெனர் போன்றோர் ஆரம்பத்தில் 17-ம் நூற்றாண்டு பியூரிட்டன்களின் போதனைகளால் கவரப்பட்டிருந்தாலும் தாங்கள் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு அந்தப்போதனைகளைத் தவறாக விளங்கிக் கொண்டார்கள். அதன் விளைவே பத்தி இயக்கம். ஆகவே, நாம் பக்தி இயக்கத்துக்கு எதிர்மாறான (Opposite position), வேத அடிப்படையில் அமைந்த மெய்யான பக்தி விருத்திக்கு வழிகாட்டும் சீர்திருத்தவாத, பியூரிட்டன் போதனைகளை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம்.

பியூரிட்டன் இயக்கத்தைக்குறித்து முதலில் சுருக்கமாகப் பார்த்த பின்பு அவர்களுடைய வேதஅடிப்படையிலான பரிசுத்தமாக்குதல் பற்றிய போதனைகளை ஆராய்வோம். 17-ம் நூற்றாண்டை பியூரிட்டன்களின் காலமாக வரலாறு வர்ணிக்கிறது. இதை கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு அற்புதமான காலமாகக் காணலாம். பியூரிட்டன்கள் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இக்காலத்தில் இருந்தார்கள். இங்கிலாந்தில், இங்கிலாந்து சபை மறுபடியும் ரோமன் கத்தலோலிக்க சமயத்தின் பாதையில் போக ஆரம்பித்தபோது அச்சபைகளில் இருந்த இந்த சீர்திருத்தவாதிகள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். அப்படி

*எதிர்த்ததால் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டனர். ஜோன் பனியன் (John Bunyan) 18 வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்தார். ஹூப்பர் (Hooper) இந்தவிதமாக சிறையில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டார். இங்கிலாந்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட பியூரிட்டன்களே அமெரிக்காவை உருவாக்கியவர்கள். கொட்டன் மேத்தர் (Cotton Mather) போன்றோர் அமெரிக்காவில் போயிறங்கிய ஆரம்ப பியூரிட்டன்கள்.*

*இங்கிலாந்திலிருந்த பியூரிட்டன்கள் தாம் போராடிப்பெற்றுக்கொண்டுள்ள மதசுதந்திரத்தை இழந்துபோகக்கூடாது என்பதற்காகவும், மறுபடியும் ரோமன் கத்தோலிக்கப்போதனைகளுக்கு கிறிஸ்தவர்கள் இடம் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காகவும் ஒன்றுகூடி விசுவாச அறிக்கைகளையும், வினாவிடைப்போதனைகளையும் எழுதி வைத்தார்கள். இதில் பாப்திஸ்துகள் விசுவாசிப்பதே 1689 விசுவாச அறிக்கையும் பாப்திஸ்து வினாவிடைப் போதனைகளும். 1689 விசுவாச அறிக்கை சீர்திருத்தவாதிகளான பியூரிட்டன்கள் பக்தி இயக்கத்தின் போதனைகளுக்கு எதிராகப்போதித்த வேதபூர்வமான போதனைகளைத் தெளிவாக விளக்குகிறது. அவற்றை இனி ஆராய்வோம்.*

*1689 விசுவாச அறிக்கையில் பெரும்பாலான அதிகாரங்கள் பியூரிட்டன் போதனைகளை உள்ளடக்கியிருக்கின்றன. 13-ம் அதிகாரத்தில் இருந்து 26ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகள் பியூரிட்டன் போதனைகளைக் கொண்டிருக்கின்றன. இவையனைத்துமே பக்தி இயக்கத்தின் போதனைகளையும், பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களாக இன்று இயங்கி வரும் மெனோனைட் சபைகள், சகோதரத்துவ சபைகள், பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் அனைத்தின் போதனைகளையும் நிராகரித்து வேதம் பரிசுத்தமாக்குதலைப்பற்றி தரும் போதனைகளை விளக்குகின்றன. இவற்றை இனிப் படிப்படியாக ஆராய்வோம்.*

## 1. வேதமும் விசுவாச அறிக்கையும்

*பக்தி இயக்கத்தினர் வேதத்திற்குப் புறத்திலிருந்து கர்த்தரின் சித்தத்தை அறிந்து கொள்ள முடியும் என்று போதித்து, அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை நாடினர். அதற்கு சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் தந்த பதிலை 1689-ல் முதல் அதிகாரத்தில் பார்க்கலாம். இவ்வதிகாரம் வேதத்திற்கு வெளியில் இருந்து இன்று நாம் வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்ள முடியாது என்று தெளிவாக வலியுறுத்திப் போதிக்கின்றது. வெளிப்படுத்தல் முடிவுபெற்று எழுத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைமீறி வேறு எங்கிருந்தும் வெளிப்படுத்தலை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. பக்தி இயக்கமும், அதன் வழித்தோன்றல்களும் வேதத்தை மட்டும் முழுமையான வெளிப்படுத்தலாக ஏற்றுக்கொள்ளாமல் தங்களுடைய அகத்திலிருந்து கர்த்தரின் செய்தியைப் பெற்றுக்கொள்ள அலைகிறார்கள். இதைத்தான் ஸ்பெனரின் எழுத்துக்கள் வற்புறுத்துகின்றன. இதே போக்கை இன்று பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களாக இருக்கின்ற அத்தனை இயக்கங்களிலும் பார்க்கலாம்.*

*பக்தி இயக்கம் வேதத்தை விளங்கிக்கொள்ளும் முறை சீர்திருத்தவாத பியூரிட்டன் போதனைகளில் இருந்து வேறுபட்டிருப்பது மட்டுமல்லாமல் வேதத்திற்கு எதிரான ஒரு முறையுமாகும். அவர்கள் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் வேதவிளக்கமுறைகளைப்பயன்படுத்திப் படித்து விளங்கிக் கொள்ளுவதைத் தவிர்க்கிறார்கள். வேதத்தைப்படிக்கும்போது விசுவாசிக்கு எது கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்டதுபோல் தெரிகிறதோ அதுவே*

விசுவாசிக்கு தேவன் கொடுத்த செய்தியாக அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் இறுதி அதிகாரம் விசுவாசியின் கையிலேயே தங்கியிருக்கிறது என்பது அவர்களுடைய போதனை. இதற்கு மாறாக சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் வேதத்தை நாம் வேத விதிகளைக்கொண்டு கவனமாகப்படித்துப்புரிந்து கொள்ள வேண்டும் என்று போதித்தார்கள். கர்த்தருடைய சித்தத்தை வேதமே உள்ளடக்கி இருக்கிறதென்றும் அதை ஆவியின் துணையோடு, ஆழமாகவும், கவனமாகவும் படிப்பதன் மூலம் மட்டுமே தெரிந்து கொள்ளலாம் என்பதும் அவர்களுடைய போதனை. தனக்கு இதுதான் தேவனுடைய சித்தமாகப்படுகிறது என்று விசுவாசி எதையும் சொந்தமாகத் தீர்மானித்துவிட முடியாது. அவன் ஒரு போதனையை வேதத்தின் ஏனைய பகுதிகளனைத்தோடும் ஒப்பிட்டுப்படித்து தவறில்லாமல் விளங்கிக்கொள்ள வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டிருக்கிறான். சீர்திருத்தவாதமே வேதத்தை எப்படி முறையாகப் படிப்பது என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது.

இதனால்தான் டிவோஷனல் (devotional) முறையில் வேதத்தைப் படிப்பதையும், அந்தமுறையில் பிரசங்கம் செய்வதையும் பிரசங்கிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் நம்முடைய இருதயத்துக்கு சாமாதானம் தரும் மேலெழுந்தவாரியான சில உண்மைகளை மட்டும் தெரிந்து கொள்ள முடியுமே தவிர வேதத்தின் சகல சத்தியங்களையும், தேவனின் முழுமையான சித்தத்தையும் அறிந்து கொள்ள முடியாது. இந்த முறையில் வேதத்தைப் படிப்பதால் உடனடியாக, தற்காலிகமான ஒரு ஆறுதல் மட்டுமே கிடைக்கும். என்றும் நிலைத்திருந்து, பரிசுத்த வாழ்க்கைக்கு உதவக்கூடிய போதனைகள் கிடைக்காது. ஆகவே, வேதத்தை எப்போதும், அதன் வார்த்தைகள், இலக்கணம், வரலாற்றுப் பின்னணி, கலாச்சாரம் என்பவற்றையெல்லாம் கவனித்துப்படித்து முறையாக விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். இந்தக் கலையை நமக்குக் கற்றுத் தந்தவர்களே சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பெரியோரும்தான். அவர்களுடைய உழைப்பால் நமக்குக் கிடைத்திருப்பதுதான் விசுவாச அறிக்கை.

## 2. பரிசுத்தமாக்குதலும் விசுவாச அறிக்கையும்

பரிசுத்தமாக்குதலைப்பற்றிய ஒரு தவறான முடிவுக்கு பக்தி இயக்கம் வந்தது. அது தோன்றிய காலத்தில் ஜேர்மனியில் இருந்த சபைகளில் அது கண்ட குறைபாடுகளைத்தீர்க்க தானே ஒரு மார்க்கத்தை அது வகுத்துக்கொண்டது. சபைகளில் அன்று பக்திவிருத்தி குறைவாக இருந்ததற்கு அதிக படிப்பும், விசுவாச அறிக்கைகளும் தான் காரணமென்ற தவறான முடிவுக்கு வந்து வேதத்தைப் படித்து விளங்கிக்கொள்ள வேண்டிய முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள் ஸ்பெனரும் அவரைச் சார்ந்தவர்களும். அவர்கள் டிவோஷனல் (devotional) முறையில் மட்டுமே வேதத்தைப் படித்தார்கள்.

அத்தோடு விசுவாசிகள் பரிசுத்தமாவதற்கு அதிகமாக ஜெபிக்க வேண்டும் என்றும், கர்த்தரிடம் பாவ மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், புதிய மனிதர்களாக வாழ வேண்டும் என்றும் பேசியும், எழுதியும் வந்தார்களே தவிர, விசுவாசி வேதபோதனைகளுக்குக் கட்டுப்பட்டு கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பதை அவர்கள் ஒருபோதும் வற்புறுத்தவில்லை. பரிசுத்தமாக வாழ்வதற்கு பரிசுத்தமான எண்ணங்கள் இருக்க வேண்டும் என்பதிலேயே அவர்கள் அக்கறை காட்டினார்கள். அத்தோடு அறிவுக்கு அப்பாற்பட்ட தெய்வீக அனுபவங்களை நாடி, அந்த அனுபவங்களை அடைவதன் மூலம் பரிசுத்த-

வாழ்க்கை வாழலாம் என்ற தவறான எண்ணத்தையும் கொண்டிருந்தார்கள். இதிலிருந்துதான், நமக்குள்ளே இருக்கும் கிறிஸ்து நம் பாவத்தைப் போக்குவதால் கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணித்தால் நம் பாவமெல்லாம் போய்விடும் என்ற போதனை உருவானது (Let go and let God). அன்ட்ரூ மரேயின் (Andrew Murray) போதனைகளும், கெஸ்சிக் கன்வென்ஷன் போதனைகளும் இவற்றிற்கு நல்ல உதாரணங்கள்.

பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களான பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்களிடம் இன்று பரிசுத்தத்தையோ, கர்த்தரின் நீதிச்சட்டத்திற்கு கீழ்ப்படியும் தன்மையையோ காணமுடியாதிருக்கின்றது. மெய்யான பரிசுத்தமாக்குதலை பக்தி இயக்கம் பலவீனப்படுத்திவிட்டதால் அதைப்பின்பற்றியவர்கள் பரிசுத்தமாக்குதலைப் பற்றிய வேதபூர்வமான போதனைகளைப் பின்பற்றத் தவறினார்கள். அவர்கள் மத்தியில் இன்று ஊழல்களே மலிந்திருக்கின்றன.

இதற்கு மாறாக 1689 விசுவாச அறிக்கை பரிசுத்த வாழ்க்கை கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் மட்டும் ஏற்படுகின்றதெனப் போதிக்கின்றது. (1689:13-ம் அதிகாரம்) கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் தன்னுடைய உணர்ச்சிகளுக்கு விருந்து வைப்பதால் மட்டும் விசுவாசி பரிசுத்தத்தில் வளர முடியாது என்பதை அது வலியுறுத்துகிறது. எந்தளவுக்கு கர்த்தரின் கட்டளைகளை விசுவாசி கடைப்பிடிக்கிறானோ அந்தளவுக்கு அவன் பரிசுத்தமாக வாழ முடியும் என்பது வேதமும், விசுவாச அறிக்கையும் தரும் போதனை.

ஆகவேதான் விசுவாச அறிக்கை கர்த்தரின் நீதிச்சட்டத்தை (1689:19-ம் அதிகாரம்) வலியுறுத்துகிறது. பரிசுத்தவான்களின் விடாமுயற்சியை வற்புறுத்துகிறது. அத்தோடு மாம்சத்திற்கெதிராக நாம் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும், அதில் வெற்றி காணும் அனுபவமே பரிசுத்தமாகுதல் என்கிற வேத போதனையையும் நினைவூட்டுகின்றது. அந்தப் போராட்டத்தை நாம் வெற்றிகரமாக நடத்துகின்றபோதே நாம் ஆவியினால் வழி நடத்தப்படுகிறோம், ஆவியின் பலன்களை நம்மில் பார்க்கிறோம். அதேவேளை நாம் பாவத்தில் விழுகிறபோது, அந்தப் பாவத்திற்கு உடனடியாக முடிவுகட்டி, கர்த்தரின் மன்னிப்பை நாடி, சமாதனத்தையும் அடைய வேண்டும் என்று வேதம் கூறுகிறது. இந்தப்பரிசுத்தத்திற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடும்போது நிச்சயமாக நமது உணர்வலைகள் பாதிக்கப்படத்தான் செய்கின்றன. ஆனால், இச்செயல்கள் வெறும் உணர்ச்சிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டவையல்ல.

### 3. சமுதாயமும், விசுவாச அறிக்கையும்

பக்தி இயக்கங்கள் உலகத்தைப்பற்றிய தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தன. அனாபாப்திஸ்துகளும், மெனோனைட்ஸூம், சகோதரத்துவ சபைகளும் போரை விரும்பவில்லை, அவர்கள் உலகத்தை விட்டும், சமுதாயத்தைவிட்டும் ஒதுங்கி வாழ முயன்றார்கள். கர்த்தர் நாம் அனுபவிக்கும்படிக் கொடுத்திருக்கும் சிருஷ்டிகளையும் அனுபவிக்க மறுத்தார்கள். இவற்றை அனுபவிப்பதால் பரிசுத்தமாக்குதல் குறைந்துவிடும் என்று அவர்கள் கருதினார்கள். இதனால் அவர்கள் பரிசேயர்களைப்போல நடந்து கொண்டார்கள்.

சீர்திருத்தவாதம் கர்த்தர் படைத்த உலகம் பாவத்தால் கரைபடிந்து காணப்பட்டாலும் அதைக் கர்த்தர் இன்னும் ஆளுகிறார் என்று விளக்குகிறது. இந்த உலகத்தில் அரசாங்கங்களுக்கு நாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று

*போதிக்கின்றது. (ரோமர் 13). கிறிஸ்தவர்கள் அரச படைகளில் பணியாற்றலாம் என்றும், நாட்டின் நன்மைக்காகப் போரில் ஈடுபடலாம் என்றும் போதிக்கின்றது. திருமணத்தை எல்லோரும் நாடலாம் என்றும் குடும்ப வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்றும் போதிக்கின்றது. சந்நியாசியைப்போல் இந்த உலகத்தில் நாம் வாழ வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கவில்லை. அதேநேரம் உலக இச்சைகளுக்கு இடம் கொடுக்காமல் நீதியாக நாம் அனுபவிக்க வேண்டியவற்றை கர்த்தர் அளித்துள்ள ஈவாகக்கருதி கர்த்தரின் மகிமைக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றது. இவற்றைத் திருமணம், நீதியுள்ள ஆணையிடுதலும், வாக்குறுதியளித்தலும், குடிமக்களின் அரசு ஆகிய அதிகாரங்களில் 1689 விசுவாச அறிக்கையில் வாசிக்கலாம்.*

### *4. திருச்சபையும், விசுவாச அறிக்கையும்*

*பக்தி இயக்கம் சபையை அலட்சியம் செய்தது. சபையே எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் என்று முடிவு செய்து ஆத்துமாக்கள் சிறுகுழுக்களாகக் கூடிவந்து ஆத்மீகக் காரியங்களில் ஈடுபடுவதை வலியுறுத்தியது. இதனால் கட்டுப்பாட்டோடு, சபை அமைப்போடு விசுவாச அறிக்கைகளைக்கொண்டு சபைகள் இருப்பதையும் அது விரும்பவில்லை. இதனால்தான் சகோதரத்துவ சபைகளில் சபை அமைப்பைப் பார்க்க முடியாது. பக்தி இயக்கம் விசுவாசிகளின் ஆசாரித்துவத்தை* (Priesthood of Believers) *வலியுறுத்தினாலும் அதை தவறாக விளங்கிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஆசாரியன் ஆகவே, அவன் தான் நினைத்தவிதத்தில் செயல்படலாம், தனது வரங்களை எங்கும், எப்படி வேண்டுமென்றாலும் பயன்படுத்தலாம், சபைகளில் அவனுக்குக் கட்டுப்பாடு இருக்கக் கூடாது என்றவிதத்தில் அவர்களுடைய போதனைகள் அமைந்திருந்தன. பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களின் வளர்ச்சியாலும், தாக்கத்தாலும் இன்று எல்லா நாடுகளிலும் சபைக்கு மதிப்புக்கொடுக்காமல் தனி ஊழியம் செய்கிறவர்களின் தொகை அதிகரித்து இருப்பதைப் பார்க்கலாம். சபைகளுக்கும், சபைத்தலைவர்களுக்கும் கட்டுப்படவிருப்பமில்லாமல் ஊழியம் செய்யப்போகிறவர்கள் அனேகர். சகோதரத்துவ சபைகளிலும், பெந்தகொஸ்தே இயக்கங்களிலும், பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களான பரா-சர்ச்- இயக்கங்களிலும் இந்தப்போக்கை நாம் பார்க்கலாம். ஆராதனையில் இன்று ஒழுங்கில்லாமல் இருப்பதற்கும், சபைகளில் சபை அமைப்பும், ஒழுங்கு நடவடிக்கையும் இல்லாமலிருப்பதற்கும் பக்தி இயக்கத்தின் போதனைகள் காரணமாக இருந்திருக்கின்றன. 1689 விசுவாச அறிக்கையின் 26-ம் அதிகாரம் திருச்சபை பற்றிய வேதம் போதிக்கும் கோட்பாடுகளை முறையாக விளக்கி திருச்சபை எத்தகைய அமைப்பைக் கொண்டிருக்க வேண்டுமென்று காட்டுகின்றது.*

### *5. கிறிஸ்துவின் வருகை பற்றிய போதனை*

*பக்தி இயக்கம் கிறிஸ்துவின் வருகை பற்றிய போதனையில் அதிக நாட்டம் காட்டியது. கிறிஸ்துவின் உடனடி வருகை பற்றி இந்த இயக்கத்தைச் சேர்ந்தோர் தவறான விளக்கங்களை அளித்தார்கள். கிறிஸ்துவின் வருகைக்கு நாள் குறிப்பது இவர்களுடைய வழக்கமாக இருந்தது. சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் அந்த முறையில் விளக்கங்கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் வருகை உடனடி வருகையாக இருந்தபோதும், நாம் இன்றும் எதிர்பார்த்திருக்க வேண்டியதாக இருந்தபோதும், அடுத்த நிமிடமே அவர் வருவார் என்ற முறையில் அவர்கள் போதிக்கவில்லை. உலகத்தில் கர்த்தரின் திட்டப்படி அனைத்தும் நடக்கும் என்றும், அந்த நடவடிக்கைகளை மீறி அவர் வந்துவிடமாட்டார் என்பதையும்*

அவர்கள் நம்பினார்கள். இந்த உலகத்தில் சுவிசேஷம் பரவி சபைகள் அமைக்கப்பட்டு வளரவேண்டிய அவசியத்தை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். சகோதரத்துவ சபைகள் சபை அமைப்பிலும், சபை வளர்ச்சியிலும் ஈடுபாடு காட்டாது சுவிசேஷ ஊழியத்தில் மட்டும் ஈடுபாடு காட்டுவதற்கு பக்தி இயக்கப்போதனைகள்தான் காரணம். கிறிஸ்து அடுத்த நிமிடமே வந்துவிடுவார் எந்த நம்பிக்கையில் திருச்சபை அமைப்பில் கவனம் செலுத்தாமல், சுவிசேஷத்தை மட்டும் இருக்கின்ற நேரத்தைப் பயன்படுத்தி சொல்லிவிட்டுப் போவோம் என்பது அவர்களுடைய எண்ணமாக இருக்கின்றது. இந்த வகையிலான சிந்தனைப்போக்கை பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்கள் மத்தியில் இன்று பார்க்கலாம்.

## பக்தி இயக்கத்திலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள்

பக்தி இயக்கம் கிறிஸ்தவ வாழ்க்கை பற்றிய தவறான விளக்கங்களைத் தந்தபோதும் அதன் மூலம் நாம் படிக்க வேண்டிய சில பாடங்கள் இருப்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அவற்றில் இரண்டை நினைவுறுத்த விரும்புகிறேன்.

### 1. உணர்ச்சியற்ற, ஆத்மவிருத்திக்குதவாத, வெறும் இறையியல் அறிவுமட்டும் கொண்ட புத்திஜீவிகளாக நாம் இருக்கக்கூடாது.

பரிசேயர்கள் இப்படித்தான் இருந்தார்கள். அவர்களில் கிறிஸ்து இருக்கவில்லை. கிறிஸ்துவை நாம் மெய்யாகவே விசுவாசித்தால் வேதபோதனைகளை தாழ்மையுடன் நமது பரிசுத்த வாழ்க்கையின் வளர்ச்சிக்காக எப்போதும் படித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வெறும் புத்திஜீவிகளாக இருப்பதற்காக வேதத்தைப் படிக்கக்கூடாது. படிக்கும் சத்தியங்கள் கிறிஸ்துவை நாம் அதிகமாக நேசிக்கவும், அவரில் வளரும்படியும் செய்வதாக இருக்க வேண்டும். ஜேர்மனியில் ஸ்பெனரின் காலத்தில் இருந்த லூதரன் சபைகளில் இதற்கு இடமில்லாதிருந்ததால்தான் இறைபோதனைகள் நமக்கு உயிரளிக்காது என்ற தவறான எண்ணத்திற்கு ஸ்பெனர் வர வாய்ப்பேற்பட்டது. இன்றும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைகளை நாடி அலைகிறவர்கள் சீர்திருத்த சபைகளில் உயிர்மீட்சிக்கு இடமில்லை என்று தவறாக நினைத்து விடுகிறார்கள். ஆகவே, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதிலும், கிறிஸ்துவில் நமக்கிருக்கும் அன்பை, ஜெபிப்பதிலும், ஆராதனையிலும், சுவிசேஷம் சொல்லும்போதும், சக சகோதரர்கள் மீதும் நாம் காட்டத் தவறிவிடக்கூடாது. எந்தளவுக்கு இறைபோதனைகளை சுத்தமாக அறிந்துகொள்கிறோமோ அந்தளவுக்கு நம் வாழ்க்கையில் ஆத்மவிருத்தியும், அன்பும் இருக்க வேண்டும்.

### 2. வேத சத்தியங்களை நாம் முறையாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

நீதிமானாக்குதலுக்கும், மறுபிறப்புக்கும், பரிசுத்தமாக்குதலுக்கும் இடையில் இருந்த தொடர்பை பக்தி இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் முரண்பாடான போதனைகளை உருவாக்க நேர்ந்தது. வேத சத்தியங்களை நாம் சரியாக விளங்கிக் கொள்ளாவிட்டால் நமது விசுவாசம் பாதிப்புக்குள்ளாகும். இதைத் தவிர்த்து சபைகளும், விசுவாசிகளும் சத்தியத்தில் ஆழ்ந்த அறிவு பெறவும், நிலைத்திருக்கவும் விசுவாச அறிக்கைகள் எழுதி வைக்கப்பட்டன. வரலாற்றால் நிரூபிக்கப்பட்ட அந்த அறிக்கைகள் நாம் சரியான வேதசத்தியங்களைப் பின்பற்ற வழி செய்யும். பக்தி இயக்கத்தின் வழித்தோன்றல்களான பெந்தகொஸ்தே இயக்கங்கள் முறைப்படுத்தப்பட்ட வேத போதனைகளைப் புறக்கணிப்பதால்தான் சத்தியத்தை மீறிய போதனைகளை இன்று பின்பற்றி வருகின்றன.

# ஸ்ரீ லங்கா - அமைதி திரும்புமா?

தென் ஆசியாவில் இந்திய துணைக்கண்டத்தை ஒட்டிக்கொண்டு இந்து மகா சமுத்திரத்தில் அமைந்திருக்கும் தீவான ஸ்ரீ லங்கா இயற்கை காட்சிகள் நிறைந்த அழகான நாடு. ஐரோப்பியர்களும், ஏனைய நாட்டைச் சேர்ந்தவர்களும் போட்டி போட்டுக்கொண்டு தங்களுடைய விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக ஓடிவரும் நாடு. நாட்டைச் சுற்றியுள்ள அருமையான வெண்மணற் கடற்கரையோரங்களையும், மத்தியில் குளிர்மையான உயர்ந்த மலைப்பிரதேசங்களையும், எந்நாட்டாரையும் ஏங்க வைக்கும் கண்கவரும் சூழலையும் கொண்டு விளங்கும் நாடு ஸ்ரீ லங்கா. இத்தனைக்கும் பெயர் பெற்ற அந்நாட்டில் கடந்த 20 வருடங்களாக அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்து வந்துள்ள போர் ஒரு வருடத்திற்கு முன்பு நோர்வே நாட்டின் உதவியுடன் ஆரம்பமான சமாதானப் பேச்சு வார்த்தையின் காரணமாக ஒரு முடிவுக்கு வந்தது. போர் நிறுத்தத்தினால் உள்நாட்டில் மக்கள் எல்லா இடங்களுக்கும் பிரயாணம் செய்யவும், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு பொருட்கள் போகவும் முடிகின்றது. செக் பாயின்டுகளில் அரச படைகளின் தொல்லைகள் இல்லாமல் எங்கும் பிரயாணம் செய்ய முடிவதே பெரும் வசதிதான். இந்தப் போர் நிறுத்தத்தால் உல்லாசப் பிரயாணிகளின் வருகை இந்தவருடம் ஜனவரி மாதத்தில் மட்டும் 12% அதிகரித்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இதுவரை படைகளுக்கும், ஆயுதங்களுக்கும் செலவிட்டு வந்த கோடிக்கணக்கான பணத்தையெல்லாம் நாட்டைச் செழிப்படையச் செய்யப் பயன்படுத்தலாம் என்பதை எண்ணும்போதே மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஆனால், இது போர் நிறுத்தம்தானே தவிர பிரச்சனைகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகத் தீர்ந்துவிட்டதாக எண்ணிவிடக்கூடாது. நிலையான சமாதானம் ஏற்பட பேச்சுவார்த்தைகள் நல்லபடியாக நடக்க வேண்டும். எடுக்கப்படும் முடிவுகளுக்கு எல்லாப் பிரிவினரும் ஆதரவு கொடுத்து நாடு அதை அங்கீகரிக்க வேண்டும். இத்தனையும் நடக்க அதிக காலங்கள் எடுக்கலாம் என்பதை அரசும், விடுதலைப் புலிகளும் உணர்ந்திருக்கின்றனர். ஸ்ரீ லங்காவின் சமாதானத்திற்காகவும், தொடர்ந்து நடந்து வரும் பேச்சு வார்த்தைகள் நல்லபடியாக முடியவும் நாம் ஜெபிப்பது அவசியம்.

1516ல் இருந்து போர்த்துக்கேயரும், ஒல்லாந்து தேசத்தாரும், பிரித்தானியர்களும் மாறி மாறி ஸ்ரீ லங்காவை 500 வருடங்களுக்கு ஆண்டு வந்துள்ளனர். 1948ம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்து நாடு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. 1956ல் சிங்கள மொழி அரச மொழியாக்கப்பட்டதால் தமிழர்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்து எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்தனர். இன்று ஓரளவுக்கு அரசும், புலிகளும் ஒப்புக்கொண்டுள்ள பிரதேச நிர்வாகப்பங்கீடு, ஆட்சியில் தமிழர்களுக்கு சம அதிகாரம் என்ற கொள்கைகளை தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்த "தந்தை செல்வா" என்று அழைக்கப்பட்ட செல்வநாயகம் அப்போதே கேட்டுப் பார்த்தார். அன்று அதற்கு அரசு உடன்படவில்லை. போரால் 60,000 பேர் இறந்தபிறகு இன்று அதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "கண்கெட்ட பிறகு சூரிய தரிசனம்" என்று இதைத்தான் சொல்கிறார்களோ. எது எப்படியிருந்தாலும் இன்றாவது அமைதிக்கு வழி ஏற்பட்டிருக்கிறதே.

போர்த்துக்கேயர் ஸ்ரீ லங்காவில் ரோமன் கத்தோலிக்க மதத்தையும், ஒல்லாந்து தேசத்தவர்கள் டச்சு சீர்திருத்த சபைகளையும், பிரித்தானியர் ஆங்கிலிக்கன்

சமயப்பிரிவையும் ஸ்ரீ லங்காவில் அறிமுகப்படுத்தினர். மொரேவியன் மிஷனரிகள்கூட ஸ்ரீ லங்காவிற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இன்று நாட்டில் எல்லா சமயப் பிரிவுகளையும் பார்க்கலாம். பெந்தகொஸ்தே சபைகளும், கெரிஸ்மெட்டிக் சபைகளும் ஏராளம். புற்றீசல்கள் போல் இவர்கள் எல்லா இடங்களிலும் சபைகளை ஆரம்பித்து விடுகிறார்கள். பெந்தகொஸ்தே சபைகள் அனைத்தும் அமெரிக்காவில் இருந்தும், இந்தியாவில் இருந்தும், கொரியாவில் இருந்தும் வரும் அத்தனை மோசமான போதனைகளையும் அரவணைத்து அநேக ஆத்துமாக்களை ஏமாற்றி வருகின்றன. ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு இச்சபைகளில் இடமில்லை. இச்சபைகளில் ஒழுக்கக் குறைவாக நடந்து கொள்கிற போதகர்களைப் பற்றி நாட்டின் நாளிதழ்களில் கூட செய்திகள் வந்திருக்கின்றன. வேத அடிப்படையிலான இறையியல் போதனைகளை துச்சமாக எண்ணி, அனுபவத்திற்கு மட்டும் ஆரத்தி எடுத்து வரும் இச்சபைகளை சுவிசேஷ இயக்கத்தின் பிரதிநிதிகளாகக் கருத முடியாது.

ஒருநாள் இந்நாட்டின் தலைநகரில் ஒரு கிறிஸ்தவ புத்தகக்கடைக்கு நான் சென்ற போது பரிசுத்த ஆவியானவர் பற்றி தமிழில் வந்துள்ள ஒரு நல்ல சிறு நூல் ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். குனிந்து அதை நான் எடுக்க முயன்றபோது. அதைத் தொடாதீர்கள்! என்ற ஒரு குரல் பின்னால் இருந்து வந்தது. திரும்பி ஏன், என்று குரல் கொடுத்த கடைக்காரரை நான் கேட்டபோது, அது மோசமான புத்தகம் என்று கேள்விப்பட்டோம், அதனால் அதை நாங்கள் விற்பதில்லை என்ற பதில் கிடைத்தது. அந்தப்புத்தகத்தில் அப்படி என்ன மோசமான போதனை இருக்கின்றது என்ற என்னுடைய கேள்விக்கு கடைக்காரரால் பதில் கூற முடியவில்லை. சரி, இதை நீங்கள் விற்கப்போவதில்லை. இருக்கின்ற அத்தனை புத்தகத்தையும் எனக்கு விற்று விடுங்களேன் என்று பேரம் பேசி அத்தனையையும் (175 புத்தகங்கள்) வாங்கிக் கொண்டேன். அந்த நூல் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி விளக்கும் தமிழில் இருக்கின்ற ஒரு நல்ல சிறு நூல். புத்தகக்கடைக்காரர் பெந்தகொஸ்தே சபையைச் சேர்ந்தவராக இருப்பதாலும், அறியாமையாலும் அதன் மகிமை தெரியாமல் புத்தகத்தை நிராகரித்து விட்டார். இந்நாட்டில் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் மாயை எந்தளவுக்கு மக்களை சிந்திக்கவிடாமல் வசப்படுத்தியிருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

ஏராளமான சபைத்தொடர்பில்லாத பரா-சர்ச் (Para-church) ஸ்தாபனங்களையும் நாட்டில் பார்க்கலாம். இளைஞர்களை வசப்படுத்தி வரும் இந்த ஸ்தாபனங்களால் சபைகளுக்கு எந்தப் பயனுமில்லாமல் இருக்கின்றது. சபைகளைத் தொடர்ந்து குறைகூறி தங்கள் ஸ்தாபனங்களையே இவை வளர்த்து வருகின்றன. முக்கியமாக இந்த ஸ்தாபனங்கள் உறுதியான ஒரு இறையியல் கோட்பாட்டைக் கொண்டிருப்பதில்லை. இவை எல்லாப் பாரம்பரிய (லிபரல்) சமயப்பிரிவுகளோடும், பெந்தகொஸ்தே சபைகளோடும் இணைந்து எல்லோரோடும் ஒத்துப்போகக்கூடிய சமயசமரசப்போக்கைப் பின்பற்றி வருபவையாகவே இருக்கின்றன.

பாரம்பரிய சபைப்பிரிவுகள் (Mainline churches) அனைத்தும் லிபரலிசத்தால் பாதிக்கப்பட்டு வேதத்தை நிராகரித்துவிட்டு சுவிசேஷ வாஞ்சையையும் இழந்து நிற்கின்றன. சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக தம்மைக் கருதுகின்ற பல சபைகளும்கூட சமயசமரசப் போக்கை (Ecumenism) வெளிப்படையாகவே பின்பற்றுகின்றன. ஸ்ரீ லங்காவின் சுவிசேஷ சபைகளின் கூட்டுப் பேரவை என்றழைக்கப்படும் அமைப்பும் குறைந்தளவிலான விசுவாச அறிக்கையைக் கொண்டு லிபரலிசத்தைப் பின்பற்றும் சபைகளையும், கெரிஸ்மெட்டிக் சபைகளையும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களையும் உள்ளடக்கி இயங்கி வருகின்றது. இது புதிய சுவிசேஷ கோட்பாடுகளின் (New Evangeli-

calism) அடிப்படையிலான அமைப்பே தவிர சுவிசேஷ இயக்கத்தைப் (Evangelicalism) பிரதிபலிக்கும் அமைப்பல்ல.

இத்தனைக் குழப்பங்களுக்கும் மத்தியில் சீர்திருத்தப் போதனைகளிலும், சபை அமைப்பிலும் ஆர்வம் கொண்டு ஓரிரு சீர்திருத்த சபைகள் இன்று தோன்றி நிற்பது மகிழ்ச்சி தருகின்றது. இவை சத்தியத்தில் வாஞ்சையுள்ளவையாக, வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை வைத்து, சமய சமரசப் போக்குக்கு இடங்கொடுக்காமல், சுவிசேஷ வாஞ்சையுடன், தொடர்கின்ற சீர்திருத்தத்தை (Continuing Reformation) தங்களுடைய சபைகளில் நடத்திவருமானால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்.

ஸ்ரீ லங்காவில் இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் பொதுவாக வேதத்திற்கு அதிக மதிப்பில்லாதது வருத்தத்தைத் தருகிறது. வேதத்தை அனேகர் பயன்படுத்துகிற போதும் அதையே கர்த்தரின் இறுதி வெளிப்பாடாக அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதுவும் சரி, அதுவும் சரி என்ற போக்கில் எந்தப் போதனைக்கும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. சத்தியம் ஒன்றே! என்ற சிந்தனை அனேகருக்கு இல்லை. சத்தியத்தை, சத்தியம் என்று ஆணித்தரமாக சொல்லிப் பிரசங்கிப்பவர்களும் குறைவு. மற்றவர்களுடைய முகம் கோணக்கூடாது என்பதற்காக எல்லோருடனும் ஒத்துப்போய் சத்தியத்தை விலை பேசுகிறவர்கள் அதிகம். இந்தப் போக்கிற்கு இந்நாட்டில் இருக்கும் இறையியல் கல்லூரிகளும் தூபம் போட்டுக்கொண்டிருக்கின்றன. எல்லா சபைப் பிரிவினரோடும் ஒத்துப்போகும் விதத்திலும், பெந்தகொஸ்தே சபைகளையும் பாதிக்காத விதத்திலும் வேத போதனைகளை அளிப்பது இந்நாட்டின் முக்கிய (புதிய) சுவிசேஷ இறையியல் கல்லூரிகளின் போக்காக இருக்கின்றது. இது சமயசமரசப் போக்கு (Ecumenism) என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. இந்தக் குளருபடியான கிறிஸ்தவ சூழ்நிலைக்கு மத்தியில் துணிவோடும், ஆவியின் பலத்தோடும், சேர வேண்டியவர்களோடு மட்டும் சேர்ந்து உழைக்கக்கூடிய ஊழியக்காரர்களும், சபைகளும் நாட்டுக்கு அவசியம் தேவை.

போனவருடம் தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதுபோல் கட்டாய மதமாற்றத்தடுப்பிற்கான ஒரு சட்டத்தை ஸ்ரீ லங்காவின் இந்துக்கலாச்சார அமைச்சர் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். ரோமன் கத்தோலிக்கசபையும், பௌத்த தீவிரவாதிகளும் இதற்கு ஆதரவாக இருப்பதாகவும் பேச்சு. இது சட்டமாக அமுலுக்கு வருமா, இல்லையா என்பது இப்போது தெரியவில்லை. ஆனால், கிறிஸ்தவத்திற்கு நாட்டில் ஒரு புதிய ஆபத்து துளிர்விட்டிருக்கிறது என்பதைக் கிறிஸ்தவர்களில் பலர் உணர்ந்திருக்கிறார்கள். நாட்டில் அமைதி ஏற்பட்டு, சீர்திருத்த சத்தியங்களின் அடிப்படையில் கிறிஸ்தவ சபைகள் தமிழர்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் தோன்றி வளரக் கர்த்தர் இந்நாட்டை ஆசீர்வதிக்கட்டும்.

## ஸ்ரீ லங்காவில் “திருமறைத்தீபம்”

ஸ்ரீ லங்கா வாசகர்களுக்கு மட்டும் “திருமறைத் தீபம்” இந்த இதழோடு ஸ்ரீலங்காவில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. இனி ஸ்ரீ லங்கா வாசகர்கள் பத்திரிகையை கீழ்வரும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியருக்கான உங்களுடைய கடிதங்களை மட்டும் நியூசிலாந்து முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஏனைய நாடுகளில் இருப்பவர்களுக்கு பத்திரிகை நியூசிலாந்தில் இருந்து தொடர்ந்து அனுப்பப்படும்.

*Grace Literature, 19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

# ஏரியனும், சபைக் கவுன்சில்களும்

திருச்சபை வரலாறு

திருச்சபையில் 4-ம், 5-ம் நூற்றாண்டுகளில் வேத போதனைகள் சம்பந்தமான கடுமையான கருத்து வேறுபாடுகள் நிகழ்ந்து வந்திருந்திருக்கின்றன. முக்கியமாக இக்கருத்து வேறுபாடுகள் கிறிஸ்துவின் தெய்வீக, மானுட தன்மைகளைப் பற்றியதாக இருந்தன. இக்காலங்களில் தனது போதனைகள் வேதபூர்வமானவையாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய நிலை திருச்சபைக்கு ஏற்பட்டது. சபைத்தலைவர்கள் கூடி வேத போதனைகள் சம்பந்தமான விவாதங்களை நடத்தி தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டியிருந்தது. இந்தக் காலப்பகுதியில் திருச்சபை நான்கு முக்கிய சமயக் குழுக்களை (Church Councils) சந்தித்தது. இந்தக் குழுக்கள் திருச்சபையின் முக்கியமான தலைவர்களை உள்ளடக்கி சமய சம்பந்தமான கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து முடிவெடுக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்தன. இந்தக் காலப்பகுதியில் இறையியல் போதனை சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் இக்காலப்பகுதிக்குப் பிறகும் சபைகளைப் பாதித்தன. அத்தகைய இறையியல் கருத்து வேறுபாடுகளில் ஒன்றுதான் "ஏரியனின் கருத்துவேறுபாடு" (Arian Controversy) என்று வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்படுகின்றது.

இந்தக் கருத்து வேறுபாடு திருச்சபையில் பிரிவினையை ஏற்படுத்தி மூன்று நூற்றாண்டுகளுக்கு அதைப் பாதித்ததாக இருந்தது. அலெக்சாந்திரியாவில் திருச்சபைக்குத் தலைவனாக, பிசப்பாக இருந்த ஏரியன் (Arian) என்பவனே இந்த முரண்பாட்டிற்குக் காரணமானவனாக இருந்தான். 318-ம் ஆண்டுகள் அளவில் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைபற்றி சபை கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்க்கக்கூடிய கருத்துவேறுபாடுகளை ஏரியன் உருவாக்கினான். கிறிஸ்து ஒன்றுமில்லாமலிருந்து மனித உருவில் தேன்றினார் என்று ஏரியன் போதிக்க ஆரம்பித்தான். அதாவது, அவர் ஒருகாலத்தில் இருக்கவேயில்லை; பின்பு உருவாக்கப்பட்டு பிறந்தார் என்று ஏரியன் போதித்தான். இந்தக் கருத்துப்படி கிறிஸ்து பிதாவைவிட தெய்வீகத் தன்மையில் குறைந்தவராக இருக்கிறார் என்று ஏரியன் விளக்கினான். அலெக்சாந்திரியாவின் பிசப்பாக இருந்த அலெக்சாண்டர் 320-ல் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, கிறிஸ்து தன் பிதாவுடன் ஒரேவிதத்திலான தெய்வீகத்தைக் கொண்டிருந்து நித்தியத்திலிருந்து அவரோடு இருக்கிறார் என்று விளக்கமளித்தான். ஏரியன் தன்னுடைய போதனைகளை நேரடியாக விளக்காமல் மறைமுகமாக பரப்ப முயற்சித்தான். 321-ல் ஏரியன் பதவி நீக்கம் செய்யப்பட்டான். ஆனால், அவன் மிகவும் திறமைசாலியாக இருந்ததால் மாகேரியஸ் (Macarius), எருசலேமின் பிசப், வரலாற்றறிஞனான சீசரேயாவின் எசூபியஸ் (Eusebius Caesarea), நிக்கொமீடியாவின் எசூபியஸ் (Eusebius Nicomedia) போன்றோரைக் கவர்ந்திருந்தான்.

அலெக்சாந்திரியாவின் பிசப்புக்கும், ஏரியனுக்குமிடையில் இருந்த கருத்து வேறுபாடுகளை நீக்கும் எல்லா முயற்சிகளும் வீண்போனதால் பேரரசனான கொன்ஸ்டன்டைன் (Constantine) 324-ல் ஒரு பொதுக் கவுன்சிலை ஆசியா மைனரின் வடமேற்குப் பகுதியிலுள்ள நைசியா (Council of Nicea) என்ற

இடத்தில் கூட்டினான். இதுவே வேதபோதனைகள் சம்பந்தமான முரண்பாடு-களைத் தீர்க்கக் கூட்டப்பட்ட முதலாவது கவுன்சில். ஸ்பெயினில் இருந்து பாரசீகம் வரையிலுமுள்ள பலவித சபைகளைச் சேர்ந்த 318 தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். கோர்டோபாவைச் சேர்ந்த ஹோசியஸ் (Hosius of Cordoba) என்ற அருமையான மனிதனை தலைவராகக்கொண்டு, பேரரசன் முன்னிலையில் இந்தக் கவுன்சில் கூடியது. இதில் கலந்து கொண்ட அனேகர் கிறிஸ்துவிற்காகத் துன்பங்களை அனுபவித்ததற்கான அடையாளங்களை தங்க-ளுடைய சரீரங்களில் கொண்டிருந்தனர். சிலருக்கு கால்கள் இல்லாமலும், கரங்கள் வெட்டப்பட்டும், கண்கள் குருடாகியும், அங்கங்கள் சிதைக்கப்பட்டும் இருந்தன. கிறிஸ்துவுக்காக அத்தனைத் துன்பங்களையும் தாங்கியிருந்த இந்தத்தலைவர்களை பேரரசனே முன்னின்று வரவேற்ற இந்தக் கவுன்சில் கூட்டம் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்ததாக இருந்தது.

அன்று நடந்த விவாதத்தில் கிறிஸ்து கர்த்தருடைய அதே தன்மைகளைக் கொண்டவராக இருந்தாரா? (Homousios - Same nature), அல்லது கர்த்தரைப்-போலத் தோற்றமளிப்பவராக மட்டும் (Homoiousios - Similar nature) இருந்-தாரா? என்ற கேள்விக்கு பதில் காண முயற்சி எடுக்கப்பட்டது. இந்த விவாதத்-தில் முக்கிய பங்கு வகித்தவர்கள் அத்தனேசியஸ் (Athanasius) என்ற திருச்சபை உதவியாளனும், மூப்பராக இருந்த ஏரியனுமே. விவாத ஆரம்பத்தில் இரண்டு பக்கத்தையுமே சாராத ஒரு முடிவுக்கு வரும்படியாக விவாதம் போய்க் கொண்டிருந்தது. ஆனால், இறுதியில் வேதத்தின் அடிப்படைக் கோட்பாடு-களில் நம்பிக்கை வைத்திருந்தவர்கள் பெரும்பாலான வாக்குப்பலத்துடன், கிறிஸ்து கர்த்தருடைய ஒரே குமாரன் என்றும், பிதாவிடத்தில் இருந்துவந்த ஒரே குமாரன் என்றும், பிதாவின் அதே தன்மைகளைக் கொண்டிருந்த கர்த்தர் என்றும் அதிகாரபூர்வமாக அறிவித்தனர். கிறிஸ்தவ சபை வரலாற்றில் இந்தக் கவுன்சிலின் முடிவு மிக முக்கியமானதொன்றாகும்.

கிறிஸ்துவைப் பற்றிய வேதத்திற்கு முரணான போதனைகளை உருவாக்கிய ஏரியன் பெரும் அவமானத்துக்குள்ளாக்கப்பட்டு இரண்டு பேரோடு இல்லிரியா (Illyria) என்ற இடத்திற்கு நாடு கடத்தப்பட்டான். ஆனால், இரண்டு வருடங்-களுக்குப் பிறகு பேரரசனான கொன்ஸ்டன்டைன் ஏரியனை வரவேற்றதுடன் அத்தனேசியஸை நாடுகடத்தியதால் சச்சரவு மீண்டும் பெரிதாகி கசப்புணர்-வுகள் எல்லை கடந்து போய் திருச்சபையைப் பாதித்தன. ஏரியனை மறுபடியும் சபை மூப்பனாக நியமிக்க அலெக்சாந்திரியாவின் பிசப்பாக அப்போது இருந்த அத்தனேசியஸ் மறுத்ததாலேயே கொன்ஸ்டன்டைன் அத்தனேசியஸை டிரவேஸ் (Treves) என்ற பகுதிக்கு நாடு கடத்தினான். குறைந்தது ஐந்து தடவை-கள் அத்தனேசியஸ் மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டு வெவ்வேறு இடங்க-ளுக்கு மறுபடியும் நாடு கடத்தப்பட்டான். ஒவ்வொரு தடவையும் அத்தனேசி-யஸ் திரும்பிவந்தபோது மெய்க்கிறிஸ்தவர்களான அவனுடைய ஆதரவாளர்கள் பேரானந்தத்துடன் அவனை வரவேற்றனர். ஏரியனும் அவனுடைய ஆதர-வாளர்களும் பலவிதமான தொல்லைகளை இழைத்தனர். அத்தனேசியஸுக்கு எதிராக முழு உலகமே நிற்பது போலவும், அத்தனேசியஸ் முழு உலகத்தையும் எதிர்த்து தனியே நிற்பது போலவும் பல தடவைகள் நிலமை இருந்தது. தன்னு-டைய வாழ்நாளில் பெரும்பகுதியை நாடு கடத்தப்பட்டும், தொல்லைகளை அனுபவித்தும் கழித்திருந்த அத்தனேசியஸ் தனது வாழ்நாளின் கடைசி ஐந்து வருடங்களை (367-373) அலெக்சாந்திரியா திருச்சபையில் கழிக்க முடிந்தது.

திருச்சபை கண்ட தவப்புதல்வர்களில் ஒருவன் அத்தனேசியஸ்.

திருச்சபை கண்ட இரண்டாவது கவுன்சில் 381-ல் கூட்டப்பட்டது. இது கொன்ஸ்டான்டிநோபிள் கவுன்சில் (The Council of Constantinople) என்று அழைக்கப்பட்டது. 186 பிசப்புக்கள் இதில் கலந்து கொண்டனர். இந்தக் கவுன்சில் மெக்கடோனியஸ், செபேலியஸ் ஆகியோரின் பரிசுத்த ஆவியின் தெய்வீகத்திற்கெதிரான போதனைகளை நிராகரித்து சத்தியத்தை நிலை நிறுத்தியது.

இதற்குப்பிறகு 431-ல் எபேசியாவில் கூடியது மூன்றாவது கவுன்சிலான எபேசியக் கவுன்சில் (Council of Ephesus). இந்தக் கவுன்சில் கொன்ஸ்டான்டி-நோபிளின் பிசப்பாக இருந்த நெஸ்டோரியஸ் (Nestorius) என்பவனின் போதனைகளை நிராகரித்து அவனை நாடுகடத்தியது. நெஸ்டோரியஸ் மொனோபிசைட்ஸ் (Monophysites) என்பவன் கிறிஸ்துவைப்பற்றிப் போதித்த தவறான போதனைகளை மறுத்து விளக்கமளிக்க முற்பட்டபோது கிறிஸ்துவில் இரண்டு ஆட்கள் (Two persons) இருப்பதாக தவறாக விளக்கமளித்தான். மோனோபிசைட்ஸ், கிறிஸ்துவில் ஒரே ஆள்தன்மை மட்டுமே இருப்பதாகவும், அவருடைய தெய்வீகத்தன்மை மானுட தன்மையை கபலீகரம் செய்துவிட்ட-தாகவும் தவறாகப் போதித்தான். இதற்கு எதிராக விளக்கம் கொடுத்த நெஸ்டோரியஸ் கிறிஸ்துவின் தெய்வீக, மானுட தன்மைகளை விளக்கும்போது ஒருபடி மேலே போய் அவரில் இரண்டு ஆட்கள் இருப்பதாக முரண்பாடாக விளக்கமளித்தான். இதைத் தீர்க்கவே எபேசியக் கவுன்சில் கூடியது. இதே காலப் பகுதியில் திருச்சபையில் திருமணம் ஆகாமல் தனித்திருப்பதை வலி-யுறுத்துவது அதிகரித்து வந்ததால் மேரி ஒருபோதும் கன்னித்தன்மையை இழக்க-வில்லை என்ற போதனையும் வலுவடைந்தது. மேரியை மகிமைப்படுத்தும் விதத்தில் தியோடோகஸ் (Theotokos - The Mother of God) என்ற பெயரும் அவளுக்கு வழங்கப்பட்டது. நெஸ்டோரியஸ் இதை எதிர்த்து மேரி மானுடரான கிறிஸ்துவுக்கே தாயாக இருந்ததாகவும், தெய்வீகக் கிறிஸ்துவுக்கு தாயாக இருக்கவில்லை என்றும் போதித்தான். நெஸ்டோரியஸினுடைய போதனை-களை ஆராய்ந்த எபேசியக் கவுன்சில் அவனைக் குற்றவாளியாகக் கண்டு தெபேய்ட் (Thebaid) வனாந்தரத்துக்கு நாடுகடத்தியது.

நெஸ்டோரியஸுக்கு பாரசீகம், சிரியா போன்ற நாடுகளில் ஆதரவாளர்கள் இருந்ததால் அவர்கள் அங்கு நெஸ்டோரியன் சபையை நிறுவினார்கள். இது பின்பு பாரசீகத்திலும், ஆர்மீனியாவிலும் நிறுவப்பட்டது. இச்சபை மிஷனரிகள் வேறு நாடுகளுக்கும் சென்று 625-ல் சீனாவையும் அடைந்தனர். இந்தச் சபையை மெசப்பட்டோமியா, ஆர்மீனியா ஆகிய நாடுகளில் இன்றும் காணலாம். நெஸ்-டோரியன் மிஷனரிகள் இந்தியாவின் தென்கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்-குப் போய் அங்கு ஒரு சபையை நிறுவியிருக்கின்றனர். அதன் மிச்சங்களை இன்றும் கேரளாவில் பார்க்கலாம். நெஸ்டோரியஸ் நாடு கடத்தப்பட்டு இருபது வருடங்கள் சென்றபின், நெஸ்டோரியஸுக்கு எதிராக எபேசியக் கவுன்சிலில் செயல்பட்ட யூடிக்கஸ் (Eutyches), கிறிஸ்துவில் தெய்வீகத் தன்மை மட்டுமே இருப்பதாகப் போதித்தாக குற்றஞ்சாட்டப்பட்டு, கெல்சிடன் கவுன்சிலின் (Council of Chalcedon) கண்டனத்துக்குள்ளானான். 500 பிசப்புக்களை உள்ள-டக்கியிருந்த இந்தக் கவுன்சில், தெய்வீகம், மானுடம் ஆகிய இரு தன்மைகளும் மாறாத்தன்மையுடனும், ஒன்றுடன் ஒன்று கலக்காமலும் கிறிஸ்துவில் இருப்பதாகத் தீர்ப்பளித்தது.

- புதிய வெளியீடு -

# சீர்திருத்த விசுவாசம்

திருமறைத்தீப ஆசிரியர் (ஆர். பாலா) எழுதியுள்ள புதிய நூலான "சீர்திருத்த விசுவாசம்" இலங்கையில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றது. சீர்திருத்த விசுவாசத்தைக்குறித்த தவறான கருத்துக்களை சுட்டிக்காட்டி, வரலாற்று ரீதியிலான அந்த விசுவாசத்தை தெளிவாக விளக்கி இலகுவான தமிழில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சீர்திருத்த விசுவாசம் என்றால் என்ன, என்று அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்நூல் நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும். அத்தோடு சீர்திருத்த சபைகளைச் சேர்ந்தவர்கள் வேத அடிப்படையிலான, தொடருகின்ற சீர்திருத்தத்தை தங்களுடைய சபைகளில் நடத்திச்செல்லவும் இந்நூல் துணைபுரியும். கீழ் வரும் முகவரியில் இருந்து இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

*ஸ்ரீ லங்காவில்:*
கிருபை இலக்கியம், 19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6
விலை: ரூ. 65/-


## ஸ்ரீ லங்காவில் எமது வெளியீடுகள்

1689 விசுவாச அறிக்கை (1689 Confession of Faith)
சிறுவர்களுக்கான வேத உபதேசம் (Shorter Catechism)
பரிசுத்த வேதாகமம் - ஆர். பாலா & ஜோன் ரூத்தர் (புதியது)
சீர்திருத்த விசுவாசம் - ஆர் பாலா (புதியது)
திருச்சபை சீர்திருத்தம்
இந்திய வேதங்களில் இயேசுவா!
புதிய சுவிசேஷ இயக்கமும், சுவிசேஷ இயக்கமும்
தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு - ஜேம்ஸ் அடம்ஸ்
கிறிஸ்தவன் யார்? - அல்பர்ட் என். மார்டின்
உப்பு தன் சாரத்தை இழந்தால் - மொரிஸ் ரொபட்ஸ்
போல் யோங்கி சோவின் நான்காம் பரிமாணம்
கிறிஸ்தவ இறையியல் - அறிமுகம்
வேதத்தை விளங்கிக் கொள்வது எப்படி?
வியாக்கியானப் பிரசங்கம்
குடும்ப ஆராதனை

*Grace Literature, 19 Rajasinghe Road, Colombo 6*

# அப்போஸ்தல வரம்

பத்திரிகையில் பல வருடங்களுக்கு முன்பு (1995) அப்போஸ்தலப் பணி தொடர்கிறதா? என்ற தலைப்பில் எழுதியிருந்தோம். சமீபத்தில் நான் ஒரு பத்திரிகையில் வாசிக்க நேர்ந்த கட்டுரை காரணமாக இதுபற்றி விளக்கமாக எழுதுவது அவசியம் என்று உணர்ந்தேன். அப்போஸ்தலப்பணி பற்றி இன்று மூன்றுவிதமான கருத்துக்கள் உலவுகின்றன.

1. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் மட்டுமே இன்று அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள் என்றும், அப்போஸ்தல வரங்கள் சபைக்குத் தொடர்ந்தும் கொடுக்கப்படுகின்றன என்றும் விசுவாசிக்கிறார்கள்.

2. அப்போஸ்தலர்கள் (பன்னிருவர்) இன்று இல்லை. ஆனால், அப்போஸ்தல வரங்கள் மட்டும் இன்று சபைக்குத் தொடர்ந்தும் கொடுக்கப்படுகிறது என்று விசுவாசிப்பவர்கள் வேறுசிலர். இவர்களை எல்லாக் கிறிஸ்தவ சமயப்பிரிவுகளிலும் (Denomination) பார்க்கலாம்.

3. அப்போஸ்தலர்களோ, அப்போஸ்தல வரங்களோ இன்று சபையில் இல்லை என்று விசுவாசிப்பவர்கள் மூன்றாவது பகுதியினர். இவர்கள் பெரும்பாலும் சீர்திருத்த போதனைகளைப் பின்பற்றுகிறவர்களாக இருப்பார்கள்.

இந்த மூன்றில் எது சரி என்று நாம் நமது அனுபவத்தின் அடிப்படையிலோ, விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையிலோ தீர்மானித்துவிட முடியாது. அவ்வாறு எடுக்கும் தீர்மானம் வேத அடிப்படையில் அமைந்ததாகாது. நாம் எடுக்கும் தீர்மானம் வேதத்தை முறையாக ஆராய்ந்து எடுப்பதாக இருக்க வேண்டும். ஆகவே, வேதம் அப்போஸ்தலர்களைப்பற்றியும், அப்போஸ்தல வரங்களைப் பற்றியும் என்ன சொல்கிறது என்று பார்ப்பது அவசியம்.

அப்போஸ்தலர் (Apostle) என்ற வார்த்தைக்கு அதிகாரபூர்வமாக அனுப்பப்பட்டவர் (Sent one) என்பது பொருள். இந்த வார்த்தையில் இருந்து தான் இன்று நாம் பயன்படுத்தும் மிஷனரி என்ற பதம் வந்தது. மிஷனரி என்ற பதம் அனுப்பப்பட்டவர் என்ற பொருளைக்கொண்டு இலத்தீன் மொழியில் இருந்து ஆங்கிலத்திற்கு வந்தது. அப்போஸ்தலர் என்ற வார்த்தை வேதத்தில் இரண்டு விதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறியலாம். அவை என்ன என்று பார்ப்போம்.

## இயேசு நேரடியாகத் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்கள்

அப்போஸ்தலர் என்ற வார்த்தை வேதத்தில் இயேசு கிறிஸ்து தனக்கு நெருக்கமான சீடர்களாக, புதிய ஏற்பாட்டு சபையை எழுப்புவதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிருவரைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பன்னிருவரும் விசேட தகுதிகளையும், அதிகாரத்தையும் கொண்டு, புதிய ஏற்பாட்டில் மட்டும் காணக்கூடிய பணியினைச் செய்தவர்களாக இருந்தனர். இவர்களை இயேசு கிறிஸ்துவே நேரடியாகத் தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய ஏனைய சீடர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் இருந்தது. அந்த வித்தியாசம் அவர்களுடைய ஆத்மீக அனுபவங்களில் இல்லாமல் அப்போஸ்தலர்களுடைய தகுதிகளிலும்,

பணிகளிலும் இருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்றிய எல்லோருமே கிறிஸ்துவின் சீடர்களாக இருந்தபோதும் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினால் பயிற்சியளிக்கப்பட்டு அவருடைய பிரதிநிதிகளாக திருச்சபையை நிறுவுவதற்காக கிறிஸ்துவால் அழைக்கப்பட்டிருந்தனர்.

## அப்போஸ்தலர்களின் தகுதிகள்

அப்போஸ்தலர்களாக கிறிஸ்து பன்னிரெண்டு பேரைத் தெரிந்து கொண்டார். அதற்கு மேல் அவர் பவுலைத்தவிர வேறு எவரையும் அப்போஸ்தலராகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதை புதிய ஏற்பாட்டில் இருந்து அறிந்து கொள்கிறோம். முதல் இந்தப் பன்னிருவரை வேதம் அடிக்கடி பன்னிருவர் என்றும், அப்போஸ்தலர் என்றும் குறிப்பிடுகின்றது. இந்தப்பன்னிருவர் குழுவில் சேருவதற்கான தகுதிகளை நாம் அப்போஸ்தலர் நடபடிகள் 1-ம் அதிகாரத்தில் இருந்து அறிந்து கொள்கிறோம் (அப்போஸ். 1:16-22). இந்தப்பகுதி இந்தப்பன்னிருவர் குழுவில் இருந்தவர்கள் யார் என்றும் விளக்கமளிக்கிறது (அப்போஸ். 1:13).

யூதாஸ் இறந்தபிறகு இன்னொருவரை அப்போஸ்தலராகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தது. பன்னிரு அப்போஸ்தலர்களை அடிப்படையாகக் கொண்டே இந்த உலகில் புதிய ஏற்பாட்டு சபை ஆரம்பமாக வேண்டும். ஆகவே, ஏனைய அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் கட்டளையின்படி எருசலேமில் மேல்வீட்டில் தங்கியிருந்தபோது தங்கள் குழுவில் இன்னொருவரைச் சேர்த்துக் கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள். அப்போஸ்தலராக இருக்க வேண்டிய தகுதிகளைக்கொண்டிருந்த இரண்டு பேரின் பெயரைத் தெரிவு செய்து கிறிஸ்துவின் வழிப்படி சீட்டுப் போட்டுப் பார்த்து அவர்களில் ஒருவரைப் பன்னிரெண்டாம் நபராகத் தெரிந்து கொண்டார்கள். இது ஏனோதானோ என்று செய்யப்பட்ட காரியமல்ல. அப்போஸ்தலர் கிறிஸ்துவின் ஆலோசனைப்படி இந்தக் காரியங்களைச் செய்தார்கள். பழைய ஏற்பாட்டிலும் இப்படி நடக்க வேண்டியதாக எழுதி வைக்கப்பட்டிருந்தது (சங்கீதம் 69:25). அத்தோடு, கிறிஸ்துவே அப்போஸ்தலர்களை ஒவ்வொரு காரியத்திலும் வழிநடத்தி வந்திருந்தார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அப்போஸ்தலர் நடபடிகள் 1:21-22 ஆகிய வசனங்கள் அப்போஸ்தலர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பின்வருமாறு விளக்குகிறது:

1. யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயரெடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரையும் இயேசு கிறிஸ்துவோடும், அவருடைய அப்போஸ்தலர்களுடனும் சஞ்சரித்த மனிதனாக இருக்க வேண்டும்.

2. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கு அவருடைய சீடர்களோடு இருந்து சாட்சி கொடுத்தவனாக இருக்க வேண்டும் (அப்போஸ். 1:22-23; 1 கொரி. 9:1).

3. அதுமட்டுமல்லாமல் மூன்றாவது தகுதியொன்றையும் வேதம் நமக்குப் புலப்படுத்துகிறது. பன்னிருவரை கிறிஸ்து நேரடியாகத் தானே தெரிவு செய்து அவர்களுக்கு “அப்போஸ்தலர்” என்ற பெயரையும் சூட்டினார் என்பதை மத்தேயு 10:2-4; மாற்கு 3:14-19; லூக்கா 6:13-16 ஆகிய வேதவசனங்கள் நமக்கு விளக்குகின்றன. எத்தனையோ பேர் கிறிஸ்துவை விசுவாசித்துப் பின்பற்றிய போதும் கிறிஸ்து தமது ஞானத்தால் பன்னிருவரையும் பவுலையும் மட்டும் தெரிவு செய்து அப்போஸ்தலர்களாக அதிகாரபூர்வமாக நியமித்தார். அவரால்

நேரடியாக இவ்வாறு நியமிக்கப்படாதவர்கள் அப்போஸ்தலர்களாக இருக்க முடியாது.

4. அத்தோடு, அப்போஸ்தலர்கள் வேறு மனிதர்கள் மூலமாகவல்லாமல் கிறிஸ்துவிடம் இருந்து நேரடியாக சுவிசேஷத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். (கலாத்தியர் 1:11-20).

## அப்போஸ்தலனான பவுல்

இந்தப் பன்னிருவரைத் தவிர்த்து அப்போஸ்தலப்பட்டம் பெற்றவராக பவுலை மட்டுமே வேதத்தில் பார்க்கிறோம். மேலே நாம் பார்த்த தகுதிகள் பவுலுக்கு இருந்ததா? பவுல் எப்படி அப்போஸ்தலப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்?, என்ற கேள்விகளுக்கு நாம் பதிலளிப்பது அவசியம். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவரோடும், அவருடைய சீடர்களோடும் பவுல் சஞ்சரித்திருக்கவில்லை. அந்தக் காலத்தில் பவுல், சவுல் என்ற பெயருடன் இயேசுவை விசுவாசிக்காமல் யூதனாகவே இருந்திருக்கிறார். இவ்வாக்கத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி நான் வாசித்த ஒரு கட்டுரையில் கலாத்தியர் 1:15-18-ஐ உதாரணம் காட்டி பவுல், "மூன்று வருட காலம் இயேசு கிறிஸ்துவோடு இருந்துள்ளார்" என்று அந்தக் கட்டுரையை எழுதியவர் குறிப்பிட்டிருந்தார். இது கலாத்தியர் பகுதியைத் தவறாகப் புரிந்து கொண்டதால் வந்ததன் விளைவு. பவுல் இயேசுவோடு மூன்று வருட காலத்தைக் கழித்ததாக வேதம் எங்குமே போதிக்கவில்லை. கிறிஸ்துவை விசுவாசித்த பிறகு தான் அரேபியாவுக்குப் போய் மூன்றுவருட காலம் அங்கே இருந்ததாக மட்டுமே பவுல் கலாத்தியர் 1:17-18-ல் தெரிவிக்கிறார்.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் பவுல் அவரோடு சஞ்சரித்திருக்காவிட்டாலும் ஏனைய அப்போஸ்தலர்களைப்போல உயிர்த்தெழுந்த இயேசுவை நேரடியாகப் பார்க்கும் அனுபவம் அவருக்கு கிடைத்திருந்தது (அப்போஸ்தலர் 9:3-8; 22:6-11; 26:12-18; 1 கொரிந்தியர் 9:1; 15:8). அப்போஸ்தலராக தெரிவு செய்யப்படுவதற்கு அந்த அனுபவம் அவசியமாதலால் கிறிஸ்து தமாஸ்குவுக்குப் போகும் வழியில் பவுலைச் சந்தித்து தரிசனம் தந்தார். அந்த அனுபவத்தைப் பற்றி பவுலே அப்போஸ்தலர் நடபடிகளிலும் (26:15:16), கலாத்தியருக்கெழுதிய நிருபத்திலும் (1:1-12) விளக்குகிறார். இந்த அனுபவத்தின் மூலம் பவுல், கிறிஸ்துவை விசுவாசித்ததோடு மட்டுமல்லாமல் கிறிஸ்துவிடம் இருந்து நேரடியாக அப்போஸ்தலப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார் என்று அறிந்து கொள்கிறோம். இதன் காரணமாகவே தான் ஓர் "அகாலப்பிறவி" (as of one born out of due time) என்று பவுல் (1 கொரி.15:8) கூறுவதைப் பார்க்கிறோம். 1 கொரிந்தியர் 15:9-ல் "நான் அப்போஸ்தலரெல்லோரிலும் சிறியவனாயிருக்கிறேன்" என்று பவுல் கூறுகிறார். இது பன்னிருவரைக் குறித்துச் சொல்லப்பட்டது. அத்தோடு கலாத்தியர் 1:17-ல் "எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே" என்று கூறும் பவுல், தான் பன்னிருவருக்குப்பின் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டதை விளக்குவதைப் பார்க்கிறோம் (கலா.1:1-12). இதைத் தான் அப்போஸ்தலர் நடபடிகள் 26:15-16 ஆகிய வசனங்களிலும் பவுல் விளக்குகிறார். இதற்கு பக்தியுள்ள அனனியாவும் சாட்சியமளிப்பதை அப்போஸ். 22:12-15 ஆகிய வசனங்களில் வாசிக்கலாம். ஆகவே, இதுவரை நாம் பார்த்த வேத வசனங்களின்படி, கிறிஸ்துவைத் தரிசித்து, அவரால் நேரடியாக அழைக்கப்பட்டு, விசுவாசத்தைப் பெற்று, சிறப்பாக யூதரல்லாத புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவே பவுலுக்கு

அப்போஸ்தலப் பட்டத்தை இயேசு கொடுத்தார் என்பதை பவுலினுடைய சாட்சியங்களில் இருந்து அறிந்து கொள்ளுகிறோம். எனவே, பன்னிருவரைத் தவிர்ந்த அப்போஸ்தலனாக பவுல் இயேசு கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

## அப்போஸ்தலர்களின் சிறப்புத் தன்மைகள்

அப்போஸ்தலர்களுக்கு சில சிறப்புத் தன்மைகள் இருந்தன. புதிய ஏற்பாட்டு சபையை நிறுவுவதற்கு அப்போஸ்தலர்களுக்கு இத்தன்மைகள் அவசியமாயிருந்தன. இன்று அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்டுள்ள அந்த சபையின் அடிப்படையில் தொடர்ந்து சபைகளை எங்கும் தோற்றுவிப்பதற்கு இந்த சிறப்பம்சங்கள் எவருக்கும் அவசியமில்லை. அப்போஸ்தல ஊழியத்திற்கு மட்டுமே உரித்தானவை இந்த சிறப்பம்சங்கள்.

**சபைக்கு அஸ்திவாரம்** - பன்னிருவரும், அப்போஸ்தலனான பவுலும் திருச்சபை அமைப்பில் சிறப்பான பங்கை வகித்துள்ளனர். இவர்கள் சபையை ஸ்தாபிப்பதற்காக கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டவர்கள். "தேவனானவர் முதலாவது சபையில் அப்போஸ்தலரை . . . ஏற்படுத்தினார்" என்று 1 கொரிந்தியர் 12:28-ல் வாசிக்கிறோம். ஆகவே, சபையின் முதல் அதிகாரிகளாக, சபை நிறுவப்பட்டபோது அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்திருக்கிறார்கள். அத்தோடு, அப்போஸ்தலர்கள் திருச்சபையின் அத்திவாரமாக இருக்கிறார்கள் என்று எபேசியர் 2:20 தெரிவிக்கிறது. அதாவது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருச்சபை நிறுவப்பட்டபோது அப்போஸ்தலர்களால் அது ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்துவிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த போதனைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டது. அவர்களே சபைக்கு அத்திவாரமாக இருந்தனர். வேறு எவரைப் பற்றியும் இந்தவிதமாக வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. இது அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்த சிறப்புப்பணி.

**திருச்சபைப் பணிக்காக அளிக்கப்பட்ட அற்புதங்கள் செய்யும் வரம் -** அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைச் சொல்லி திருச்சபை கட்டும்பணிக்காக அவர்களுக்கு அற்புதங்கள் செய்யக்கூடிய அதிகாரத்தைக் கிறிஸ்து தந்திருந்தார். இதைப்பற்றியே பவுல் 2 கொரிந்தியர் 12:12-ல் "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் . . . உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" என்று கூறியிருப்பதை வாசிக்கலாம். அப்போஸ்தலர்கள் பிரசங்கம் செய்த இடங்களிலெல்லாம் அற்புதங்களும், அடையாளங்களும் நிகழ்ந்ததாக வேதம் விபரிக்கிறது (அப். 2:43; 4:30; 5:12). இத்தகைய அற்புதங்களையும், அடையாளங்களையும் அப்போஸ்தலரைத் தவிர்ந்த வேறு சிலரும் பெற்றுக்கொண்டிருந்ததை அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கிறோம். ஆனால், வேதப்பகுதிகள் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கின்றபோது அவர்கள் அத்தகைய வரங்களை அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கான ஆதாரங்களைப் பார்க்க முடிகின்றது. அதாவது அப்போஸ்தலர்கள் கரங்களை வைத்து ஜெபித்தே அத்தகைய வரங்களை அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள். அப்போஸ்தலரால் மட்டுமே இப்படியாக கரங்களை வைத்து ஜெபித்து மற்றவர்களுக்கு இத்தகைய வரங்களைக் கொடுக்க முடிந்திருக்கிறது. இது கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த விசேஷமான பணி (அப்போஸ். 8:14-17; 1 தீமோ 4:14; 2 தீமோ. 1:6).

**உலகளாவிய சுவிசேஷப்பணிக்கான பொறுப்பும் கிறிஸ்துவின் பிரதிநிதியாக**

**இருப்பதற்கான சகல அதிகாரமும் –** இன்று நாம் திருச்சபைகளில் பார்ப்பது போல் இல்லாமல் அன்று அப்போஸ்தலர்கள் உலகம் முழுதும் சபைகளை நிறுவவும், நிறுவப்பட்ட சபைகளை சீரமைக்கவும், ஒழுங்குபடுத்தவும் அவசியமான சகல அதிகாரங்களையும் பெற்றிருந்தார்கள். இத்தகைய அதிகாரத்தைக் கிறிஸ்துவே அவர்களுக்கு அளித்திருந்தார். புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதிகள் அப்போஸ்தலர்களாலேயே எழுதப்பட்டது. அப்போஸ்தலர்களே எருசலேமில் கூடி அந்தியோகியாவில் ஏற்பட்டிருந்த சபைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டியுள்ளனர் (அப்போஸ். 15). அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையின் பல பிரச்சனைகளையும் அதிகாரத்துடன் தீர்த்துவைத்ததை 1 கொரிந்தியரில் வாசிக்கிறோம். அப்போஸ்தலனுக்குரிய சகல அதிகாரமும் இருந்ததாலேயே பவுலால் அதைச் செய்ய முடிந்தது. இயேசுவிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டதை நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என்று அப்போஸ்தலனால்தான் சொல்ல முடிந்தது (1 கொரி. 11:23). தீத்துவை அனுப்பி சபைகள் தோறும் மூப்பர்களை நியமிக்க வைக்க அப்போஸ்தலனால்தான் முடிந்தது (தீத்து). இது புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் அப்போஸ்தலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம்.

## அப்போஸ்தலர்களோ, அப்போஸ்தல வரங்களோ இன்று இல்லை

இதுவரை நாம் பார்த்த அனைத்தின் மூலமும் அப்போஸ்தலர்கள் யார் என்று அறிந்து கொண்டோம். இன்று சிலர் அப்போஸ்தலர்களும், அப்போஸ்தல வரங்களும் தொடர்கிறது என்று வாதிடுகிறார்கள். அது தவறு என்பதை அப்போஸ்தலர்கள் யார், அவர்களுடைய சிறப்பம்சங்கள் யாவை என்று இதுவரை நாம் பார்த்ததிலிருந்து விளங்கியிருக்கும். அப்போஸ்தலனாக ஒருவன் இருக்க வேண்டுமானால் அவன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருந்திருக்க வேண்டுமென்ற உண்மை வேதம் போதிக்கும் உண்மை. அதுவும், அப்படி சாட்சியாக இருந்தவர்களில் இருந்துதான் இயேசு நேரடியாக தனது அப்போஸ்தலர்களைத் தெரிவு செய்திருக்கிறார். அவர் பவுலுக்குத் தோற்றமளித்து, பவுலை அப்போஸ்தலனாகத் தெரிவு செய்ததுபோல் யாரையும் இன்று தெரிவு செய்வதில்லை. 1 கொரி. 15:5-7 வரையுள்ள வசனங்களை ஆதாரமாகக் காட்டி பன்னிருவரல்லாத ஏனைய அப்போஸ்தலரும் இருந்திருக்கிறார்கள், அவர்களுக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் 1 கொரி. 15:7 குறிக்கின்றது என்று சிலர் விளக்கமளிக்கிறார்கள். ஆனால், இந்தப் பகுதி அதைத்தான் குறிக்கிறது என்று ஆணித்தரமாக கூற முடியாது. பன்னிருவரான அப்போஸ்தலர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதை இந்த வசனங்கள் குறிக்கின்றன என்பது பல இறையியல் அறிஞர்களின் (Charles Hodge, Simon J. Kistemaker, Geoffrey B. Wilson) கருத்து. இந்தப் பகுதியில் பன்னிருவரே (5) மீண்டும் அப்போஸ்தலர்கள் (7) என்று அழைக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலர்களை அத்திவாரமாக வைத்து திருச்சபை கட்டிமுடிக்கப்பட்ட பிறகு மீண்டும் சபைக்கு எந்த அத்திவாரமும் தேவையில்லை. அப்போஸ்தலர்களினுடைய சிறப்பான, அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளைப் புரிந்து கொள்ள முடியாதவர்களே இன்று அப்போஸ்தலர்களையும், அப்போஸ்தலப் பணிகளையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். இன்று சபை நிறுவுவதற்காக அனுப்பப்படுகிறவர்களை பன்னிருவரோடும், பவுலோடும் நாம் ஒப்பிட முடியாது.

## அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டுள்ள வேறு சிலர்

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவால் சபைக்கு அளிக்கப்பட்ட அசாதாரணமான ஒரு பதவி என்பதற்கான வேத ஆதாரங்களை இதுவரை பார்த்தோம். இனி புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் என்ற பெயரில் வேறு சிலரும் அழைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன என்பதைப் பார்ப்போம். பர்னபாவும் (அப். 14:14), அன்றோனிக், யூனியா (ரோமர் 16:7) என்போரும், அப்பொல்லோவும் (1 கொரி. 4:9), தீத்துவும் (2 கொரி. 8:23) எப்பாபிரோதீத்துவும் (பிலி. 2:25), தீமோத்தேயுவும், சில்வானேயும் (1 தெச. 2:6) அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவற்றைத்தவிர பொதுவான விதத்தில் இந்தப் பதம் யோவானால் (யோவான் 13:16) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆக, புதிய ஏற்பாட்டில் இந்தப் பகுதிகளில் மட்டுமே அப்போஸ்தலர் என்ற பதம் பன்னிரு அப்போஸ்தலரையும், பவுலையும் தவிர்த்து ஏனையோருக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இதற்கு மூன்று காரணங்களைக் கூற விரும்புகிறேன். முதலில், அப்போஸ்தலர் என்ற பதத்தின் பொதுவான அர்த்தம் அனுப்பப்பட்டவர் (Sent one) அல்லது ஸ்தானாதிபதி (Messenger - செய்தியாளன்) என்பதைப் புரிந்து கொண்டால் இந்தப் பிரச்சனையை சுலபமாகத் தீர்த்துக் கொள்ளலாம். அதாவது, இன்று இதற்கு சமமானதாக நாம் பயன்படுத்தும் வார்த்தை மிஷனரி என்பதாகும். ஆகவே, அப்போஸ்தலர் என்ற பதம் உத்தியோகபூர்வமான விதத்தில் (Official or technical sense) பன்னிருவருக்கும், பவுலுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களைத் தவிர்ந்த வேறு மனிதர்களுக்கு பொதுவான விதத்தில் (general meaning), மிஷனரி என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரே வார்த்தை இரண்டுவிதமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது உலக மொழிகள் எல்லாவற்றிலும் நாம் பார்க்கக்கூடிய மொழி வரம்பிற்குட்பட்ட ஒரு விதி. உதாரணமாக மூப்பர் (Elder-Presbyter), உதவியாளன் (Deacon-Diakonos) எனும் சபைத்தலைவர்களுக்கு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் அவற்றின் மூல அர்த்தத்தில் வயது போனவர் (Older person), சேவகன் (Servant) என்ற பொருளில் பல தடவைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதே முறையிலேயே சாத்தானைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள Diabolos என்ற வார்த்தை பொதுவான அர்த்தத்தில் Adversary என்றும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்போஸ்தலர் என்ற பதம் அப்போஸ்தலர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பதால் அப்போஸ்தலர்களும், அப்போஸ்தல வரங்களும் இன்று திருச்சபையில் தொடர்கின்றன என்ற வாதம் வேதவிளக்க விதிமுறைகளுக்கு ஒத்துவராது.

இரண்டாவதாக, பன்னிருவரைத் தவிர்ந்த ஏனைய சிலரும் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டுள்ள இந்த பகுதிகளை ஆராயும்போது இப்பகுதிகளில் அப்போஸ்தலர் என்ற வார்த்தை "அனுப்பப்பட்டவர்" என்ற அர்த்தத்தில் முக்கியமான ஒரு காரியத்தைச் செய்வதற்காக சபையிலிருந்து அதிகாரபூர்வமாக அனுப்பப்பட்டவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். முதலாவதில், பர்னபா பவுலோடு திருச்சபையால் முக்கியமான ஊழியத்திற்காக அனுப்பப்பட்டிருக்கிறார். அடுத்த பகுதியில் தீத்து பவுலோடு ஒரு சபையால் இன்னொரு சபைக்கு முக்கியமான ஒரு காரியத்தின் பொருட்டு அனுப்பப்பட்டிருக்கிறார். மூன்றாவது பகுதியில் எப்பாபிரோதீத்து பிலிப்பு சபையால் ரோமில் இருந்த சபைக்கு பிரதிநிதியாக அனுப்பப்பட்டிருக்கிறார். அடுத்த

பகுதியான யோவானில் இயேசு, "அனுப்பப்பட்டவன்" என்ற பதத்தை இதே அர்த்தத்தில் கர்த்தரால் அனுப்பப்பட்டவர்களைக் குறித்துப் பேசியிருப்பதைப் பார்க்கலாம். ஆகவே, இந்தப் பகுதிகள் அனைத்திலும் அப்போஸ்தலர் என்ற பதம் அனுப்பப்பட்டவர், செய்தியாளன், பிரதிநிதி என்ற அர்த்தங்களில் சபை அங்கீகரித்து அனுப்பப்பட்டவர்களைக் குறித்து பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது (James Bannerman). மிஷனரி என்ற பதம் இன்று இம்முறையிலேயே கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவதாக, அப்போஸ்தலர் என்ற வார்த்தையைவிட அப்போஸ்தலராக இருப்பதற்கு ஒருவருக்கு இருக்கவேண்டிய தகுதிகளும், சிறப்புத் தன்மைகளுமே அவரை உத்தியோகபூர்வமாக அப்போஸ்தலராக்கியுள்ளது. நாம் ஏற்கனவே பார்த்துள்ள அந்தத் தகுதிகள் இந்த வேதப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பவர்களிடம் இருக்கவில்லை. அவர்களை இயேசு நேரடியாக அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைத்ததாகவும் வரலாறில்லை.

### அப்போஸ்தலப் பணிபற்றிய சீர்திருத்தவாதிகள் சிலரின் கருத்துக்கள்:

**ஜோன் கல்வின்** (John Calvin) - கல்வின் தன்னுடைய Institute II லும், எபேசியர், கொரிந்தியர் ஆகிய வேத விளக்கவுரை நூல்களிலும் அப்போஸ்தலர்களைப்பற்றி விளக்கமளிக்கும்போது அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும், தீர்க்கதரிசிகளும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கே சபைக்குக் கொடுக்கப்பட்டதாகவும், நிலையாக சபைகளில் இருப்பதற்காக அப்பதவிகளை கர்த்தர் ஏற்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளார். முறையாக அமைக்கப்பட்டுள்ள எந்த சபைகளிலும் இன்று அப்போஸ்தலருக்கு இடமில்லை என்றும் கல்வின் தெளிவாக விளக்கியுள்ளார். அதேநேரம் அசாதாரண காலப்பகுதிகளில் எங்கே சபைகள் இல்லையோ அல்லது இருண்ட காலத்தில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஆட்சியில் திருச்சபை தலைநிமிர முடியாதிருந்தது போன்ற காலங்களில் மார்டின் லூதர் போன்றவர்களை கர்த்தர் எழுப்பலாம் என்று கல்வின் கருத்துத் தெரிவித்துள்ளார். மார்டின் லூதரை அதிகாரத்துடன் அனுப்பப்பட்ட சுவிசேஷகர் போன்ற ஒரு தலைவராக கல்வின் கருதி அந்தக்கருத்திலேயே அப்போஸ்தலர் என்று அழைத்தார். இதற்காக கல்வின் புதிய ஏற்பாட்டு சபைக்கு அத்திவாரமாக இருந்த அப்போஸ்தலர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்ற கருத்தினைக் கொண்டிருந்ததாக தப்புக் கணக்குப் போட்டுவிடக்கூடாது. சபை சீர்திருத்தத்திற்காகக் கர்த்தரால் எழுப்பப்பட்ட மனிதர் என்ற அர்த்தத்தில் மட்டுமே லூதரை அப்போஸ்தலர் என்று கல்வின் அழைத்தார்.

**ஜோன் ஓவன்** (John Owen) - திருச்சபைக்குக் கிறிஸ்து அளிக்கும் தலைவர்களை அசாதாரண தலைவர்கள் என்றும் சாதாரணத் தலைவர்கள் என்றும் இரண்டு பிரிவுகளாக பியூரிட்டன் மேதையும், இறையியல் அறிஞருமான ஜோன் ஓவன் பிரிக்கிறார். அப்போஸ்தலர்களை கிறிஸ்து சபைக்களித்த அசாதாரணத்தலைவர்களாகக் கணித்த ஓவன், ஒருவர் அசாதாரண சபைத் தலைவராக இருப்பதற்கு நான்கு அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றார். 1. அசாதாரண அழைப்பைக் கர்த்தரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். 2. கொடுக்கப்பட்ட பணியைச்செய்வதற்காக அசாதாரண வல்லமையைக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். 3. அந்த அசாதாரணமான வல்லமையைப் பயன்படுத்தத்தேவையான அசாதாரணமான வரங்களைக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். 4. அசாதாரணமான ஊழியத்தையும், உழைப்பையும், வாஞ்சையையும், சுயவெறுப்பையும்,

பாட்டையும் அனுபவித்தவராக இருக்க வேண்டும். இந்த நான்கு அடையாளங்களையும் கொண்ட திருச்சபையின் அசாதாரண பணிகளாக ஓவன் அப்போஸ்தலர்களையும், சுவிசேஷகர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறிப்பிடுகிறார். ஆகவே, ஓவனைப் பொறுத்தவரையில் இந்த மூன்றும் ஆதி சபையோடு முடிந்து போய்விட்ட பதவிகள். (Works of John Owen, Volume 4)

**ஜோன் கில்** (John Gill) - “அப்போஸ்தலர்கள் ஆதி சபையின் அசாதாரண தலைவர்களாக இருந்தனர். கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, ஆவியால் வழிநடத்தப்பட்டு, தங்களுடைய பிரசங்கத்தை வலியுறுத்துமாறு அற்புதங்களைச் செய்யும் வல்லமையுடையவர்களாயிருந்து, ஓரிடத்தாலும் கட்டுப்படுத்தப்படாதவர்களாய் சகல இடங்களுக்கும் போய் பிரசங்கம் செய்யும் அதிகாரமுடையவர்களாக இருந்தனர். அத்தகைய அப்போஸ்தலர் பதவி ஆதி சபையோடு முடிந்துவிட்டது.” (இது எபேசியர் 4:11 க்கு கில் கொடுக்கும் விளக்கம்.)

**சார்ள்ஸ் ஸ்பர்ஜன்** (Charles Spurgeon) - “கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் திருச்சபைக்கு அப்போஸ்தலர்கள் கிடைத்தார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவை நேரடியாகப் பார்த்திருப்பதால் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்கும்படி அழைக்கப்பட்டார்கள். அப்போஸ்தலப் பதவி சபையில் தொடர்ந்திருக்கவில்லை. முக்கியமாக அற்புதங்கள் நடப்பதும் நின்றுபோனதால் அப்போஸ்தலப்பதவி சபைக்கு இனி அவசியமாயிருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவால் தெரிவுசெய்யப்பட்டு திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிகமான பதவி.” (பிரசங்கம் எண்: 982)

அப்போஸ்தலர்களுடைய காலத்துக்குப்பின்பு திருச்சபை வரலாற்றில் சபைப்பிதாக்கள், அப்போஸ்தலப் பதவி தொடர்வதாக நம்பவோ, எங்கும் எழுதி வைக்கவோ இல்லை. அதற்குப்பின்பு சீர்திருத்தவாத காலத்திலும், பியூரிட்டன்களின் காலத்திலும் இந்த நம்பிக்கை இருக்கவில்லை. சபைப்பிதாக்களின் காலத்தில் தோன்றிய, தவறான போதனைகளைக் கொண்டிருந்த மொன்டனிசம் (Montanism) என்ற, இன்றைய பெந்தகொஸ்தே போதனைகளை நினைவுபடுத்தும் ஒரு இயக்கம் மட்டுமே முதன் முதலில் இத்தகைய நம்பிக்கையைக் கொண்டிருந்தது. ஆதிசபைக்குப் பிறகு வரலாறு கண்ட மெய்க்கிறிஸ்தவ திருச்சபைகளின் காலங்கள் எதிலும் அப்போஸ்தலப்பணிகள் இருந்ததற்கோ, அப்போஸ்தல வரங்கள் இருந்ததற்கோ சாட்சியங்களைப் பார்க்க முடியாது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் மட்டுமே இந்த நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. பெந்தகொஸ்தே போதனைகளில் மயங்கி தன்னையும், தன் சபையையும் அழித்துக் கொண்ட எட்வர்ட் ஏர்விங் (Edward Erving) என்ற பிரபலமான ஸ்கொட்லாந்துப் பிரசங்கி அப்போஸ்தலப் பதவியும், வரங்களும் திருச்சபையில் தொடர்வதாக நம்பி வீண் போனார். அவருடைய ஊழியமும், வாழ்க்கையும் துக்ககரமான முறையில் முடிவடைந்தன. இத்தனையையும் வைத்துப் பார்க்கும்போது ஆதிசபை அமைப்பிற்காகக் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டிருந்த அப்போஸ்தலப் பதவியையோ, அப்போஸ்தல வரங்களையோ இனித் திருச்சபையில் தொடர்ந்தும் பார்க்க முடியாது என்ற வேதபூர்வமான தீர்மானத்துக்கு நம்மால் உறுதியாக வரமுடிகிறது. சுவிசேஷத்தை வல்லமையோடு பிரசங்கித்து ஆவியின் அனுக்கிரகத்தால் விசுவாசிகளைக் கொண்டு சபைகளை எங்கும் நிறுவுவது மட்டுமே திருச்சபைகள் இன்று செய்ய வேண்டிய பணி.

# ஊழியக்காரர்களின் ஒழுக்கக் கேட்டை அசட்டை செய்யலாமா?

இன்று மேலைத்தேசங்களிலும், கீழைத்தேசங்களிலும் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒழுக்கக்குறைவு அதிகமாக காணப்படுவதை நாமெல்லோருமே அறிந்திருக்கிறோம். உலக இச்சை கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் இன்று அதிகம் குடிகொண்டிருக்கிறது. இன்டர்நெட் மூலம் மனைவிக்குத் தெரியாமல் வேறு பெண்களோடு தொடர்பு கொண்டு பாலியல் இச்சைக்கு (Sexual perversion) தங்களை ஒப்புக்கொடுத்த ஊழியக்காரர்களைப் பற்றியும், தன்னினச்சேர்க்கைக்கு (Homosexuality) இடம்கொடுத்து ஒழுக்கத்தை இழந்த ஊழியக்காரர்கள் பற்றியும், பெண்ணாசையால் மனைவிக்குத் துரோகம் (Adultery) செய்த ஊழியக்காரர்கள் பற்றியும் அடிக்கடி கேள்விப்படுகிறோம். கிறிஸ்தவ சபைகளும், நிறுவனங்களும் இன்று இத்தகைய அவலத்தைச் செய்பவர்களுக்குத் தாலாட்டுப்பாடிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய ஒழுக்கக்கேடான செயலில் ஈடுபட்டு பிடிபட்ட ஊழியக்காரர்களை எப்படி நடத்துவது என்பதில் கிறிஸ்தவர்கள் மாறுபாடான எண்ணங்களைக் கொண்டிருப்பதை இன்று நாம் பார்க்கிறோம். குற்றம் செய்த ஒருவன் தன் பாவத்தை உணர்ந்து வருந்தி மன்னிப்பு கேட்டால் அவனை நாம் மன்னிக்க வேண்டும் என்று சொல்லி ஒழுக்கத்தை இழந்துவிட்ட பல ஊழியக்காரர்களை இன்று மறுபடியும் ஊழியத்திற்கு அனுமதிக்கும் சபைகளையும், கிறிஸ்தவ நிறுவனங்களையும் பார்த்து வருகிறோம். இது தகுமா? இது முறையா? வேதம் இதை அனுமதிக்கிறதா? கோபத்தில் ஒருவரைத் திட்டிவிட்ட ஒரு ஆத்துமாவின் பாவமும், தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்ட அல்லது இன்னொரு பெண்ணோடு தொடர்பு வைத்து மனைவிக்குத் துரோகம் செய்தவர்களின் பாவமும் சமமானதா? அதில் வேறுபாடே இல்லையா? பாவங்கள் எல்லாம் பாவமாக இருந்தபோதும் எல்லாப் பாவங்களும் ஒரே தன்மையையும், ஒரேவிதமான பாதிப்பையுமா ஆத்துமாக்களில் ஏற்படுத்துகின்றன போன்ற பல கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

பாவத்தைப் பச்சைத்தண்ணீர் போல குடித்துக் கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தின் கீழ்த்தரமான வாழ்க்கை முறையும், சிந்தனைப்போக்கும் கிறிஸ்தவர்களைப் பாதித்து, அவர்களைப் பாவத்தை அசட்டை செய்பவர்களாக மாற்றி இருப்பதை நம்மால் ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. பாவத்தின் பாவத்தை (Sinfulness of Sin) உணரும் சக்தியற்ற மரத்துப்போன மனதுள்ளவர்களாக அனேக கிறிஸ்தவர்கள் இருந்து வருவது இன்று கிறிஸ்தவத்தைப் பிடித்திருக்கும் பெரிய வியாதியாக இருக்கின்றது.

முதலில் பாவங்களைக்குறித்து வேதம் போதிக்கும் ஓர் உண்மையைப் பார்ப்போம். பாவங்கள் எல்லாமே பாவங்களாக இருந்தபோதும் சில பாவங்கள் மிகக் கொடூரமானவையும், அவற்றைச் செய்யும் ஆத்துமாக்களை அதிகம் பாதிப்பவையாகவும், அவற்றைச் செய்தவர்களைச் சுற்றி இருப்பவர்களையும் பாதிக்கின்றனவையாயும் இருக்கின்றன என்பது வேதத்தின் போதனை. மனைவிக்குத் துரோகம் செய்து வேறு பெண்களோடு தொடர்பு வைப்பதையும்,

தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவதையும் ஒருவரைக் கோபத்தில் நாம் திட்டி விடுகிறதற்கு சமமாகக் கருதுவது சாத்தானின் சிந்தனை. இவை இரண்டையும் கொடூரமான பாவங்களின் வரிசையிலேயே வேதம் சேர்க்கிறது. இத்தகைய பாவங்களைத் தொடர்ந்து செய்துவருகிறவர்கள் தேவ ராஜ்யத்தை அடைய மாட்டார்கள் என்று வேதம் போதிக்கிறது. இதற்காக இந்தப்பாவங்களைச் செய்த விசுவாசிகள் மனந்திரும்பும்போது அவர்களை நாம் மன்னிக்கக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. மனந்திரும்புதல் உண்மையானதாக இருந்தால் மன்னிக்கத்தான் வேண்டும். ஆனால் அவனுடைய மனந்திரும்புதல் உண்மையானதா, மனந்திரும்பியவனை மன்னிப்பது எப்படி, என்பவற்றை அறிந்து கொள்ள சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதுதான் இன்று அனேகருக்கு விளங்காமல் இருக்கிறது. ஆகவே, இத்தகைய பாவங்களைச் செய்து பிடிபட்டவர்களை சபை என்ன செய்ய வேண்டும் என்று வேதம் விளக்குகின்ற உண்மைகளை நாம் ஆராய்வது அவசியம்.

### முதல் கட்டம்:

இந்தக் கொடூரமான பாவங்களைச் செய்தவர்கள் பிடிபட்டவுடன் சபை செய்ய வேண்டிய முதல் காரியம் அவர்களோடு பேசிப்பார்த்தபின், அந்த மனிதனில் மனந்திரும்புதல் இருக்கின்றதோ இல்லையோ அதை சபைக்குத் தெரிவிக்க வேண்டும். இதை அனேக சபைகள் செய்வதில்லை. இந்தப்பாவங்கள் சாதாரணமான பாவங்களாக இல்லாமல் அதைச்செய்தவர்களையும், சபையையும், சுற்றி இருப்பவர்களையும் பாதித்திருப்பதால் சபைக்குத் தெரியாமல் அதை மறைக்கப் பார்ப்பது திருடனோடு சேர்ந்து போலிஸ்காரர்களும் திருடுவதற்கு ஒப்பானதாகும். சபை அதிகாரிகள் சபைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதால் இந்தக்காரியத்தை சபைக்குமுன் அவர்கள் கொண்டுவராவிட்டால் தங்களுடைய அதிகாரத்தைத் தவறாகப்பயன்படுத்தியவர்களாவார்கள்.

இந்த விஷயத்தை ஏன் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்பதற்கு இன்னுமொரு காரணமுண்டு. எவருமே இத்தகைய கொடூரமான பாவங்களை சிந்திக்காமலும், பல காலங்கள் அதில் ஏற்கனவே ஈடுபடாமலுமிருந்து (Premeditated) செய்வதில்லை. தாவீது பெத்சீபாவுடன் ஒழுக்கக்கேடாக நடப்பதற்கு முன் கெட்ட சிந்தனைகளை தன் மனத்தில் பல காலம் வளர்த்துக்கொண்டு மறைமுகமாக பெத்சீபாவின் நடவடிக்கைகளை கவனித்து வந்திருந்ததோடு அவளோடு தொடர்பு கொள்ள சரியான வேளையையும் எதிர்பார்த்து இருந்திருக்கிறான். அதுபோலத்தான் இந்தப்பாவங்களைச் செய்தவர்களும் பல காலம் யாருக்கும் தெரியாமல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து பாவத்தில் ஈடுபட்டு வந்திருப்பார்கள். அது அவர்களுடைய சரீரத்திலும், இருதயத்திலும் ஆழமாகப் பதிந்து ஊறிப்போயிருக்கும். அவை உடனடியாக இலகுவாகப் போய்விடாது. என் சரீரத்தில் ஒருபகுதியில் இருந்த கட்டியை கடந்த மாதம் அறுவைச்சிகிச்சை மூலம் அகற்ற நேரிட்டது. அது எத்தனையோ மாதங்கள் எனக்கே தெரியாமல் உள்ளே வளர்ந்து கொஞ்சம் பெரிதாகி வெளியில் தெரிய ஆரம்பித்த பின்னால்தான் டாக்டரிடம் ஓடினேன். அது போலத்தான் இந்தப் பாவங்களைச் செய்கிறவர்களும் வெளியில் தெரியாமல் அதில் ஈடுபட்டு வந்திருப்பார்கள். பிடிபட்டவுடன் அவர்கள் அழுவது, தாம் பிடிபட்டுவிட்டோமே என்ற வெட்கத்தாலும் பயத்தாலும்தான். அது மனந்திரும்புதலுக்கான அடையாளமல்ல. அதனால்தான் சபைக்கு அதுபற்றி அறிவித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய அறுவை சிகிச்சை அவசியமாகிறது.

வெறும் கைப்புண்ணுக்கு பிளாஸ்டர் போட்டு காயத்தை ஆற்றிக் கொள்ளலாம். வயிற்றில் வளரும் கட்டிக்கு பிளாஸ்டர் போட்டு ஆற்றிக் கொள்ள முடியுமா? அதற்கு அறுவை சிகிச்சை தேவை. ஆகவே, சபை அதிகாரிகள் இந்த விஷயத்தை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துவிடப்பார்க்காமல் சபைக்கு (அங்கத்தவர்களுக்கு மட்டும்) முதலில் அறிவிக்க வேண்டும்.

சிலர் மத்தேயு 16-ன் படி இது சபைக்குத்தெரியாமல் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய பிரச்சனை என்று வேதம் தெரியாமல் பேசுவார்கள். மத்தேயு 16-ல் இரண்டு விசுவாசிகளுக்கு மத்தியில் நடந்த பிரச்சனை ஏனையோரைப் பாதிக்கவில்லை. அது இரண்டு பேர் மட்டுமே சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இருந்ததால் வேறு யாருக்கும் ஆரம்பத்தில் தெரிய வேண்டிய அவசியமிருக்கவில்லை. இங்கே நாம் பார்க்கின்ற கொடூரமான பாவங்கள் பலரையும் பாதித்திருக்கின்றன. இந்தப் பாவங்களைச் செய்தவர்களின் குடும்பமும் மனைவி, பிள்ளைகளைளும், சபை மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இது சபையின் முன் உடனடியாகக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சனையாக இருக்கின்றது. சபை குழம்பிவிடக்கூடாது என்று சில சபைகள் இதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டலாம். அது கர்த்தருக்கு எதிரான செயல். சபையை வளர்ப்பதற்கு உதவும் செயலல்ல.

## இரண்டாம் கட்டம்:

சபைக்கு அறிவித்தபின் இந்தப்பாவங்களைச் செய்தவர்களில் மனந்திரும்புதலுக்கான எந்தவித அடையாளமும் இல்லாதிருந்தால் அவர்கள் உடனடியாக சபையில் இருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் (Excommunication). இதற்குக் குறைந்த எதையும் செய்வது தகாது. செய்யவும் நமக்கு வேதம் அனுமதி தரவில்லை. மத்தேயு 16 இதையே இறுதி நடவடிக்கையாகக் காட்டுகிறது. அத்தோடு 1 கொரிந்தியர் 5:5ம் இதையே செய்யும்படி வலியுறுத்துகிறது. இதை சபை செய்ய வேண்டிய காரியமாக 2 கொரிந்தியர் 2:6ல் வாசிக்கிறோம். இந்த ஒழுங்கு நடவடிக்கை மூலம் மோசமான (பெண்களோடு தவறான தொடர்பு, தன்னினச் சேர்க்கை, வேத விரோதக் கொள்கைகளைக் கொண்டிருத்தல்) பாவங்களைச் செய்தவர்கள், அவர்கள் மெய்யான விசுவாசிகளாக இருந்தால் மனந்திரும்புவதற்கு வாய்ப்பை அளிக்கிறோம். இது கர்த்தர் ஏற்படுத்தியிருக்கும் வழி. இன்றைய சமுதாயத்தில் சிக்மன்ட் புரொடின் (Sigmund Freud) உளவியல் தத்துவங்கள் பரவியிருப்பதால் ஒருவன் மனந்திரும்புவதற்கு இத்தகைய நடவடிக்கைகள் சரியான வழியல்ல என்று பலர் தவறாக நம்புகிறார்கள். நமக்கு ஆத்மீக வழிகாட்டுவது வேதமே தவிர சிக்மன்ட் புரொயிடோ உலகப்பிரமானமான உளவியலோ அல்ல.

அதேநேரம் பாவம் செய்த விசுவாசியின் நடவடிக்கைகளோ அல்லது அறிக்கையோ நம்பக்கூடியதாக இல்லாமலிருக்குமானால் சபை அந்த விசுவாசியின் அங்கத்துவ சிறப்புரிமைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் (திருவிருந்தில பங்கு கொள்ளுதல், அங்கத்துவக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் போன்றவையே அவை). அதே நேரம் இத்தகைய பாவங்களைச் செய்த மனிதன் மூப்பராகவோ, போதகராகவோ, உதவியாளராகவோ அல்லது ஏதாவது கிறிஸ்தவ ஊழியத்தைச் செய்பவராகவோ, சபையில் போதனை செய்பவராகவோ இருந்தால் நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் அந்தப் பொறுப்புக்களில் இருந்து அந்த மனிதர் எல்லோருடைய நன்மைக்காகவும் உடனடியாக நீக்கி வைக்கப்பட வேண்டும்.

மோசமான பாவத்தை செய்து பிடிபட்டவர்களில் ஆரம்பகட்டமான மெய்யான மனந்திரும்புதலுக்கான அடையாளங்கள் தென்பட்டால், அவர்கள் சபை முன் தங்களுடைய பாவங்களுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டு, தங்களைத் திருத்துவதற்கு சபை கொண்டுவரும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவதாக அறிக்கையிட வேண்டும். குடும்பத்தையும், சபையையும் பாதித்து இந்தப்பாவத்தை விசுவாசி செய்திருப்பதால் மெய்யான மனந்திரும்புதல் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்கவும், விசுவாசி திருந்தி வாழவும், சபை நம்பிக்கையோடு சகல உதவிகளையும் செய்வதற்கும் இது அவசியம். அதேநேரம் இவர்கள் ஊழியக்காரர்களாக இருந்தால் அந்தப் பொறுப்புகளில் இருந்து உடனடியாக அகற்றப்படவேண்டும். மனந்திருந்தியதற்கான அடையாளங்கள் இருந்தபோதும் பொறுப்பான ஊழியங்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு இவர்களுக்கு தகுதியில்லை. 1 தீமோத்தேயுவும், தீத்துவும் ஊழியக்காரர்களுக்கான இலக்கணங்களை விபரிக்கும்போது அவர்கள் பிறரால் குற்றம் சாட்டப்படாதவர்களாகவும், மனைவிக்குத் துரோகம் செய்யாதவர்களாகவும், குடும்பத்தை நன்றாக நடத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று போதிக்கின்றன. இந்தப் பாவங்களைச் செய்தவர்கள் மனந்திரும்பி குடும்ப வாழ்க்கையில் சீர்பெற்றாலும், மீண்டும் சபையில் தொடர்ந்து திருந்திய அங்கத்தவர்களாக வாழ்ந்தாலும், அவர்களுக்கு பாலியல் உறவில் பலவீனம் இருப்பதால் ஆத்துமாக்களோடு தொடர்பு கொண்டு அவர்களை வழி நடத்த வேண்டிய மகிமையுள்ள ஊழியத்தை அவர்களுக்குக் கொடுப்பது தகாது. இதை வேதம் கடுமையாக நிராகரிக்கிறது. ஒருவன் மனந்திருந்தி விட்டாலும் மறுபடியும் அந்தப் பாவத்தைத் தொடர்ந்து செய்ய மாட்டான் என்பது நிச்சயமில்லை. மனந்திருந்திவிட்டாலும் அந்த விசுவாசிக்கு எதில் பலவீனமிருக்கிறதோ அதன் பக்கம் தலை காட்டாமல் இருப்பதால் மட்டுமே அவன் திருத்தமான வாழ்க்கையை வாழமுடியும். தாவீதை உதாரணம் காட்டி சிலர் அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பார்கள். தாவீதின் உதாரணத்தை இங்கு பயன்படுத்துவது முறையல்ல. தாவீது தன் பாவத்தின் காரணமாக அனுபவித்த சிட்சைகளை இவர்கள் எண்ணிப்பார்க்க மறந்து விடுகிறார்கள். அவன் பல காலம் அரச பதவியை இழந்து மக்கள் இகழக்கூடிய வாழ்க்கை வாழ்ந்ததையும், வாழ்நாள் பூராவும் அமைதியில்லாமல் போரில் ஈடுபட வேண்டியிருந்ததையும் மறந்துவிடுகிறார்கள். பாவத்தின் காரணமாகப் பிறந்த அவனுடைய குழந்தையும் இறந்தது.

இதுபற்றி பெரும் பிரசங்கியான ஸ்பர்ஜன் பின்வருமாறு சொல்லுகிறார், “மோசமான பாவங்களைச் செய்த ஊழியக்காரர்களைப் பற்றி நான் கடுமையான எண்ணங்களைக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மனந்திருந்தி சபைக்குள் மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்படுவார்களானால் அதற்காக நான் மிகவும் ஆனந்தமடைவேன். ஆனால், மோசமான பாவங்களைச் செய்த அத்தகைய மனிதர்கள் மறுபடியும் பிரசங்க மேடைக்கு பிரசங்கிக்கப்போவதை நான் மிகவும் எதிர்க்கிறேன். வெளிப்படையான ஒழுக்கக்கேடான நடத்தையுள்ள மனிதன் மெய்யாகவே ஆழமான மனந்திரும்புதலைக் கொண்டிருந்தாலும் அந்த மனிதனுடைய வாழ்க்கையில் ஊழியத்திற்கு இனி இடமில்லை. ஊழியத்திற்கு வருகிறவர்களைப் பற்றி எந்தவிதமான ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றச்சாட்டுகளும் இருக்கக்கூடாது.” இது மகா பிரசங்கியான ஸ்பர்ஜன் சொன்னது. இதன் அடிப்படையிலே சமகாலத்துப் போதகரான ஜோன் ஆர்ம்ஸ்ட்ரோங் (John Armstrong, USA) ஒரு நூலை எழுதியிருக்கிறார். அந்த

நூலில் மோசமான பாவங்களைச் செய்தவர்கள், எத்தனை தூரம் மனந்திருந்தினாலும் ஏன், ஊழியத்தில் தொடர்ந்தும் இருக்கக்கூடாது என்பதற்கான ஒன்பது காரணங்களைச் சுட்டிக் காட்டுகிறார். அத்தோடு, ஆம்ஸ்ட்ரோங், "பாலியல் ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்து அகப்பட்டுத் திருந்திய போதகர்களை மறுபடியும் ஊழியத்துக்கு அழைப்பது என்ற தற்கால வழக்கத்தை கிறிஸ்தவ வரலாற்றிலேயே காணமுடியாது" என்றும் கூறுகிறார்.

## மூன்றாம் கட்டம்:

கேடான பாவத்தைச் செய்த ஊழியக்காரர் தனது மனந்திரும்புதலுக்கு அடையாளமான நடவடிக்கைகளோடு, சபைமுன் பாவ அறிக்கையும் கொடுத்து விட்டார் என்று வைத்துக்கொள்வோம். அந்த மனந்திரும்புதல் வேதம் போதிப்பதுபோல் மெய்யானதாக இருக்கவும், அவர் திருந்தி வாழவும் தேவையான உதவிகளை சபை செய்ய வேண்டியது அவசியம். அது ஒரு வாரத்திலோ, ஒரு வருடத்திலோ நடந்து விடுகிற காரியமில்லை. பாவம் செய்து திருந்தியவரைத்தவிர சபையும் அந்த மனிதரின் குடும்பமும், நண்பர்களும் கூட இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரோடும் மீண்டும் சரியான உறவை ஏற்படுத்தி நல்வாழ்வு வாழ்வதென்பது எக்ஸ்பிரஸ் வேகத்தில் நடந்துவிடுகிற ஒரு காரியமல்ல. இதற்கெல்லாம் உதவுமுகமாக சபை அவருக்கு கைகொடுத்து ஜெபிக்கவும், வழிநடத்தவும் வேண்டும்.

பாலியல் பாவங்களைச் செய்த விசுவாசிகளுக்கு அதற்குப் பிறகும் சோதனைகள் ஏற்படலாம். அவர்கள் நல்ல சிந்தனைகளைக் கொண்டிருக்கவும், ஒழுக்கமான வாழ்க்கை வாழவும் அதிக பிரயாசை எடுக்க வேண்டியது அவசியம். இரகசியமாக ஒருவருக்கும் தெரியாமல் இருதயத்தில் ஊறிப்போயிருக்கும் பாவ சிந்தனைகளையும், பாவத்தை நாடிப்போகும் இருதயத்தையும் கட்டிப்போடுவதென்பது இலேசான காரியமல்ல. தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டு அழிந்தவர்கள் தனிமையில் ஒருபோதும் இன்னொருவரோடு காலத்தைச் செலவழிப்பதைத் தவிர்க்க வேண்டும். பெண்களோடு ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபட்டவர்கள் பெண்களோடு சகஜமாக பழகுவதையும், தனிமையில் அவர்களோடு இருப்பதையும் எக்காலத்துக்கும் தவிர்க்க வேண்டும். மன்னிப்புக் கேட்டுவிட்டால் மட்டும் போதும், பாவம் தன்னால் காற்றில் பறந்து போய்விடும் என்று கனவு காண்கிறவர்களே இன்று விழுந்துபோன பலர் தொடர்ந்து அந்தப் பாவங்களைச் செய்வதற்குக் காரணமாக இருந்துவிடுகின்றார்கள். இதனால்தான், ஜிம்மி சுவகர்ட்டும், ஜிம் பேக்கரும் இன்று மறுபடியும் ஊழியத்துக்கு கல்லான இருதயத்தோடு திரும்பவும் வந்திருக்கிறார்கள். பாலியல் பாவங்களைச் செய்தவர்களுக்கு அவற்றை விட்டுவிடுவது என்பது இலகுவான காரியமல்ல. அதனால்தான் சபை, முறையான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்து திருந்துவதற்கான அடையாளங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு தொடர்ந்தும் ஊழியத்தைக் கொடுத்துக் கெடுத்துவிடாமல் அவர்கள் திருத்தமான வாழ்க்கை நடத்துமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜோன் ஆம்ஸ்ட்ரோங் (John Armstrong) சொல்லுகிறார், "கிறிஸ்து தன் சபையின்மேல் வைத்திருக்கும் அன்பையே பாவம் எப்போதும் தாக்குகிறது. கிறிஸ்து தன் சபைக்குக் கணவனாக இருந்து போஷிப்பதுபோல ஒவ்வொரு கணவனும் தன் மனைவியைப் போஷித்துப் பாதுகாக்க வேண்டும். கிறிஸ்துவின் உதாரணத்தைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் அதைத் துச்சமாக

(48-ம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 70 ஆறாவது கட்டளை என்ன?*

*பதில்: கொலை செய்யாதிருப்பாயாக என்பது ஆறாவது கட்டளையாகும்.*

*(யாத்திராகமம் 20:13)*

*கேள்வி: 71 ஆறாவது கட்டளை மூலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?*

*பதில்: நமது சொந்த வாழ்க்கையையும், மற்றவர்களுடைய வாழ்க்கையையும் பாதுகாக்க நியாயமான அனைத்து முயற்சிகளிலும் நாம் ஈடுபடவேண்டுமென்று ஆறாவது கட்டளை எதிர்பார்க்கிறது.*

*(எபேசியர் 5:28-29; சங்கீதம் 82:3-4; யோபு 29:13; 1 இராஜாக்கள் 18:4)*

*கேள்வி: 72 ஆறாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: நாம் நமது உயிரை மாய்த்துக் கொள்வதையும், மற்றவர்களின் உயிரை அநியாயமாக எடுத்துப்போடுவதையும் அல்லது அப்படிச் செய்வதற்கேதுவான எந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் ஆறாவது கட்டளை தடை செய்கிறது.*

*(அப்போஸ்தலர் 16:28; ஆதியாகமம் 9:6; லேவியர் 19:17; நீதிமொழிகள் 24:11-12)*

**விளக்கக்குறிப்பு:** *இந்த கட்டளையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் முதலில் மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான் என்ற உண்மையை நாம் நினைவில் கொள்ளுதல் அவசியம். தேவ சாயலில் நாம் படைக்கப்பட்டிருப்பதால்தான் எந்த மனிதனையும் கொலை செய்வது ஆகாது.*

**விலங்குகளைக் கொல்லுவது கொலையாகாது** - *கொலை செய்வது ஏன் ஆகாது என்பதற்கான பின்வரும் காரணங்களை நான் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். (1) வேதம் மனிதனைக் கொலை செய்வதற்கும் விலங்குகளைக் கொல்லுவதற்கும் இடையில் பெரும் வேறுபாட்டைக் காண்கிறது. விலங்குகளைக் கொல்லுவதை வேதம் கொலையாகக் கருதவில்லை. நோவாவின் காலத்தில் வெள்ளத்தால் உலகம் அழிக்கப்படுவதற்கு முன்பு கர்த்தர் மனிதனுக்கு விலங்குகளை உணவாகக் கொடுக்கவில்லை (ஆதியாகமம் 1:30; 9:3). ஆனால், அதற்குப்பின்பு விலங்குகளை உணவாகக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. மனிதனுடைய (பாவத்தால்) வீழ்ச்சிக்குப் பின்பே விலங்குகளை உணவாகக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. இது மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக விலங்குகளைக் கொல்லுவது கொலையல்ல என்பதை விளக்குவதாயிருக்கிறது. (2) அத்தோடு, ஆபேலைக் காயின் கொன்றபோது (ஆதி. 4:8) ஆபேலின் இரத்தம் நிலத்தில் இருந்து காயினுடைய வஞ்சத்திற்காக கதறியது (ஆதி. 4:10). ஆயினும், காயினும் தேவ சாயலில் படைக்கப்பட்டிருந்ததால் எந்த ஒரு மனிதனும் அவனைக் கொலை செய்வதற்கு அனுமதியிருக்கவில்லை (ஆதி. 4:15). (3) வெள்ளத்தால் உலகம் அழிக்கப்பட்ட பின்பு, கொலைகாரர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளை பிறப்பித்ததற்கு மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டிருந்ததே காரணமாயிருந்தது. தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கும் மனிதனை அநியாயமாகக் கொலை செய்வது பாதகமானது என்ற சத்தியத்தை நாம் இவற்றின் மூலம்*

விளங்கிக் கொள்ளுகிறோம்.

**இன்னொரு மனிதனுடைய உயிரை எடுப்பதை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாம் கொலையாகக் கருத முடியாது** - கர்த்தர் பத்துக் கட்டளைகளை மோசேக்கு கொடுத்தபோது அவைபற்றி விளக்கமளிக்கும் நூல்களான யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய வேத நூல்களையும் அளித்தார். இந்த நூல்கள், ஆறாவது கட்டளையை நாம் பின்பற்ற வேண்டுமானால் சில சமயங்களில் இன்னொரு மனிதனுடைய உயிரைப்பறிக்க வேண்டி நேரிடும் என்று விளக்குகின்றன. உதாரணத்திற்கு, "திருடன் கன்னமிடுகையில் கண்டு பிடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டுச் செத்தால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமராது" என்று கூறுகிறது (யாத்தி. 22:2). அதாவது, திருடன் நம் வீட்டில் புகுந்து கொள்ளையிட வந்தால், நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் காப்பதற்காக தற்காப்பு முயற்சியில் நாம் ஈடுபடுவது அவசியம். அந்த சமயத்தில் திருடன் உயிரிழக்க நேரிட்டால் அது கொலையல்ல. திருடனே அத்தகைய நிலமைக்குக் காரணமாக இருந்திருக்கிறான். இந்தவிதி நாடுகளுக்கும் பொருந்தும். இதுபோல்தான், ஒரு அராஜக நாடு நம்நாட்டின் மீது படையெடுத்து நம்மை அழிக்க முனைந்தால், அந்நாட்டிற்கெதிராக தற்காப்பிற்காகப் போர் செய்வது நியாயமானதே (ரோமர் 13:1-7). அரசு "பட்டயத்தை விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியை செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே" என்கிறது வேதம் (ரோமர் 13:4). கிறிஸ்தவர்களில் சிலர் எந்தச் சந்தர்ப்பத்திலும் போர் கூடாது என்று கூறுவார்கள். வரலாற்றில் அனாபாப்திஸ்துகள் (Anabaptists) இத்தகைய தவறான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். ஒரு கிறிஸ்தவன் தன் நாட்டின் இராணுவத்தில் பணி புரிவதையும், நாட்டின் தற்காப்புக்காக போரில் ஈடுபடுவதையும் வேதம் அனுமதிக்கிறது. அவ்வாறு பணிசெய்யும் கிறிஸ்தவன் தனிநபராக செயல்படாமல் நாட்டின் பிரதிநிதியாக பணிசெய்கிறான். இதற்காக கர்த்தரே அரசாங்கங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த அதிகாரத்தை நீதியான முறையில் பயன்படுத்தாத அரசாங்கங்கள் ஆறாம் கட்டளையை மீறுகின்றன. குற்றமற்றவர்களின் பாதுகாப்புக்காக கொலைவெறியர்களைத் தண்டிக்க மறுக்கும் அரசுகள் தங்கள் நாட்டு மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க முடியாது. குவெயிட் நாட்டின் மீது போர்தொடுத்த ஈராக்கை அமெரிக்கா தண்டித்தது நியாயமானதே. அதேபோல் இன்று அராஜக அரசு நடத்தி உலக மக்களுக்கு எதிராக அராஜகத்தைத் தூண்டுகின்ற ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் போர் தொடுத்து அந்த அரசை பதவி விலகச் செய்ய முயல்வதும் நியாமானதே. இதை ஆறாம் கட்டளை அனுமதிக்கின்றது.

வேறு சிலர் மரண தண்டனை கூடாது என்று சொல்லுவார்கள். அதற்காக அவர்கள் Pragmatism அடிப்படையில் அமைந்த காரணங்களையே கூறுவார்கள். கொலைகாரன் என்று குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டவனுக்கு அளிக்கப்படுவதே மரண தண்டனை. வேதம் மரண தண்டனை அளிப்பதை வலியுறுத்துகிறது (ஆதி. 9:6). ஒரு கொலை இன்னொரு கொலையை நியாயப்படுத்தாது என்று கூறுபவர்களுக்கு கொலை என்றால் என்ன என்பது புரியவில்லை. அநியாயமாக ஒருவனுடைய உயிரைப் பறிக்கிறவனே கொலைகாரன். கொலைகாரனுடைய உயிரைப் பறிக்கிற அரசு கொலை செய்யவில்லை. அது கர்த்தரளித்துள்ள அதிகாரத்தின்படி கொலைகாரனுக்கு நீதியான

தண்டனையை அளித்து தன்னுடைய கடமையையே செய்கிறது. கொலைகாரனுக்கு மரண தண்டனை அளிக்க மறுக்கும் அரசு தன்னுடைய மக்களுக்கு பாதுகாப்பு தர மறுப்பதுடன், கொலைகாரன் மீண்டும் கொலை செய்வதற்கு சுதந்திரமளிக்கிறது.

இந்த ஆறாவது கட்டளை கொலையைப் பற்றி மட்டும் பேசாமல், உயிர்ப் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி-யும், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் தவிர்க்கும்படியும் போதிக்கின்றது. உதாரணத்திற்கு, நம் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எந்தவிதமான விளையாட்டுக்களிலும் ஈடுபடக்கூடாது. சில நாடுகளில் காணப்படும் முரட்டுக்காளைகளைப் பிடிக்கும் விளையாட்டு உயிராபத்தை ஏற்படுத்துவதாகும். அத்தகைய முரட்டுத்தனமான, மரணத்தோடு விளையாடும் விளையாட்டுக்களை தவிர்க்க வேண்டும் என்கிறது இந்தக்-கட்டளை. அது மட்டுமல்லாது, பிறருடைய உயிர் பாதுகாப்பிற்கான நட-வடிக்கைகளையும் நாம் எடுக்க வேண்டும். கத்தியோடு விளையாடிக்-கொண்டிருக்கும் சிறு பிள்ளையின் கையிலிருந்து கத்தியைப் பிடுங்கி வைக்க வேண்டியது நமது கடமை. வாகனத்தில் போகும்போது சீட் பெல்ட்டை அணிவது நமது உயிருக்கு பாதுகாப்பு தரும் நடவடிக்கை. குடித்துவிட்டு வாகனமோட்டாமல் இருப்பது நமது உயிருக்கும் பிறருடைய உயிருக்கும் பாதுகாப்பளிக்கும் நடவடிக்கையாகும். இப்படி இன்னும் எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம்.

பத்துக்கட்டளைக்கு மேலாக இன்னும் பல கட்டளைகளை ஏற்படுத்த வேண்டும் என்று பல கிறிஸ்தவர்கள் சிந்திப்பார்கள். அதன் மூலம் கிறிஸ்தவர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வசதியேற்படுத்திக் கொடுக்கலாம் என்பது அவர்களுடைய எண்ணம். ஆனால், பத்துக் கட்டளைகளுக்கு மேலாக வேறு கட்டளைகள் தேவையாக இருப்பதாக கர்த்தர் எண்ணவில்லை. நமக்குத் தேவையான அனைத்தையும் பத்துக் கட்டளைகள் கொண்டிருக்கின்றன. உதாரணத்திறகு, இந்த ஆறாவது கட்டளை நாம் அளவோடு எதையும் அனுபவித்து வாழ வேண்டும் என்று போதிக்கின்றது. அளவுக்கு மீறி எதையும் அனுபவிப்பது கர்த்தரை மகிமைப்படுத்துகிற காரியமாயிருக்காது. ஆகவே, கிறிஸ்தவன் தன்னை எப்போதும் கட்டுப்படுத்தி வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அது அவனுடைய கடமை. பவுல், தனக்கு எல்லாவற்றையும் அனுபவிப்பதற்கு உரிமை இருந்தபோதும் அத்தனையும் தனக்கு நன்மை-யானதாக இருக்காது என்று கூறியிருக்கிறார். ஆகவே, கிறிஸ்தவன் நீதியாக தான் அனுபவிக்கக்கூடிய காரியங்களைக்கூட சில வேளைகளில் கிறிஸ்துவின் மகிமைக்காக தள்ளிவைக்க வேண்டியிருக்கும். அதேவேளை தான் அனுபவிக்-கக் கூடிய அனைத்தையும் கட்டுப்பாட்டுடன் அனுபவிக்க வேண்டும்.

இந்தக் கட்டளை, நாம் நமது அயலானுக்கு துன்பமேற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்று மட்டும் கூறாமல், அவனுக்கு நன்மையளிக்கும் காரியங்களை-யும் செய்ய வேண்டும் என்கிறது. அயலானை நேசிக்க வேண்டியது நமது கடமை. கிறிஸ்துவின் அன்பை அவன் அறிந்து கொள்வதைப் போன்ற பெரிய நன்மை வேறொன்றில்லை. ஆகவே, கிறிஸ்துவின் அன்பை அவர்கள் அறிந்து தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெற நாம் அவர்களுக்கு துணை செய்தல் அவசியம்.

# சிந்தனை வளர வாசிப்பு அவசியம்

வாசிப்பின் அவசியத்தைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏன் என்று கேட்கிறீர்களா? இன்று பெரும்பாலான தமிழ் கிறிஸ்தவர்களிடம் வாசிக்கும் பழக்கம் இல்லாமலிருக்கும் காரணத்தினால்தான். இது என் மனதில் நானே வளர்த்துக் கொண்டிருக்கும் கற்பனை என்று எண்ணி விடாதீர்கள். இதை ஒத்துக்கொண்ட அநேக கிறிஸ்தவர்களை நான் சந்தித்திருக்கிறேன். நம்மக்களுக்கு வாசிக்கும் பழக்கம் ஏன் இல்லாமலிருக்கிறது என்று ஆழமாக சிந்தித்துப்பார்த்தேன். அதற்கான காரணத்தையும் தெரிந்து கொண்டேன். நம்முடைய பெற்றோர் நாம் படிக்க வேண்டும், நல்ல வேலையில் சேர வேண்டும் என்று ஆசைப்படுவது சகஜம். முழுநேரமும் கல்லூரிப்படிக்கு உதவும் நூல்களை நாம் வாசிப்பதை அவர்கள் பார்க்க ஆசைப்படுவார்கள். டியூஷனுக்குப் போவதையும் ஊக்கப்படுத்துவார்கள். இதையெல்லாம் செய்து நாம் எப்படியாவது பாஸ் செய்து பட்டம் பெற்று வேலைக்குப் போக வேண்டும் என்பதுதான் அவர்களுடைய வாழ்க்கை இலட்சியம். இதனால் அவர்கள் நம்மை எப்போதுமே வேறு எந்தப்புத்தகங்களையும் வாசிக்க உற்சாகப்படுத்துவதில்லை, வாசிக்கவும் விடுவதில்லை. அது வீண் வேலை என்பது அவர்களுடைய எண்ணம்.

என்னையே எடுத்துக்கொள்ளுங்களேன். சிறு வயதில் இருந்தே எனக்கு இலக்கியத்தில் ஈடுபாடிருந்தது. கல்லூரியில்கூட அதை நான் பாடமாக எடுத்திருக்கிறேன். இலக்கிய ஆர்வத்தால் நான் பல நல்ல நூல்களை வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். அதன் விளைவுதான் எனக்கின்றிருக்கும் தமிழறிவு என்று நம்புகிறேன். இலக்கியத்தைப் படித்து நான் நேரத்தை வீணடிப்பதாகத்தான் என் பெற்றோர்கள் நினைத்தார்கள். முடிந்தவரை நான் இலக்கிய நூல்களை வாசிப்பதையும்கூட தடுத்துப் பார்த்தார்கள். அப்போது நான் வாசித்த எல்லாமே பயனுள்ளவை என்று என்னால் சொல்ல முடியாவிட்டாலும் கையில் கிடைத்த நல்ல நூல்களையெல்லாம் வாசித்துத் தள்ளியிருக்கிறேன். இந்த வாசிக்கும் பழக்கம்தான் (வாசித்த புத்தகங்கள் அல்ல) பின்னால் நான் கிறிஸ்துவை அறிந்துகொண்ட பின்பு என்னுடைய இறையறிவுக்கு பெரிதும் உதவியது என்று கூறுவேன். ஆனால், கல்லூரியில் படிக்கும்போது பாடப்புத்தகத்தை மட்டும் வாசித்துப் பாஸ் செய்துவிட்டு அதற்குப்பிறகு நாளிதழ்களில் முதல் பக்கத்தையும், கடைசிப்பக்கத்தையும் மட்டும் படிப்பவர்களாகத்தான் இன்று அநேக தமிழர்கள் இருக்கிறார்கள். போதாததற்கு டெலிவிஷன் கொஞ்சநஞ்சமிருக்கும் வாசிக்கும் ஆர்வத்தையும் இல்லாமல் செய்துவிடுகிறது.

வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளாவிட்டால் மனிதனால் சிந்திக்க முடியாது. அறிவு வளர வாசிப்பு அவசியம். வாசிக்க வாசிக்க மனிதனுடைய சிந்தனை வளரும். ஸ்பர்ஜன் போன்ற பெரிய பிரசங்கிகளைப் பார்த்து நாம் பிரமிப்பது வழக்கம். எத்தனைப் பெரிய பிரசங்கி என்று சொல்லாதவர்கள் இல்லை. ஆனால், வாசிக்கும் பழக்கத்தைத் தன்னில் வளர்த்துக்கொண்டு 12,000

நூல்களை அவர் தன்னுடைய சொந்த நூலகத்தில் வைத்திருந்ததை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஸ்பர்ஜன் வாசிக்காமல் சோம்பேரியாக இருந்து மேதையாகவில்லை. மார்டின் லொயிட் ஜோன்ஸ் (Martyn Lloyd Jones) என்ற வேல்ஸ் தேசத்து பிரசங்கியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் நூல்களை வாசிப்பதில் மிகவும் அக்கறை எடுத்தவர். அவருக்கு வேகமாக வாசிக்கும் பழக்கம் இல்லாமலிருந்தபோதும் பல நூல்களை ஒரே சமயத்தில் வாசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பியூரிட்டன் பெரியோர் எழுதிய நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. எந்தப் பழைய புத்தகக்கடையில் அந்தப் புத்தகங்கள் இருந்தாலும் அவற்றை லொயிட் ஜோன்ஸ் வாங்கி வாசிக்கத் தவறவில்லை. ஸ்பர்ஜனும், மார்டின் லொயிட் ஜோன்ஸும் தங்கள் வாழ்க்கையில் இறையியல் கல்லூரி-களைப் பார்க்கவில்லை. சொந்தப்படிப்பும், இடையறாத வாசிப்புமே அவர்கள் இறையியல் ஞானத்தை வளர்த்துக்கொள்ள உதவியது.

உலகத்தில் கிறிஸ்தவம் தலை நிமிர்ந்து இருந்த காலத்திலெல்லாம் கிறிஸ்தவர்-கள் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். உதாரணமாக 16-ம் நூற்-றாண்டு சீர்திருத்தவாத காலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ரோமன் கத்தோ-லிக்க மதத்தின் கொடூரமான ஆளுகையின் கீழ் இருந்து விடுவிக்கப்பட்ட திருச்சபை வேத சத்தியங்களை விளக்கிப்போதிக்கும் அனேக நூல்களை வெளியிட்டது. லூதரும், கல்வினும் ஏனைய சீர்திருத்தவாதிகளும் அருமையான நூல்களை எழுதி வெளியிட்டு திருச்சபைக்குப் பணி செய்தனர். மக்கள் அவற்றை ஆர்வத்தோடு வாசித்து வளர்ந்தார்கள். இதேபோல 17-ம் நூற்றாண்டு-களில் பியூரிட்டன் போதகர்கள் நூற்றுக்கணக்கில் எழுதி வெளியிட்ட தலை சிறந்த நூல்கள் அக்காலத்தில் கிறிஸ்தவம் எத்தகைய உயர்ந்த, சிறந்த நிலையில் இருந்தது என்பதை விளக்குகின்றன. இந்த இரண்டு காலப்பகுதியிலும் ஆத்து-மாக்கள் வாசிக்கும் பழக்கமுள்ளவர்களாகவும், கிறிஸ்தவ வாழ்க்கையில் சிறந்த நிலையில் இருந்தார்கள் என்பதையும் அறிகிறோம். இக்காலத்தில் வேதத்திற்கு அடுத்தபடியாக அதிகமாக ஆத்துமாக்கள் வாசித்த நூலாக ஜோன் பனியன் எழுதிய மோட்ச பிரயாணம் இருந்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் எழுதப்-பட்ட நூல்களால்தான் இன்றும் நாம் சீர்திருத்தப்போதனைகளை அறிந்து சீர்திருத்த சபைகளை அமைக்க முடிந்திருக்கிறது. விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப் போதனைகளும் இந்தக்காலத்தில்தான் வெளியிடப்பட்டு இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக்காலப்பகுதிகளை வரலாற்றில் இருந்து அகற்றிவிட்டால் இன்றும் கிறிஸ்தவம் இருண்ட காலத்தில்தான் இருந்திருக்கும்.

கிறிஸ்தவர்கள் வாசிக்காமல் இருப்பது கொடுமை. அதிலும் போதகர்களும், ஊழியக்காரர்களும் வாசிக்காமல் இருந்தால் அவர்கள் செய்யும் ஊழியத்தால் பயனடையப் போகிறவர்கள் ஒருவருமே இல்லை. புத்தகம் வாங்கப் பணம் இல்லை என்று கூறி பல ஊழியக்காரர்கள் வாசிப்பதைத் தட்டிக்கழித்து விடுகிறார்கள். மூன்று வேளை சாப்பிடும் பணத்தில் மிச்சம் பிடித்தாவது நல்ல நூல்களை வாங்கி வாசிக்கும் தியாகத்தைச் செய்யத் தெரியாதவர்கள் ஊழியத்தை விட்டு விடுவது நல்லது. வேதத்தையும் அதை விளங்கிக் கொள்ள உதவும் நல்ல நூல்களையும் வாசிக்காவிட்டால் ஆத்துமாக்களுக்கு நாம் உணவூட்ட முடியாது என்பது தெரியாத மனிதர்கள் ஊழியத்துக்கு வருவது பேராபத்து. தமிழ் கிறிஸ்தவ உலகத்தை இன்று பிடித்திருக்கும் தலைவலியே அத்தகைய மனிதர்கள் ஊழியத்தில் அதிகமாக ஈடுபட்டிருப்பதுதான்.

வாசிக்காத கிறிஸ்தவன் விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக வாழ்வான் என்பதை என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. நாம் அன்றாடம் பல தடவை வாசிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் கர்த்தர் நமக்கு வேதத்தை எழுத்தில் தந்திருக்கிறார். வாசிக்கும் வழக்கமோ, அதற்கு நேரமோ இல்லாதவர்கள் வேதத்தைப்படிக்காமல் கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ முடியும்? வேதத்தில் இருக்கும் அநேக சத்தியங்களை முழுமையாக அறிந்து கொள்வதற்கு நாம் அதிக காலம் வேதத்தைப் படிக்க வேண்டும். அத்தோடு வேத சத்தியங்களை விளங்கிக்கொள்ள உதவும் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். அப்படிப் படிக்காவிட்டால் வேத ஞானமில்லாது, கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி குன்றி சபைக்கும், மற்றவர்களுக்கும் எந்தப் பிரயோஜனமுமில்லாது இருந்து விடுவோம். இந்த நிலையிலேயே இன்று அநேக தமிழ் கிறிஸ்தவர்கள் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கென்றே பிறந்ததுபோல் இன்றைக்கு இறைபோதனையே இல்லாது உணர்ச்சிகளுக்கு மட்டும் தூபம் போடும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைகளும் இருக்கின்றன. இது தமிழ் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி குன்றிய தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அத்தோடு இன்று தமிழ் கிறிஸ்தவ புத்தகக்கடைகளில் இருக்கும் நூல்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஏனைய மொழிகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது கிறிஸ்தவ நூல்கள் என்ற பெயரில் தமிழில் இருக்கும் அனேக நூல்கள் சுண்டல் சுற்றிக் கொடுப்பதற்குத்தான் உதவும். அதேவேளை குறைந்தளவிலான நல்ல நூல்களும் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

வாசிக்கும் பழக்கம் இல்லாமல் கிறிஸ்தவன் கிறிஸ்தவனாக வாழ முடியாது என்பதை இதுவரை பார்த்தோம். இன்றுள்ள தமிழ் கிறிஸ்தவர்களை எப்படி இந்தப் பழக்கத்திற்கு உட்படுத்துவது? போதகர்களும், ஊழியக்காரர்களும் முதலில் நல்ல நூல்களை ஆர்வத்தோடு பலமுறை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுடைய போதனைகளில் நீங்கள் வாசித்த நல்ல நூல்களை ஆத்துமாக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அந்த நூல்களின் பெயரையும், எழுதியவரையும் குறிப்பிட்டு அவருடை.ய கருத்துக்களை பிரசங்கத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்வது ஆத்துமாக்களின் ஆர்வத்தைத் தூண்டி அந்த நூல்களை அவர்கள் வாங்கிப் படிக்க வகை செய்யும். அத்தோடு ஒவ்வொரு சபையும் ஒரு நூலகத்தை (Library) வைத்திருக்க வேண்டும். நல்ல ஆவிக்குரிய நூல்களை மக்கள் இரவல் வாங்கி வாசிக்க இது உதவி செய்யும். மேலும், ஒரு புத்தக மேசையை (Book Table) சபையில் வைத்து, குறைந்த விலையில் ஆத்துமாக்கள் அந்தப் புத்தகங்களை சொந்தமாக வாங்கி வாசிக்க உதவி செய்ய வேண்டும். எல்லா நூல்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்து அவை நல்ல பலனளிப்பவையாக இருந்தால் மட்டுமே சபை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். என்னைக் கேட்டால் சீர்திருத்தப் போதனைகளை அளிக்கும் நூல்களைத் தவிர வேறு நூல்களை வாங்கிப் படிக்காமல் இருப்பது நம்முடைய ஆத்மீக வாழ்க்கைக்கு நல்லது. மோசமான போதனைகளை அளிக்கும் நூல்கள் ஆத்துமாக்களின் இருயத்தை நாசமாக்கிவிடும். இன்று தமிழில் நல்ல நூல்கள் முத்துக்களைப் போலத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளன என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இருப்பதையும் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நாமே நம்முடைய ஆத்மீக வளர்ச்சிக்கும், சபை வளர்ச்சிக்கும் எதிரிகளாக இருந்து விடுவோம். “வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்” (மாற்கு 14:13) என்று வேதம் சொல்லுகிறது. வாசிக்காமல் எப்படி சிந்திக்க முடியும்!




திருமறைத்தீபம் பத்திரிகையை ஸ்ரீ லங்காவில் இருந்து வந்த ஒரு சகோதரியிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். அதிலுள்ள செய்திகள் எங்கள் வாழ்க்கைக்குப் பிரயோஜனமுள்ளதாக இருந்தன. வில்லியம் கேரி, ஜோன் பனியன், ஸ்பர்ஜன் போன்ற கிறிஸ்தவ பெரியோர்களைப்பற்றி எழுதுவதும் பயனுள்ளதாக இருக்கின்றன. இவற்றின் மூலம் எத்தனையோ ஆத்துமாக்கள் பயனடைவார்கள். கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன். பத்திரிகையை எனக்கு தொடர்ச்சியாக அனுப்பி வையுங்கள். - *எஸ். ரஞ்சன், ஜேர்மனி*

மலேசியாவில் (கோலாலம்பூர்) ஒரு கிறிஸ்தவ கடையில் இருந்து திருமறைத்தீபத்தைப் பெற்றுக் கொண்டேன். அந்த இதழில் இருந்த ஒவ்வொரு பகுதியும் என்னை மிகவும் கவர்ந்தன. பத்திரிகையின் முன்னைய இதழ்களையும் புதிய இதழ்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள். உங்களுக்காகவும், பத்திரிகை ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறேன். தொடரட்டும் உங்கள் சீர்திருத்த பத்திரிகை ஊழியம். வாழ்க! வளர்க!
- *தேவதாஸ் ரூபி தம்பதிகள், மலேசியா*

நண்பர் ஒருவரிடமிருந்து திருமறைத்தீபம் இதழை வாங்கிப் படித்து மெய்சிலிர்த்துப் போனேன். இன்றைய கால கட்டத்தில் அநேகர் அடிப்படை கிறிஸ்து தர்மத்தினை மறந்தும், அவற்றைப் புறக்கணித்தும், அப்பாவி மக்களின் கண்களைக் குருடாக்கியும் வைத்திருக்கிறார்கள். இப்படியான காலகட்டத்தில் மறைத்துவைக்கப்பட்டுள்ள திருமறையின் உண்மைகளை உலகிற்கு ஒளிகாட்ட உங்கள் தீபப்பணி, அணையாத தீபமாய் உலகில் ஒளி வீசட்டும். உங்கள் பத்திரிகையை எனக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்க வழி செய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். உங்களுடன் தொடர்பு கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனை நன்றியுடன் துதிக்கிறேன்.
- *பிரசன்னா பெர்னான்டோ. ஸ்ரீ லங்கா*

நான் திருமறைத்தீபத்தை ஒரு வருடமாக வாசித்துவருகிறேன். அதன் மூலம் அநேக கருத்துகளையும், வேத உண்மைகளையும் அறிந்து கொண்டேன். நான் ஒரு வேதாகம கல்லூரி மாணவன். பத்திரிகையின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், பரிசுத்தவான்களில் வாழ்க்கை ஆகியவை என்னுடைய கல்லூரிப் படிப்பிலும், வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. நான் வாசித்துள்ள அநேக பத்திரிகைகள், நூல்களைப் பார்க்கிலும் திருமறைத்தீபம் வித்தியாசமானது. சிந்திக்க வைக்கிறது. - *எப். ஜோன் சங்கர், தமிழ் நாடு*

---

**(41-ம் பக்கத் தொடர்ச்சி)**

*எண்ணிக் காலில் போட்டு மிதிப்பவர்களை சபை நடத்த அனுமதித்தால், சபை தன் கணவனாகிய கிறிஸ்து மேல் அன்புகாட்டி, அவருக்கு விசுவாசமாக பரிசுத்தத்தோடு இருக்க வேண்டும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?." ரொபட் மரே மெக்செயின் (Robert Murray M'Cheyne), என்ற ஸ்கொட்லாந்துப் போதகர், "சபை மக்களின் முதன்மையான தேவை அவர்களுடைய போதகரின் வாழ்க்கையில் காணப்படும் அதி உயர்ந்த ஒழுக்கமும் பக்தியும்தான்" என்று கூறியிருக்கிறார். ஆகவே, ஊழியர்களின் ஒழுக்கத்தைக் குறித்த விஷயத்தில் சபை ஒருபோதும் அசட்டையாக இருக்க முடியாது.*

சீர்திருத்த போதனைகளைத் தரும் பின்வரும் நூல்கள்
முதன் முறையாக இப்போது தமிழில்
வெளிவந்திருக்கின்றன.

## 1689 விசுவாச அறிக்கை
(ரூபாய் 70.00)

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்
(ரூபாய் 40.00)

---

## - புதிய வெளியீடுகள் -

செப்டெம்பர் 2002

## பரிசுத்த வேதாகமம்
எழுதியவர்கள்: ஆர். பாலா, ஜோன் ரூத்தர்

மார்ச் 2003

## சீர்திருத்த விசுவாசம்
எழுதியவர்: ஆர். பாலா
(ரூபாய் 65.00)

*Grace Literature, 19. Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

**அட்டைப்பட விளக்கம்:**

அட்டைப்படத்தில் ஸ்ரீ லங்காவின் எழில் மிகு மலையகத்தில் உள்ள தேயிலைத் தோட்டமொன்றில் கொழுந்து பறிக்கும் பெண்ணைப் பார்க்கிறீர்கள். வேலையில் கண்ணாக இருக்கும் இந்தப் பெண்ணைப் போன்ற மலையக மக்களின் உழைப்பால் ஒரு காலத்தில் நாட்டுக்கு 60% வருமானம் வந்தது. நாட்டின் தமிழ் மக்களில் அரைவாசியினர் இந்தப் பகுதிகளில் வாழ்கிறார்கள். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்து ஸ்ரீ லங்காவிற்கு அழைத்து வரப்பட்டவர்களின் வம்சாவழியினரே இந்த மக்கள். நமது ஆர்வமிக்க வாசகர்களில் சிலர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள்.



மலர் 9 | ஏப்பிரல் - ஜீன் 2003 | இதழ் 2

1. எது பிரசங்கம்?

2. பக்தி இயக்கமும் (Pietism), கிறிஸ்தவமும்

3. ஸ்ரீ லங்கா - அமைதி திரும்புமா?

4. ஏரியனும், சபைக் கவுன்சில்களும்

5. அப்போஸ்தல வரம்

6. ஊழியக்காரர்களின் ஒழுக்கக் கேட்டை அசட்டை செய்யலாமா?

7. கிறிஸ்தவ கோட்பாடுகள்

8. சிந்தனை வளர வாசிப்பு அவசியம்

9. எண்ணங்கள்!